
அநு.வை.நா.வின்

# ஒரு காலத்துச் சிறு கதைகள்



அன்புடன் —

அநு. வை. நாவின்

# ஒரு காலத்துச் சிறுகதைகள்


ஆக்கியோனின் அன்பளிப்பு

14-07-03


அநு. வை. நாகராஜன்


தென்மயிலை, தெல்லிப்பழை,

யாழ்ப்பாணம், இலங்கை.

2003

## நூல் தரவு

| | |
|---|---|
| * நூல்... | - அநு. வை. நா'வின் ஒரு காலத்துச் சிறுகதைகள் |
| * ஆக்கியோன்... | - நாகராஜன். அநு. வை. |
| * வெளியீடு... | - **நிரந்தர முகவரி:** வைரமான், ''சங்கராபரணம்'', தென்மயிலை, தெல்லிப்பழை, யாழ்ப்பாணம், இலங்கை.<br>**தற்காலிகம்:** இல. 4-2/4, சீகல் மான்ஷன், 55வது ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு - 06, இலங்கை. |
| * பக்கம்... | - 126 + XVIII |
| * முகப்போவியம் | - 'தவம்', கொழும்பு |
| * அச்சகம் | - நிசான் பிரின்ட்ரஸ், கொழும்பு - 12. |
| * கணனி அச்சுப் பதிவு | - செல்வி. ப. அபிராமி |
| * அச்சுப் பதிவு | - நிசான் பிரின்ட்ரஸ், கொழும்பு -12 |
| * உரிமை... | - ஆக்கியோனுக்கு - பதிவு செய்யப் பெற்றது |
| * விலை.. | - ரூபா 150/= |

**BIBILIOGRAPHICAL DATA**

| | |
|---|---|
| TITLE | - Anu. Vy. Naavin ORU KAALATHTHUCH CHIRU KATHAIKAL |
| LANGUAGE | - Tamil |
| SUBJECT | - Creative Literature - Short Strories |
| AUTHOR | - Nagarajan, Anu. Vy. |
| PUBLISHER | - Vyramaan Veliyeedu, "Sangaraabaranam" Then Mylai, Tellippalai, Jaffna, Sri Lanka. |
| PAGE | - 126 + XVIII |
| PRINTERS | - Nisaan Printers, 64N, Peer Saibo St, Colombo 12. |
| EDITION | - First Edition - Copy Rights Reserved. (Registered) May, 25th 2003 |
| PRICE | - Rs. 150/= |


இந்நூல்,

என்றும் நீங்காக நினைவில்

நிற்கும்

அன்பின் மைத்துனர் நினைவுக்குச்

சமர்ப்பணம்



**அமரர். நாகலிங்கம் சிவஞானலிங்கம்**

**(1939-2000)**

வெளியீடு - 11

# வைரமான் உரை

இந்நூல், எமது பதினோராவது வெளியீடு.

ஈழத்தின் சிறுகதை வரலாற்றில் இஃதோர் ஆவணப் பதிவாகும். குறிப்பாக, 1950 க்கும் 1986 க்கும் இடைப்பட்ட காலத்தில் ஈழத்தின் ஆக்க இலக்கியம் பல கட்டங்களைக் கடந்து இருக்கின்றன.

இதனை இனங் காணக்கூடிய வகையில், இந் நூல் அமைகிறது.

ஈழத்தின் மூத்த எழுத்தாளர், திரு. அநு. வை. நா. அவர்கள் இக்கால கட்டத்தில் எழுதிய சிறுகதைகளுள், பதினொரு கதைகள் இங்கு தொகுக்கப் பெற்றிருக்கின்றன.

ஆக்க இலக்கியத்திற் சுவை கொள்வோருக்கு, இந்நூல் பயனுடையதாக அமையுமென நம்புகிறோம்.

எமது முன்னைய வெளியீடுகளை ஆதரித்து அன்பு செய்த அன்புமிகு வாசகர்கள், இவ்வெளியீட்டினையும் ஆதரிப்பர் என ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

நன்றி.

"சங்கராபரணம்",
தென்மயிலை, தெல்லிப்பழை,
யாழ்ப்பாணம், இலங்கை.
25.05.2003.

# என்னுரை

## அநு. வை. நா'வின் ஒரு காலத்துச் சிறு கதைகள்

சிறுகதை, 'புதுமை இலக்கியம்' எனும் வட்டத்துள் அடங்கும்.

ஆய்வாளர்கள் இலக்கியத்தை 'மரபு இலக்கியம்' (Classical Literature) 'ஆக்க இலக்கியம்' (Creative Literature) என இரு கூறுகளிற் கணிப்பர்.

அந்த வகையில் புதுமையான சிறுகதை, ஆக்க இலக்கியமாக முதன்மை பெறுகிறது.

சிறுகதை 'யாவும் கற்பனை' என்று முத்தாய்ப்பில் இனங் காட்டப்பட்டாலும் யதார்த்தமே அதன் கருவில் உள்ளடங்கி நிற்கும். தீப்பொறி போல் வாசகர்களின் மனதில் பொறி தட்டிச் சுடர் விடும்.

சிறுகதையில் உள்ளடக்கமே அதன் கரு. அதனைச் சொல்லும் பாணியே அதன் வடிவம்.

திருக்குறளைப் போல் ஓரிரு வார்த்தைகளில் - பக்கங்களில் சொல்லும் வடிவமே அது. இதற்கென இறுக்கமான

இலக்கணமும் உண்டு. இதனை மனங் கொண்டே, சிறுகதை ஆய்வாளன் தன் வரையறையை கரு, உள்ளடக்கம், வடிவம், சொல்லும் பாணி (உத்தி), பாத்திரப் படைப்பு, பகைப்புலம் என்றெல்லாம் கூறி, பல அளவு கோல்களை நீட்டி நிமிர்த்தி, வெட்டிக் கொத்தி- உயர்த்தி, தாழ்த்தி ஆய்கிறான். நெடுங் கதைகளிலும் குறுங் கதைகளிலேயே அவனது கண்ணோட்டம் அகலக் கால் பதியும்.

சிறுகதை ஒரு புதுமை இலக்கியமாக 19 ஆம் நூற்றாண்டின் கடைக் கூறில் மேனாட்டில் பர்ணமித்தது.

ஆயினும், இன்று அது உலகளாவி, வியாப்பித்து விளங்குகிறது.

அதன் அடியொற்றி தமிழிலும் சிறுகதை, ஒரு நவீன இலக்கியமாக இன்று நிமிர்ந்து நிற்கிறது.

இலக்கியம் காலத்தின் கண்ணாடி என்பர். இதில், சிறுகதை இலக்கியமே, காலத்தின் அற்புதக் கண்ணாடியாகவும் விளங்குகிறது. தமிழில் சிறுகதை, தமிழ்நாட்டில் உருவானது என ஆய்வாளர் கூறினும், அ்.து ஈழத்திற்றான் முதன் முதலில் முளையிட்டது எனச் சிலர் கூறுகின்றனர். இதற்கு ஆதாரமாக யாழ்ப்பாணத்தவரான ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளையின் சிறுகதையை முன்வைத்துப் பெருமை சேர்க்கின்றனர். இ்.து இன்னும் ஆய்வுக்குரியது. ஈழத்துத் தமிழ் நெஞ்சங்களை ஈர்த்த சிறுகதை, தனது பரிணாம

வளர்ச்சியில் வளர்ந்து தனித்துவமாக வேரூன்றி, இன்று நிமிர்ந்து நிற்கிறது.

கால நீரோட்டத்தில் அது கடந்த ஆண்டுகளில் மூன்று முக்கிய சந்திப்புகளை உள்வாங்கி கால நிர்ணயத்தோடு வரலாறு கண்டு, எதிர்கால எதிர்பார்ப்புகளை எதிர் கொண்டு நிற்கிறது.

இலங்கை, அந்நிய ஆதிக்கத்திலிருந்து சுதந்திரம் பெற்ற நாளுக்கு முன்பின்னான காலத்தில் - அதாவது, 1950 ஆம் ஆண்டுக்கு முந்திய காலத்தில் நமது சிறுகதை வரலாறு கணிக்கப்படுகிறது. இதனை, இதன் 'முதற்கட்டச் சந்திப்பு' என்றுங் கொள்வோம். இக்கட்டத்தின் ஈழத்துச் சிறுகதைகள் பெரும்பாலும், தமிழ் நாட்டுச் சிறுகதைகளையே அடியொற்றி, 'அம்மாமிக் கதைகளாக' - பொழுது போக்குக் 'குசினிக் கதைகளாக' இருந்தன. இதற்கு, கல்கி, கலைமகள், ஆனந்த விகடன் போன்ற தமிழ் நாட்டு வார, மாத சஞ்சிகைகளே களம் அமைத்து, வழி காட்டின.

இங்குள்ள தேசியம் - தமிழ் நாட்டு, குறிப்பாக பாரதத்தின் சுதேசியத்திலேயே தலை தூக்கி நின்றது.

நமது படைப்பாளிகளும் ஆங்கில மொழி மூலம், கல்வி கற்றறிந்தோராகவே இருந்தனர்.

இவர்களின் கதைக் கருக்கள் அநேகமாக அந்நியம் (பாரதச் சமூகம்) தழுவி சுயம்பின்றி இருந்தன.

இதன் பின்னர், தமிழ் நாட்டில் 'மணிக் கொடி' யுகம் சிறு கதைக்கு ஒரு புத்தூக்கம் கொடுத்த வேளையில் ஈழத்திலும் சிறுகதைக்கு 'மறுமலர்ச்சிக் காலம்' மலர்ந்தது. இது எமது 'இரண்டாவது கட்டச' சந்திப்பாகக் கருதப் பெறும்.

இக்கட்டத்தில், உலகளாவிய தரத்துக்கு எமது படைப்புகள் வராவிட்டாலும் அவை எமது 'மண் வாசனையை' மணக்கச் செய்தன. இதில், குறிப்பாக இலங்கையர்கோன், சி. வி. வைத்தியலிங்கம், சம்பந்தன், வரதர் என்போர் நெஞ்சில் நிலைத்து நிற்கும் சிறுகதைகளைப் படைத்தனர். இவை எமது மண்ணின் சமூகத்தையும், பிரதேச செழுமை, மொழி நடை என்பனவற்றையும் தந்தன.

இக்கால கட்டம், 1960 ஆம் ஆண்டு வரை நீடித்தது எனலாம்.

இதனையடுத்தே 'மூன்றாவது கட்ட'மான 'தேசிய இலக்கியக் காலம்' முகிழ்த்தது.

இக்கால கட்டத்தில், இடதுசாரி (மார்க்சீய) அரசியல் விழுமியங்கள் ஈழத்து - சமூக - பொருளாதார - கலாசாரச் சிந்தனைகளும் செயற்பாடுகளும் சார்ந்த இலக்கியங்களில் முகிழ்த்தன. இதன் கருத்தோட்டம் எமது புதுமை இலக்கியங்களிலும் பர்ணமிக்க, 'முற்போக்கு இலக்கியம்', 'நற்போக்கு இலக்கியம்' என்ற பாகப் பிரிவினைகள் எழுந்து பெருஞ் சண்ட மாருதங்களையுஞ் சச்சரவுகளையும் தோற்றுவித்தன. ஆயினும், ஈழத்துத் 'தேசிய இலக்கியம்'

எனறு நம்மை நாமே இனம் காட்டி, சமூகத்தின் அடிமட்ட மக்களின் ஆசாபாசங்கள், மனக் குமுறல்கள் என்பன வற்றுக்கும் ஓர் இலக்கிய அந்தஸ்தைத் தந்ததைக் கண்டோம். இந்நாளில், வர்க்க முரண்பாடுகள், சாதியக் கொடுமைகள், சமூக உயர்வு தாழ்வுகளால் ஏற்படும் பிற்போக்குகள் என்பன வலுவாக இனம் காட்டப்பட்டன.

இக்கால கட்டம், 1985 வரை முழு மூச்சாகக் கிளர்ந்து நின்றது.

இதனையடுத்து, நாட்டில் 'பேரின வாதம்' தலை தூக்க, 'தம்மின வேட்கை' சமூக விழிப்பில் தலையெடுத்தது. குறிப்பாக, வடக்கு, கிழக்கு வாழ் தமிழ்ச் சமூகத்தில் இன வேட்கையே அரசியல், சமூக, பொருளாதார விழுமியங்களிற் குமுறிக் கிளர்ந்தன. இதன் பரப்பில், தமிழ் ஈழச் சமூகம் போர்க்காலச் சூழலில் சிக்கி மோதியது. அது இன்று வரை நசுங்கி நலிகிறது. இதற்கான இலக்கியங்கள் வெளிப்பட்டும், கரந்தும் வாழ்கின்றன.

இச்சூழலின் வெளிப்பாடே, 'புலம் பெயர்' இலக்கியத்தின் தோற்றுவாயாக இருக்கிறது. இதில் இன்றைய 'ஈழத்துத் தமிழின இலக்கியம்' நிலவுகிறது. அஃது ஈழத்திலும் எம்மினத்தார் புலம் பெயர்ந்த நாடுகளிலும் முன்னணியில் நிற்கிறது. இது காலத்தின் தேவையாக இருப்பதோடு எமது இலக்கிய வரலாற்றுக்கும் கால நிர்ணயத்துக்கும் உதவியாகவுள்ளது.

***

இந்தப் பின்னணியில் வாழ்ந்த - வாழுகின்ற யான், 1950 களில் எழுத்துத்துறையில் காலடி எடுத்து வைத்தேன். அன்றைய என் எழுத்துகள் யாவும் சிறுகதைகளைச் சுற்றியே இருந்தன.

அவற்றில் வர்க்க முரண்பாடுகள், சாதியக் கொடுமைகள் என்பனவற்றோடு பொதுவாக சமூகத்தினதும் தனி மனிதனதும் மன அவலங்கள் பற்றியே என் கதைக் கருக்களாக இருந்தன. மேலும், அவை எந்தவொரு அணியையோ அரசியல் பின்னணியையோ சார்ந்து இல்லாமல் தனித்துவமாக நான் வாழும் மாநுட சமூகத்தைப் பகைப் புலமாகக் கொண்டிருந்தன.

1954 முதல் 1993 வரை ஐம்பதுக்கு மேல் இலங்கையின் தேசியப் பத்திரிகைகளிலும், சஞ்சிகை, ஆண்டு மலர்களிலும் எனது சிறு கதைகள் வெளியாகின. இவை ஒன்றும் நூலுருவில் வரவில்லை. காரணம் - இன்றிருக்கும் பதிப்பக வசதியோ, பொருள் வசதியோ எனக்கு அன்று இருக்க வில்லை. ஆயினும், அதற்கான முயற்சியைச் செய்யக் கையெழுத்துப் பிரதிகளையும், பத்திரிகை நறுக்குப் பிரதிகளையும் கோவைப்படுத்தியும், பாதுகாத்தும் வந்தேன். அவற்றையும், எனக்கேற்பட்ட போர்க்கால அநர்த்தங்களாலும் புலப்பெயர்வுகளாலும் இழந்தேன்.

இந்நிலையிலும், 1987 - 88 களில் யான் கொழும்புக்கு வரும் சந்தர்ப்பங்களில், பழஞ்சுவடிகள் காப்பகத்தில் (Archives) சீரில்லாமல் குப்பையாக, தூசி படிந்த பழைய பத்திரிகைக் குவியல்களுக்குள் எனது 14 சிறுகதைகளைக் கண்டெடுத்து, அவற்றைக் கையெழுத்து நகல்களாகப் பிரதி

பண்ணி எடுத்தேன். அவற்றைப் பேராசிரியர் ஒருவரின் மீள் பார்வையுடன் நூலுருவிற் காண எடுத்த முயற்சியும் நிறைவேறவில்லை.

மேற்குறித்த பதினான்கு கதைகளுள் பதினொரு கதைகள் மட்டும் இங்கு நூலுருப் பெறுகின்றன.

இக்கதைகள், கால நிர்ணயத்துக்கு எனது ஓர் ஆவணமாக இருக்கவே வெளிவருகின்றன.

இத்தொகுதிக்கு வரலாற்றுக்குறிப்புக் கொண்ட நல்லதோர் அணிந்துரை தந்து அணிசெய்த என் நெகிழா நட்புக் கொண்டவரும், மூத்த எழுத்தாளருமான 'சிற்பி' - சி. சிவசரவணபவன் அவர்களுக்கு யான் என்றும் நன்றி உள்ளவனாகின்றேன்.

இது, 'வைரமான் வெளியீட்'டின் முதலாவது ஆக்க இலக்கியம். இதற்கு துணை நிற்கும் அனைவருக்கும் யான் என்றும் நன்றி உடையவன் ஆகின்றேன்.

அத்துடன், எனது முன்னைய நூல்களை ஆதரித்து ஏற்ற நன்நெஞ்சங்களை மீண்டும் வழுத்தி, இந்நூலினையும் ஆதரிக்க வேண்டிக் கொள்கிறேன்.

நன்றி

4-2/4 சீகல் மன்ஷன்,
55 வது ஒழுங்கை, வெள்ளவத்தை,
கொழும்பு - 06.
25.05.2003

- **அநு. வை. நா.**

மறுமலர்ச்சிக் கால இலக்கியச் சிற்றிதழான
'கலைச் செல்வி'யின் ஆசிரியரும்
மூத்த எழுத்தாளருமான
**'சிற்பி'** அவர்கள்
வழங்கிய

# அணிந்துரை

"எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம்; பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு; இவற்றினையுடைய காவியம் ஒன்று தற்காலத்திற் செய்து தருவோன் நமது தாய் மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான",

என்பது தமிழ் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட மாகாகவி பாரதியின் கருத்து.

"பாட்டுத் திறத்தாலேயே இவ்வையகத்தைப் பாலித்திட வேண்டும்,"

எனப் பராசக்தியிடம் வேண்டிய கவிஞனும் பாரதியே.

தன் காலத்திய சமூகத்திலே பெரும்பான்மையாக இருந்த பாமர மக்கள் - அதிகம் படிக்காத சாதாரண மக்கள், இலக்கியத்தைப் படித்து இரசிக்க வேண்டும்; தம் வாழ்க்கையைச் செம்மைப்படுத்த வேண்டும் என்ற பாரதியின் நோக்கத்தை இக்கூற்றுகள் பிரதிபலிக்கின்றன.

இலக்கியம் யாருக்காக? எதற்காக? என்ற வினாக்களுக்கும் பாரதி கூறும் விடைகளாகவும் இவை அமைந்துள்ளன. இலக்கியம், கவிதை உருவிலேயே ஆக்கப்படல் வேண்டும் என்ற நிலை இப்போது இல்லை. உரை நடையில் எழுதப்படும் நாவல் என்ற புதினம், சிறுகதை என்பன இலக்கிய வடிவங்களாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

அதிக எண்ணிக்கையிலான பொது மக்கள் விரும்பி வாசிக்கும் இலக்கிய வடிவங்களுட் சிறுகதைக்குச் சிறப்பிடமுண்டு. நன்கு ஆக்கப்பட்ட, கலாபூர்வமாகப் புனையப்பட்ட சிறுகதைகள் வாசகர்களை விரைவிற் கவர்கின்றன. நல்லவை எனத் தாம் நம்பும் சிந்தனைகளை – உணர்வுகளை வாசகர்களிடம் கிளர்ந்தெழச் செய்ய விரும்பும் எழுத்தாளர்களுட் பலர் சிறுகதை வடிவத்தைத் தம் கருவியாக்குகின்றனர். சிறுகதைகளினதும் சிறுகதை எழுத்தாளர்களினதும் எண்ணிக்கை அதிகரித்து வருவதற்கு இதையும் ஒரு காரணமாகக் கொள்ளலாம்.

தமிழ்ச் சிறுகதை வளர்ச்சிக்கு இலங்கை எழுத்தாளர்கள் கணிசமான பங்களிப்பைச் செய்துள்ளனர். உலகின் மிகப் பழைய மொழிகளுள் ஒன்றான தமிழிலே கதைகள், நெடுங்கதைகள் என்பன நீண்ட காலமாகவே இருந்து வருகின்றன. எனினும், இப்போது நாம் கையாளும் நவீன சிறுகதை வடிவம் மேனாட்டுக்கு உரியது என்பதே இலக்கிய விமர்சகர்கள், இலக்கிய ஆராய்ச்சியாளர்கள் போன்றோரின் கருத்தாகும்.

தமிழில், நவீன சிறுகதை வடிவத்தின் முன்னோடி யாழ்ப்பாணத்தவரான ஆர்ணல்ட் சதாசிவம்பிள்ளை அவர்களே என்பதற்காக ஈழத்தவர்கள் நிச்சயம் பெருமைப்படலாம். தமிழ்ச் சிறுகதை வரலாறு சம்பந்தமான தமது நூலிலே ஆதாரபூர்வமாக இத்தகவலை வெளியிட்டுள்ள சோ.சிவபாதசுந்தரம், சிட்டி ஆகியோர் இலக்கிய உள்ளங்களின் பாராட்டுக்கும் நன்றிக்கும் உரியவர்கள்.

ஆர்ணல்ட் சதாசிவம்பிள்ளை தொடக்கி வைத்த சிறுகதை எழுத்தாளர் பரம்பரை நீண்டு கொண்டே போகின்றது. "ஒரு காலத்துச் சிறுகதைகள்" என்ற இந்தச் சிறுகதைத் தொகுதியின் ஆசிரியரான அநு.வை.நாகராஜன் (அநு.வை.நா), நீண்டு செல்லும் அப்பரம்பரையில் குறிப்பிடத்தக்க ஒருவர். 1954 ஆம் ஆண்டு தொடக்கம் அவர் எழுதிய ஐம்பதுக்கும் மேற்பட்ட சிறுகதைகளுள் பதினொரு சிறுகதைகள் இந்தத் தொகுதியில் இடம் பெற்றுள்ளன.

தொகுதியின் முதற் சிறுகதையான "அபலையின் கடிதம்" 1955 ஆம் ஆண்டிலும் இறுதிக் கதையான "துரோகங்கள் எப்பொழுதும் நியாயப்படுவதில்லை" 1986 இலும் எழுதப்பட்டன.

கதைகள் அனைத்தும் நமது நாட்டைக் களமாகக் கொண்டவை. கதை மாந்தர்கள் நாம் பார்க்கின்ற - சந்திக்கின்ற - நம் மத்தியில் உலாவுகின்ற மக்கள்; மண்ணின் மைந்தர்கள்; பெரும்பாலானவர்கள்

ஏழைகள்; வஞ்சிக்கப்படடவர்கள். ஆனால், வாழத் துடிப்பார்கள். இவர்களின் பிரச்சினைகளை, ஏக்கங்களை, ஆசைகளை ஆழமாக நோக்குகின்றார், ஆசிரியர். ஆவலைத் தூண்டும் சம்பவக் கோணங்களுக்குள் அவற்றைப் பொதிந்து, அவை பற்றி ஆநுதாபத்துடன் சிந்திப்பதற்கு வாசகர்களையும் தூண்டுகின்றார்.

ஆகவே பல்லாண்டுகளுக்கு முன்னரே இதே நோக்கங்களுடன் செயற்பட்ட 'ஈழகேசரி', 'மறுமலர்ச்சி', 'சுதந்திரன்', 'கலைச்செல்வி', எழுத்தாளர்கள், அவர்களுக்கு முன்னரும் சமகாலத்திலும் எழுத்துப்பணி புரிந்த ஏனைய எழுத்தாளர்கள், ஆகியோரின் இலட்சியங்களை மேலும் முன்னெடுத்து செல்பவர்களுள் ஒருவராகவும் அநு. வை. நாகராஜன் திகழ்ந்தார் எனலாம்.

காடு கெடுத்து நாடாக்கி, கமத் தொழில் செய்து கண்ணியமாக வாழ விரும்பும் ஏழை மக்களின் - குடியேற்றத் திட்ட வாசிகளின் - வாழ்க்கைப் போக்கை, அவர்கள் எதிர்கொள்ளும் அவலங்களை "சுரண்டலின் நிழல்கள்" விளக்குகிறது. உடலை வருத்தி வயலில் உழைக்கும் மாரிமுத்து, உளப்பூரிப்புடன் அறுவடை செய்த நெல்லை, 'தவிச்ச முயல் அடிக்கும்' பண முதலாளிகளின் இரக்கமற்ற நிபந்தனைகளால் தன் வீட்டுக்கு கொண்டு செல்ல முடியாதிருக்கும் ஏமாற்றத்தையும் ஏக்கத்தையும் கதை நன்கு உணர்த்துகின்றது.

சலவைத் தொழிற்கூடத்தின் உரிமையாளரான தன் கணவனை, அநியாயமாகப் பறிகொடுத்த மனைவி செல்லி, தன் பிள்ளைகள் நால்வரையும் வளர்த்து ஆளாக்க வேண்டும் என்ற ஓர்மத்துடன் தானே தொழிலாளி ஆகின்றாள்; கணவன் உருவாக்கிய 'லோன்டரி'யின் முதலாளியாக மாறிவிட்ட அம்பலம் என்பவனின் 'சேட்டை' களுக்கு இடங்கொடாத உறுதியுடன் தன் தொழிலைச் செய்கின்றாள். சலவைத் தொழிலாளர்கள் சிலரின் குடும்பங்களிலே சர்வ சாதாரணமாகக் காணப்படும் ஒரு வழக்கத்தின்படி, அவளுடைய மகள் பொன்னி செய்த ஒரு செயல், 'கையும் மெய்யும்' ஆகப் பிடிபட்ட உணர்ச்சியைத் தன் மகளுக்கு அவள் வழங்கும் தண்டனை விபரீதமாக முடிவதை, "வினையடி நானுனக்கு" என்ற கதையில், நெஞ்சைத் தொடும் வகையில் ஆசிரியர் கூறுகின்றார்.

"அபலையின் கடிதம்", "ஒரு பிடி மண்", "நாமும் ஈன்றிருக்கிறோம்", "ஒரு புல்லாங்குழல் ஊமையாகிவிட்டது" ஆகிய நான்கு கதைகளும் ஏதோ ஓர் அளவிலே பாலியல் வக்கிரம் சம்பந்தமானவையாக இருப்பினும், தான் சொல்ல விரும்பியவற்றை, ஆபாசம் என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகாத வகையில் ஆசிரியர் சொல்லியுள்ளமை சிறப்பாகக் குறிக்கத் தக்கது.

தாயற்ற இளம் பெண்ணொருத்தி, நோயுற்ற தன் தந்தையைக் காப்பாற்றும் முயற்சியிலே தோல்வியடைவதை உயிராகக் காப்பாற்றி

வரும் தன் கற்பை இழப்பதை அதற்குக் காரணமான காமாந்தகாரப் பெரிய மனஷனைக் கொல்வதை - அதன் விளைவாக மரண தண்டனையை எதிர்நோக்கும் பரிதாபத்தை "அபலையின் கடிதம்" உருக்கமாகச் சொல்லுகிறது.

"ஒரு பிடி மண்"ணின் கதாநாயகி சொல்பவையும் செய்பவையும் ஏற்படுத்துகின்ற வெறுப்பையும் ஆத்திரத்தையும், "தெருவோரத்தையும் உண்டாக்கி, தெருவோர வாசிகளையும் உண்டாக்குபவர்கள் யார்? என் சினம் என்னையே சுட்டிக்காட்டுகின்றது" என்ற இறுதி வரிகள் எம்மை விரட்டி விடுகின்றன. "என்னையே" என்பது உண்மையில், எம் அனைவருமையே - சமூகம் முழுவதையுமே என்று ஆகி, எம்மைச் சிந்திக்க வைக்கின்றது.

உத்தியோக மிடுக்கு, குலப்பெருமை, பணத்திமிர் போன்றவற்றுடன் 'பெரிய மனிதர்களாகத்' தம்மைக் காட்டிக் கொள்ளும் ஒரு குழுமத்தினரின், உள் வீட்டுச் சீரழிவை, "நாமும் ஈன்றிருக்கிறோம் " என்ற கதையிற் பார்க்கும்போது, 'ஒய்யாரக் கொண்டையாம் தாழம் பூவாம் உள்ளே இருக்குமாம் ஈரும் பேணும்' என்ற பழைய கூற்றொன்று நினைவுக்கு வருகின்றது.

"ஒரு புல்லாங்குழல் ஊமையாகி விட்டது" எனும் கதையில் "நான் யார்" என்பதை வெளிப்படையாகத் தெரிவிக்காமல், ஒரே

ஓர் இடத்தில் மட்டும் கோடி காட்டி விட்டுக் கதையைத் தொடர்வது பாராட்டுக்குரியது. வெறும் ஓசையால் நன்மை தீமை பற்றி அறிவித்துக் கொண்டிருக்கும் ஒன்றை, கதை சொல்ல வைத்து., புதுமையைச் சாதித்து விட்டார் ஆசிரியர். "கலா பாவம்" என்பது, கலாவுக்காக அடிக்கடி தெரிவிக்கப்படும் அநுதாபம் மட்டுமல்ல, இந்தக் காலத்து இளம் பெண்களுக்கு விடுக்கப்படும் எச்சரிக்கையுமாகும்.

'இரண்டாந் தாரம், இரண்டாந் தரமாகவே இருப்பாள' என்ற தவறான முடிவினால் தன் குடும்ப வாழ்க்கையையே பாழாக்கும் சலீம் ("இளையாள்" - கதை); பிறப்பிலே உண்டான குறைபாட்டை மற்றையோர் அறியாது மறைப்பதற்காகப் பல்வேறு சம்பவங்களையும் தகவல்களையும் சோடித்துச் சொல்லும ஞானப்பிரகாசம் ("அதுவும் ஒரு பிறவி"' -கதை); ஆலடி வைரவருக்கு விளக்கேற்றுகின்ற பரம்பரை உரிமையை, வேறு எவருக்கும் விட்டுக்கொடுக்காமற் கட்டிக்காத்து வந்த அந்த உரிமையை, தன் 'சிறைக்குடி' ஒருவனுக்குத் தானாகவே வழங்கி, தன்னளவில் ஒரு புரட்சியையே செய்யும் முருகேசர் ("ஒரு சாலை திரும்புகிறது"- கதை) இடையில் ஏற்பட்ட சலனங்களையும் தடுமாற்றங்களையும் தன் உறுதியாற் புறங்கண்டு தன் இலட்சியப் பாதையில் மிடுக்குடன் செல்லும் பெயரில்லாத அந்தத் தாதி ("கவசம்" - கதை) ஆகியோருடன் எம்மைச் சந்திக்க வைக்கும் ஆசிரியர், அவர்களின் ஆசாபாசங்கள், ஏக்கங்கள், ஏமாற்றங்கள் பற்றிச் சிந்திக்கவும் வைக்கின்றார்.

சொல்ல வேண்டியவற்றைச் சுருக்கமாகவும் நெஞ்சிற் பதியும்படியும் சொல்வதில் ஆசிரியர் வல்லவராயிருக்கின்றார்.

"இன்பம் - சுகவாழ்வு என்று ஒன்று இந்தச் சமுதாயத்தில் இருக்கிறது; அதில் நமக்கும் பங்கு இருக்கிறது என்று தெரிந்திருந்தால் தானே., நான் அநுபவித்தது இன்பம் அல்லது துன்பம் என்று பகுத்தறிந்து கொள்வேன்?" (பக்கம்:2)

"வாழ்க்கையில் அடிப்படை வசதி தானும் இல்லாது உழலும் அநாதைகள், வாழ்வில் சறுக்கி விட்டால் அவர்களுக்கு இந்தச் சமுதாயம் என்ன விமோசனம் தரும்? வாழ்க்கையிற் சறுக்கப் போகின்றவர்களைத் தடுத்து நிறுத்த முடியாத, இந்தச் சமுதாயமா, சறுக்கியவர்களைக் காப்பாற்றப் போகின்றது? இல்லை, அவர்கள்தான் சுதந்திரமாக வாழ வாழவிடுமா?" (பக்:11)

"எங்களின்ரை பிள்ளையளுக்கு இது ஒரு பெரிய சாபக்கேடு! தாங்கள் விரும்பியதைத் தங்களின்ரை பெற்றோருக்கு நேரில் சொல்ல முடியாது. இது வெட்கத்தால் அல்ல, அச்சத்தால் தான் வாறது. இந்த விஷயத்தில் பெற்றோரும் மிச்சம் இறுக்கம். பிள்ளையளும் மிச்சம் அமுசடக்கியள். உதாலதான் எத்தினியோ நல்ல விஷயங்கள் எல்லாம் தவிடு பொடியாய்ப் போகுது." (பக்கம் : 107)

சிந்தனையைத் தூண்டும் இத்தகைய வசனங்களை நாம் ஆங்காங்கே காண்கிறோம். சிறுமை கண்டு பொங்குகின்ற – வேடத்தையும்

நடிப்பையும் வெறுத்து ஒதுக்கின்ற – அநியாயத்தையும் அக்கிரமத்தையும் அழித்தொழிக்கின்ற – ஏழைகளுக்காகவும் இயலாதவர்களுக்காகவும் இரங்குகின்ற இந்நூலாசிரியர், – "ஒரு காலத்துச் சிறு கதைகள்" – வாயிலாகச் சமூகத்துக்குச் சொல்லும் கருத்துகள் இக்காலத்துக்கும் பொருத்தமானவை; இன்றியமையாதவை.

மார்கழி மங்கையர், மாணவர் நல்லுரைக் கோவை, தாய்தரும் தாலாட்டு, தேடலும் பதித்தலும், காட்டில் ஒரு வாரம், அவன் பெரியவன், பட்டரின் அபிராமி மான்மியம், சிறுவர் சிந்தனைக் கதைகள் எனப் பல்வேறு 'வகையான' பத்துக்கும் மேற்பட்ட – நூல்களை வெளியிட்டும், 'அன்னை' என்ற இலக்கியச் சஞ்சிகையை (மாத - முத்திங்கள் இதழ்) 1959 – 1963 காலப் பகுதியில் நடத்தியும் ஈழத்து இலக்கிய உலகில் வலம் வருகின்ற, அநு.வை. நாகராஜன் வகிக்கும் சிறப்பிடத்தை, அவருடைய "ஒரு காலத்துச் சிறுகதைகள்" என்ற இந்நூல், மேலும் உறுதிப்படுத்துகின்றது.

அவருடைய எழுத்துப் பணி மேலும் சிறக்க வாழ்த்துகின்றேன்.

– சிற்பி

சி. சிவசரவணபவன்,
கந்தரோடை,
சுன்னாகம்.
03.02.2003.

இதன் உள்ளே....

# கதைகள்


| | | |
|---|---|---|
| 01. அபலையின் கடிதம் | - 'தினகரன்' | - 1955 |
| 02. இளையாள் | - 'சுதந்திரன்' | - 1955 |
| 03. ஒரு பிடி மண் | - 'சுதந்திரன்' | - 1959 |
| 04. வினையடி நானுனக்கு | - 'வீரகேசரி' | - 1961 |
| 05. சுரண்டலின் நிழல்கள் | - 'அன்னை' | - 1961 |
| 06. நாமும் ஈன்றிருக்கிறோம் | - 'சிந்தாமணி' | - 1970 |
| 07. கவசம் | - 'சிந்தாமணி' | - 1970 |
| 08. அதுவும் ஒரு பிறவி | - 'சிந்தாமணி' | - 1970 |
| 09. ஒரு சாலை திரும்புகிறது | - 'சிந்தாமணி' | - 1985 |
| 10. ஒரு புல்லாங்குழல் ஊமையாகி விட்டது | - 'வீரகேசரி' | - 1985 |
| 11. துரோகங்கள் எப்பொழுதும் நியாயப்படுவதில்லை | - ______ | - 1985 |

1

# அபலையின் கடிதம்

ஐயா,

எத்தனையோ கதைகளையும் கடிதங்களையும் நீங்கள் பார்த்திருப்பீர்கள் - படித்திருப்பீர்கள். அவற்றை வாசகர் முன்னிலையில் தங்கள் மதிப்பார்ந்த பத்திரிகை வாயிலாகக் காட்டியும் இருப்பீர்கள். எதற்காக? மனிதன் நல்வாழ்வு வாழத்தானே? அந்த நோக்கில் என் பரிதாப வாழ்வையும் சிறிது பாருங்கள்.

பல நாட்கள் சிறையில் சிக்கிய நான், நாளை நள்ளிரவில் தூக்குக் கயிற்றில் தொங்கப் போகிறேன். அதற்கு முன், என் முடிவின் கடைசிப் படியில் நின்று விடுக்கும் இந்த இறுதி வேண்டுகோளை நிறைவேற்றித் தாருங்கள்.

இது என் கதை. தங்களுக்கு இதில் புதுமை இருக்காது. என்றாலும் உண்மை இருக்கும். இரசனை இல்லாவிட்டாலும் இரக்கம் - அநுதாபம் - சோகம் - கனிவு - இன்னும் பல இருக்கும்.

இனிப் படியுங்கள்.

*   ***   *

சீதள நதிகள் பாய்ந்தோடும் இந்த ஈழவள நாட்டில் தான், நானும் ஈரமில்லாது -காய்ந்து கருவாடாகப் பிறந்தேன். குன்று குன்றாகத் தானியங்கள் விளைந்து பொழியும் இந்தப் புண்ணிய பூமியில் தான், நானும் பசி பட்டினியோடு வளர்ந்தேன்.. ஜீவகாருண்யமும், சகோதரத்துவமும், சமத்துவமும் கொண்ட மானிட வர்க்கத்தில் தான் நானும் வாழ்ந்தேன்.

எனக்கு, வானை முட்டும் மாடி வீடோ, பஞ்சணை மெத்தையோ கிட்டவில்லை. நடை பாதையிலே - சாலை யோரத்திலே சாக்குத் துண்டுகளாலும், கழிவுத் தகரங்களாலும், ஓலைக் கந்தல்களாலும் ஒட்டுப் போட்ட ஓட்டைக் குடிசையில் என்றோ ஒரு நாள், ஒரு தெருவோர மாதுக்கு எப்படியோ பிறந்தேன். பிறந்த நாள் குறித்து, 'பேர்த் டே' கொண்டாட நானென்ன மாடி வீட்டு மகளா? பெற்றவளை, அறியாப் பருவத்திலேயே, நானறியா உலகுக்கு அனுப்பி விட்டேன்.

தாயை இழந்த நான், குருட்டுத் தந்தையுடன் ஏதோ விதமாக வளர்ந்து கொண்டேன். சிறு வயதில் நான் பல கஷ்டங்களுக்குள் உள்ளாகி இருப்பேன். ஆனால் அது எனக்கு உறைக்கவில்லை. அது ஆற்றில் கரைத்த புளியாக இருந்தது. ஏனெனில், இன்பம் - சுகவாழ்வு என்றொன்று இந்தச் சமுதாயத்தில் இருக்கிறது - அதில் நமக்கும் பங்கு இருக்கிறது, என்று தெரிந்து இருந்தால் தானே நான் அநுபவித்தது, இன்பம் அல்லது துன்பம் என்று பகுத்து உணர்ந்து கொள்வேன்?

* *** *

காலை மலரின் இதழ்கள் ஒவ்வொன்றாக மலர்ந்து கொண்டே இருந்தன. பருவ மிடுக்கு, தன் விசித்திர ஜாலங்களை என் மீதும் பாய்ச்சத் தொடங்கியது. நான் ஏழை என்று சொன்னால், அதற்கென்ன விளங்கப் போகிறதா? எனக்கு, நான் அழகியாகத் தெரியா விட்டாலும், காண்போர் கண்ணுக்கு என் இளமைக் கோலங்கள் அதிரூப சுந்தரியாகப் பறை சாற்றிக் கொண்டிருந்தன. இயற்கையை யாரால் அடக்க முடியும்? பருவ மங்கை என்று கூடப் பாராமல், தன் தொழிலுக்கு என்னை மேலும் மேலும் துணையாக்கிக் கொண்டார், என் தந்தை. அவர் தான் என்ன செய்வார்? என்னை ஒரு மூலையில் வைத்து விட்டால், அவருக்கு யார் பிச்சை போடுவார்கள்? அன்று நான், உலகமறியாப் பெண். அந்தப் பருவத்தில் தான், அன்றொரு நாள் அது நடந்தது.

வயதின் கோளாறினாலும், உணவின் திண்டாட்டத்தாலும், கவலையின் துயராலும் என் தந்தை பல நாள்கள் பாயில் படுத்து விட்டார். எங்கள் தொழிலும் நின்று விட்டது. பசியும் பட்டினியும் எம்மைச் சூழ்து கொண்டன.

'அம்மா, செல்லம்... நீ மட்டும் தனியாகப் பிச்சை எடுக்கப் போகாதே!...' என்று எச்சரித்து, எம் பரம்பரைத் தொழிலுக்கு என்னை அனுப்ப மறுத்து விட்டார், என் அருமைத் தந்தையார். அவருக்குத் தெரிந்த இரகசியத்தை அவர் அப்பொழுதே எனக்குச் சொல்லி இருந்தால், இன்று என் நிலைமை வேறாக இருந்திருக்கும். இருந்தும் எத்தனை நாளைக்குத் தான் நோயாலும் பசியாலும் அவர் வாடுவார்? இலவச வைத்தியசாலை கூட இல்லாத அந்த ஊரில், அவரை நான் எங்கு

எடுத்துச் செல்வேன்? அன்று அவருக்குக் கடுமையான காய்ச்சல் . ஈனஸ்வரத்தில் 'செல்லம்!.. செல்லம்!...' என்று அரற்றிக் கொண்டு இருந்தார். டாக்டர் ஒருவர் ஊருக்கு ஐந்து மைல் தொலைவில் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அந்தச் செய்தி எனக்கு அளவில்லாத ஆனந்தத்தைக் கொடுத்தது.

சன்னி வேகத்திற் பிதற்றும் தந்தையைக் கடைசியாக ஒரு தரம் கூர்ந்து பார்த்து விட்டு, வெளியே ஓடினேன். ஓடிய கால்கள் களையாற நடந்தேன். பொழுதும் மங்கிக் கொண்டு இருந்தது. மாலையாவதற்குள் டாக்டரிடம் போய்ச் சேர்ந்து விட்டேன். அவருக்கு என் குறையை எடுத்துச் சொன்னேன். அவர் என்னிடம் முதற் கேள்வியாக "பீஸ்" எவ்வளவு கொண்டு வந்திருக்கிறாய்? உன் வீட்டுக்கு போக என்ன வண்டி கொண்டு வந்து இருக்கிறாய்? 'கார்' இருந்தால் தான் வருவேன்... இல்லா விட்டால் காருக்குத் தகுந்த 'பீஸ்' வேண்டும்!", என்றார்.

'பீஸ்' என்றதும் எனக்குப் 'பகீர்' என்றது.

"ஐயா.. என்னிடம் பணம் இல்லை.. வேணும் எண்டால் அப்பா சொகமானதும், பிச்சை எடுக்கப் போய்.. ரெண்டு நாளைக்குள்ள கொண்டு வந்து தாரன்.. இப்ப என்ரை அப்பா மிச்சம் மோசமாக இருக்கிறார்..." என்று குழந்தை போல் கெஞ்சி இரந்தேன்.

"என்ன!.. நீ பிச்சைக்காரியா?.. ம்... அப்படி எண்டா உனக்கு இது சரிப்படாது... நீ.. போய் விடு!.." என்று ஏளனமாகப் பேசினார், அந்த டாக்டர்.

"பிச்சைக்காரி எண்டு என்னைத் துரத்தாதீங்க ஐயா... உங்களுக்கு கோடி புண்ணியம் கிடைக்கும்... என் அப்பாவைக் காப்பாத்தித் தாருங்க ஐயா..." என்று அழுதழுது கேட்டேன்.

அவர் தொழில் தான் ஜீவ காருண்யமான தொழிலே தவிர அவர் ஜீவ காருண்யர் அல்ல.

"சீ!.. சீ!.. இங்க நிக்காதே!... குறைஞ்சது, இருபத்தைஞ்சு ரூபா ஆகிலும் கொண்டு வந்தாத்தான் வைத்தியம் பாப்பன்... இல்லாட்டி என்னிடத்தில நீ ஒண்டையும் எதிர்பார்க்க முடியாது!..." என்று ஏசி, என்னை வெளியே துரத்தி விட்டுக் கதவைப் பூட்டிக் கொண்டார், அந்தப் புண்ணியசீலர்.

அழுதேன். கதறிக் கதறி ஓலமிட்டேன். யார் காதில் விழுந்தது, என் அவலக் குரல்? அன்று தான் பணத்தின் தரத்தை உணர்ந்தேன். அழுது கொண்டே என் குடிசையை நாடித் திரும்பினேன். நன்றாக இருட்டி விட்டது. அத்துடன் மழையும் பலமாகப் பிடித்துக் கொண்டது. வழியை நோக்கி வேகமாக ஓடினேன். மழையுடன் எதிர்த்து ஓட முடியவில்லை. மழைக்காக ஓர் ஒதுக்கிடம் தேடினேன். சாலை ஓரத்துக்குச் சற்றுத் தள்ளி, ஒரு வீடு இருந்தது. அங்கு போனேன். வீட்டுக்குள் மட்டும் வெளிச்சம் எரிந்து கொண்டு இருந்தது.

"அம்மா... அம்மா..." என்று கதவைத் தட்டினேன்.

"யாரது? .." என்று ஒரு குரல் கேட்டது.

"வெளியில மழை பெய்யுறது... மழை நிக்குமட்டும் கொஞ்சம் இடம் தாரீங்களா?.." என்று கேட்டேன்.

"இது சத்திரம் இல்ல... சாவடியும் இல்ல... அதைத் தேடி வேற எங்காவது போ!" என்று சிறிதும் இரக்கம் இல்லாமல் மீண்டும் அதே பழைய குரல் ஒலித்தது.

"இந்த இடத்தில... வேறு ஒரு இடத்தையும் காண இல்ல... ஐயா ..." என்றேன்.

"இது என்னடா, தரித்திரம்!" என்று இசை பாடிக் கொண்டு ஒருவர் வந்தார். கையில் ஒரு 'டோர்ச் லைற்' இருந்தது. தான் கொண்டு வந்த வெளிச்சத்தை என் முகத்தில் நேராகப் பீச்சி அடித்து, என்னை ஒரு தரம் கூர்ந்து பார்த்தார்.

அவ்வளவு தான்! அவருக்கு என் மீது இரக்கம் பிறந்து விட்டது.

"நீ மட்டுமா?" என்று ஒருமையை நாடினார், அவர்.

"ஆம்" என்றேன்.

"ஏன் தங்கைச்சி... இன்னும் மழையில நனையிற? ... வா...வா... உள்ளே.." என்று குரல் கொடுத்துக் கொண்டு முன்னே சென்றார், அவர். நானும் அவரைத் தொடர்ந்து வீட்டின் ஹோலுக்குள் சென்றேன்.

"என் மனைவி பிரசவத்துக்கு ஊருக்குப் போயிருக்கிறாள்... நானும் வேலைக் காரனும் தான் இருக்கிறம்... இந்தா... இந்தச் சேலையையும் சட்டையையும் உடுத்திக் கொள்..." என்று ஏதேதோ எல்லாம் சொல்லிக் கொண்டு தந்தார்.

"வேண்டாம் ஐயா ... ஈரத்தைப் புழிஞ்சு உடுத்திக்கொள்றன்..." என்று

மறுத்தேன்.

"இல்ல ... தங்கச்சி ... பரவாயில்ல ...நீ உடுத்திக்கோ ..." என்றார் மீண்டும், அவர்.

மேலும் மறுக்க முடியாமல் அதை வாங்கிக் கொண்டேன். கோப்பி கொண்டு வந்து கொடுத்தான், வேலைக்காரன். கோப்பியை வாங்கிக் குடித்தேன். என் வரலாற்றைக் கேட்டார். அதையும் ஒன்றும் விடாமல். பிறந்த நாள் முதல் அன்று பின்னேரம் அங்கு போகும் வரை நடந்த எல்லாத்தையும் ஒளிக்காமல் சொன்னேன். அவரும், 'ஐயோ... பாவம்' என்று தன் அநுதாபத்தைக் காட்டிக் கொண்டார்.

வெளியில் மழை, நீண்டு கொண்டே இருந்தது.

"தங்கச்சி... இண்டைக்கு மழை நிக்காது போல் இருக்குது... விடிஞ்சதும் நீ போ... வேணுமெண்டால் அந்த இரக்கம் இல்லாத டொக்டருக்கு காசும் தாரன்... வாங்கிக் கொண்டு போய் உன்ரை அப்பாவைக் காப்பாத்து... உன்னைப் பார்க்க மிச்சம் கவலயாகக் கிடக்குது..." என்று தனது அநுதாபத்தை வார்த்தைகளால் காட்டி என்னைக் குளிரச் செய்தார், அவர்.

'கரும்பு தின்னக் கூலியா வேண்டும்?' நானும் அவரை நம்பினேன்.

பின்பு, அவர் ஒரு வெற்றிப் புன்னகையுடன் "அந்த அறைக்குள் படுத்துக் கொள்" என்று ஓர் அறையைக் காட்டி விட்டுத் தன்னறைக்குள் சென்றார்.

நானும் அவரை மனமாற வாழ்த்திக் கொண்டு அவர் காட்டிய அறைக்குள் போனேன். விளக்குகள் எல்லாம் அணைந்தன. அறை முழுவதும் இருள். என்னை நித்திரையும் சிறுகச்சிறுக வந்து அணைத்துக் கொள்ள முயன்றது.

சிறிது நேரம் சென்றிருக்கும் என்று நினைக்கிறேன்.

அப்பொழுது, ஒரு சலனம்! என்னைக் கட்டி அணைப்பது போன்ற ஒரு ஸ்பரிசம்! நான் திமிறினேன். என் முயற்சி பலிக்கவில்லை. வேங்கையின் கையிற் சிக்கிய மான், எங்காவது தப்பியது உண்டா?... நான் நிலை குலைந்து மயங்கிச் சரிந்தேன். அவ்வளவு தான்!

மயக்கம் தெளியும் போதுதான் அவன் எனக்குப் பக்கத்தில் கிடந்ததை உணர்ந்தேன். என்னை அவன் சூறை ஆடி விட்டான்!

உலகில் எந்தப் பெண்ணும் அறியாத் தனமாகவோ அல்லது, சிறு பிள்ளைத் தனமாகவோ இருக்கலாம். ஆனால், தன்னை மீறி எவனாகிலும் அவளைச் சூறையாட முற்படுவானானால் அவள் தன்னுயிர் இருக்கும் வரை போராடியே தீருவாள். அந்த வகையில், நான் பிச்சைக்காரி என்பதற்காக, நான் மட்டும் என்ன தகைமை குறைந்தவளா?

முன்னேற்பாடுடன், எதிர்பாராத விதமாக வந்த தாக்குதலை முதலில் சமாளிக்க முடியவில்லை. இருந்தும், சோர்ந்து இருந்த உடலில் எங்கோ இருந்து ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டது. அது விரைவில், ஆவேசமாகக் கிளர்ந்து எழுந்து வெறி யாடியது.

இருட்டில், நான் தேடிய பொருள் ஒன்று கிடைத்தது. எதிர்வரக் கூடிய ஒன்றையும் யோசிக்கவில்லை. என் ஆத்திரம் தீர, உள்ள பலமெல்லாம் கொண்டு அதனால் ஓங்கி அடித்தேன்.

'ஐயோ... பண்டா!... ஐயோ... பண்டா!...' என்று அலறித் துடித்தான், அந்தச் சண்டாளன்.

நான் ஓடித் தப்ப முயன்றேன். நான் இருந்த அறைக் கதவுகள் எல்லாம் இறுக்கமாகப் பூட்டப்பட்டிருந்தன. எங்கும் ஓடித் தப்ப முடியவில்லை.

சிறிது நேரத்துக்குள், 'மாத்தையா... மாத்தையா!...' என்று கூவிக் கொண்டு வந்தான், வேலைக்காரன். அவன் வந்ததும் வெளிச்சத்தையும் ஏற்றி வைத்தான்.

"ஐயோ!... என்று அலறினேன். 'தங்கச்சி... தங்கச்சி...' என்று சகோதர பாசம் காட்டியவரா என்னைச் சூறையாடியது? அடைக்கலம் தந்து, என் கஷ்ட நிலையைப் போக்க முன் வந்தவரா, என்னைக் கசக்கிப் பிழிந்தது?... அழியட்டும்!... ஒழியட்டும்!.." என்று வெறி பிடித்தவள் போல் அந்த அகால வேளையில் கத்தினேன்.

அந்த அயோக்கியனின் தலையில் இருந்து இரத்தம், வெள்ளம் போல் 'குபீர்...' என்று பீறிட்டுக் கொண்டு, வெளி வந்தது.

"ஐயோ கொலை ! கொலை!" என்று கத்திக் கொண்டு என்னைப் பார்த்து ஓடி, வந்தான், வேலைக்காரன்.

"பண்டா... அவள் கள்ளி!... களவெடுக்க வந்தவள், பிடிக்கப் போனேன்... இரும்பால் அடிச்சுப் போட்டாள்!... ஓடப் போறாள்... புடி... புடி..." என்று கூறிக் கொண்டே தலை சாய்ந்தான், அந்தக் காமுகன்.

இறக்கப் போகும் போதும் ஓர் அபாண்டமான பொய்!

"ஐயோ... ஐயா... அவர் பொய் சொல்லுறார்... நான் திருட வரயில்ல... அவர் தான் என்னைக் கெடுத்துப் போட்டார்... ஆத்திரத்தில் இருட்டில இது நடந்து விட்டது..." என்று அழுதபடி வேலைக்காரனிடம் முறையிட்டேன்.

"எல்லாம் எனக்குத் தெரியும்!..." என்று சொல்லிக் கொண்டே, என்னைப் பிடித்துத் தூண் ஒன்றில் கட்டி வைத்தான், வேலைக்காரன்.

பொலீஸ் வந்தது. 'கொலைகாரி' என்று சொல்லி, என்னைச் சிறையில் அடைத்தார்கள். அதை நிரூபிக்க, நீதிமன்றத்தில் கண்டவர்களும் காணாதவர்களும் பொய்யும் மெய்யும் புனைந்து சாட்சி சொன்னார்கள். சந்தர்ப்ப சூழல் என்னைக் கொலைகாரியாக்கி விட்டது. நான் எவ்வளவோ வாதாடினேன். எனக்கு நானே நின்று நீதி வேண்டினேன். என் குரல் நியாயத்துக்குக் கேட்கவில்லை. எல்லாம் வல்ல ஆண்டவன் என்பார்களே, அவருக்குக்கூட என் அவலக் குரல் கேட்கவில்லை. அவரை நொந்து தான் என்ன பிரயோசனம்? அநுபவிக்க வேண்டியதை அநுபவித்தேன். என் பரம்பரையின் பூரண பொக்கிஷம் தானே அது?

'நான் கொலைகாரி' என்ற தீர்ப்போடு 'தூக்கு மேடை'க்குப் பயணமாக இருக்கிறேன். ஆம், அதுதானே அநாதைகளுக்கு இந்தச் சமூகம்

தரும் நீதி, நியாயம்! ஒரு விதத்தில் எனக்கு அது நலத்தைச் செய்கிறது. இல்லாவிட்டால், நான் மீள வழி? சமுதாய அரங்கில் நானும் ஓர் அங்கமாக வாழவா? அதற்கு வழி?

சீழ் வடியும் இந்தச் சமுதாயத்தில் என் போன்ற நடைப்பிணங்கள் - சாலையின் கோடிமுனையில் கஞ்சிக்கும் கந்தலுக்கும் நாளும் பொழுதும் மாளும் பஞ்சைகள் இனி வாழ முடியாது. நான் எப்படி வாழ்வேன்?. நம்பியிருந்த ஜீவன் ஒன்றும், நான் வெளியேறிய அன்றிரவே யாருமற்ற அநாதையாகக் காலன் கையிற் சிக்கி விட்டதாம். வாழ்க்கையில் அடிப்படை உதவி தானும் இல்லாது உழலும் அநாதைகள், வாழ்வில் 'சறுக்கி' விட்டால் அவர்களுக்கு இந்தச் சமுதாயம் என்ன விமோசனம் தரும்? வாழ்க்கையில் சறுக்கப் போகிறவர்களைத் தடுத்து நிறுத்த முடியாத இந்தச் சமுதாயமா, சறுக்கியவர்களைக் காப்பாற்றப் போகிறது? இல்லை, அவர்கள் தான் சுதந்திரமாக வாழ வழி விடுமா?

என் வாழ்வில், மரணத்தை விடச் சிறந்த சீர் எதுவுமே இல்லை! நாளை நள்ளிரவில் அரச செலவில், அதனை நான் இலவசமாகக் கட்டி அணைக்கப் போகிறேன்.

* *** *

ஐயா, என் நிலையை தங்களுக்கு திறந்து காட்டி விட்டேன். உங்களிடம் நான் நீதி கேட்கவில்லை. அநுதாபம் கேட்டு வரவில்லை. ஆனால், என் போன்ற இன்னும் எண்ணற்ற ஆருமற்ற பராரிகள் நடைபாதையில், சாலைச் சாக்கடையில் இருந்து 'சுய நலமிகளால்' இழுக்கப்படுகிறார்கள். அவர்களைக் காக்க மார்க்கம் காணுங்கள் -

அவர்களுக்கு வாழ வழி காட்டுங்கள். அது போதும், என் போன்ற பரதேசிகள் இந்தச் சமுதாயத்தில் வாழ்வதற்கு!

நன்றி.

இப்படிக்கு,

சமுதாயத்தின் செலவில் விடைபெறும்,

ஓர் அபலை.

நன்றி-

*

**நன்றி : "தினகரன்" – ஞாயிறு வெளியீடு**

*23-10-1955.*

2

# இளையாள்

அகிற் புகையின் நறுமணம் நாசியைக் கொள்ளையடித்துக் கொண்டிருந்தது. மசூதியிலிருந்து வெளிவந்த மாலைச்செப ஓசை காற்றில் மிதந்து, அகிற்புகையுடன் கலந்து இதயத்தை இதமாக்கிக் கொண்டிருந்தது.

அதே சமயத்தில், சாலையோரமாக அந்தப் 'பக்கிரி'யும் போய்க் கொண்டிருந்தான். அவன் காதில் அந்தவொலி ஒலித்துக் கொண்டது. அந்த நறுமணம் அவன் நாசியில் மணத்தது. ஆனால், அவன் அவற்றைப் பொருட்படுத்தாது எங்கேயோ, குஞ்சுக்கிரை தேடிச் செல்லும் குருவி போல், தங்கு தடையின்றி அதிவேகமாகப் போய்க் கொண்டிருந்தான்.

என்ன?

அங்கு யார் இருக்கிறார்கள்?

பாழ் வளவு - சீரழிந்த தோட்டம் - வௌவால் உறையும் மாடி வீடு.

அவசர அவசரமாக வந்த பக்கிரி, இந்தத் தோட்டத்தின் எல்லையில் வந்து நின்று, அந்த மாடி வீட்டையும், சீரழிந்த வளவையும் வெறித்துப்

பார்த்துக் கொண்டிருந்தான். அவன் விழிகளில் நீர் முட்டிக் கொண்டிருந்தது. அந்நீர்த் தேக்கத்தில் தான், எவ்வளவு சோகம்!? பரிதாபம்!? ஆற்றாமை!?

ஏதோ ஞாபகம் வரவே, தன் பிரம்மையிலிருந்து நீங்கி, தான் வந்த வழியை நாடித் திரும்பினான் பக்கிரி. அவனை யாருக்கும் இப்பொழுது அந்த ஊரில் தெரியாது. தெரிந்தாலும், அவனுடைய உருமாற்றத்தில் யாரும் அவனை அடையாளங் கண்டு கொள்ள மாட்டார்கள். அத்துடன், அவன் பல வருடங்களுக்குப் பின், அவன் பிறந்து வாழ்ந்த ஊருக்கு வருகிறான். யாருக்குத்தான் அவனைத் தெரியப் போகிறது?

அமைதியாகப் போய்க் கொண்டிருந்த பக்கிரி, மசூதிக்கு மேற்கே இருந்த ஆலமத்தடியில் வந்து நின்றான்.

இப்பொழுதும் செபத்தின் ஒலியும் அகிற் புகையின் நறுமணமும் மிதந்து கொண்டிருந்தன. அவற்றின் உணர்வு அவனில் ஊர்ந்ததும் அப்படியே கீழே அமர்ந்து, கண்களை மூடிக் கொண்டு "அல்லாஹு... அக்பர்..." என்ற இறைவனின் திருநாமத்தை வாய் விட்டு முணங்கியபடி, ஓதத் தொடங்கினான் பக்கிரி.

சிறிது நேரம் சென்றதும், அவன் முகத்தில் சிறிது அமைதி நிலவியது. இருந்தும் அது பூரண அமைதி என்ற சொல்ல முடியாது.

சுதந்திரமாகக் காய்ந்து கொண்டிருந்த வெண்ணிலவில் தன்னை மறந்தவனாய் தன் அங்கிக்குள் இருந்து ஏதோ ஒரு பொருளை எடுத்துத் தன் கண்ணில் ஒற்றிக் கொண்டான், அவன். அது

அவனுடைய 'திருக் குடும்பத்தின்' ஒரு நிழற்படம். அதில் அவன் இளையாள் - அவன் மகள் கதீஜா - அவன், மூவரும் இருந்தார்கள். அடங்கியிருந்த அவன் கவலைக் கடல், சூறாவளி போல் பொங்கி எழும்பிற்று. அதில், சகிக்க முடியாத உஷ்ணம் மேலிட்டது. அத்துடன், அவனுடைய இறந்தகால நிகழ்வலைகளும் ஒன்றன் பின் ஒன்றாகப் பின்னிப் பிசைந்து மேல் எழுந்து கொண்டு வெளிவந்தன.

*  ***  *

அன்று குழந்தை கதீஜா "வீல்.. வீல்" என்று அழுது கொண்டிருந்தாள். கையிலிருந்த தினத்தாளை அப்படியே போட்டு விட்டு உள்ளே போனான், சலீம். குழந்தை எதையோ சுட்டிக் காட்டிக் கொண்டிருந்தாள். ஆமினா அவளை மிரட்டிக் கொண்டிருந்தாள். குழந்தையை வாரிச் சுருட்டிக் கொண்டு வெளியே போனான், சலீம். அவன் செய்கையில் அடங்காத கோபம் கொப்பளித்தது.

"ஏன் கண்ணே அழுறே?" என்று குழந்தையைத் தன் தோள் மீது சாய்த்த வண்ணம் கேட்டான், சலீம். குழந்தை பேசவில்லை. அதன் அழுகையும் நிற்கவில்லை.

"அலுமாரியில் இருந்த சொக்லட்டை எல்லாம் கீழே கொட்டி, வாயில் திணிச்சுக் கொண்டிருந்தாள்... அதை எல்லாம் எடுத்து உயர வைத்து விட்டேன்... அதுக் குத்தான் அழுகிறாள்" என்று சொல்லிக் கொண்டே அவனைப் பின் தொடர்ந்து வந்தாள், ஆமினா.

"ஏன் அவளுக்குத் தானே சொக்லட் வாங்கி வந்தேன். அது உனக்கென்றா நினைச்சுக் கொண்டாய்?" என்று கடுகடுத்தான், சலீம்.

அன்றுதான், முதல் தடவையாக சலீமுக்கு ஆமினா மீது கோபமும் வெறுப்பும் உண்டாயின. ஆமினாவின் கண்கள் நீரைத் தேக்கிக் கொண்டிருந்தன.

"அதற்கில்லை... ஒரேயடியாக எல்லா சொக்லட்டையும் சாப்பிட்டால்... குழந்தையின் உடம்புக்கு ஆகுமா?... இப்பதான் ஒன்டு தின்றா.. மற்றதை பிறகு, பின்னேரம் கொடுக்கலாம் என்றுதான் எடுத்து வைத்தேன்.. இது தப்பா?..." என்று குழந்தை போல் பேசினாள், ஆமீனா.

"போதும்.. போதும் உன்னுடைய சாகசமும், பசப்பும்! குழந்தையை ஏதோ அக்கறையாகக் கவனிப்பவள் போல் பேசாதே! இளையாள் சொரூபத்தையே காட்டத் தொடங்கி விட்டாயே?...." என்று கூறி விட்டு, குழந்தையுடன் வெளி முற்றத்துக்குப் போய் விட்டான், சலீம்.

* *** *

பக்கிரியின் சிந்தனைக் குருவி இன்னும் ஒரு கடந்தகால நினைவலையைக் கடத்திக் கொண்டு வந்தது.

'அவள் அன்று உயிரோடு இருந்திருந்தால், அவன் அருமைக் குழந்தை கதீஜா அப்படி அவதிப்பட்டிருப்பாளா? என்ன இருந்தாலும், இளையாள் என்றால் கொஞ்ச நாள்களுக்குள் சூர்ப்பனகை ஆகிவிடுவார்கள் தான்!, என்று அப்பொழுது நினைத்தது, அவனுடைய பொல்லாத மனம்.

அவன், மரியம்பீபீயுடன் மூன்று வருடங்கள் தான் வாழ்க்கை நடத்தி

இருந்தான். அவள், அவன் அந்தஸ்துக்கு ஏற்ற பணக்கார வீட்டுப் பெண்ணல்லள். அவள் ஓர் ஏழைக் கிராமத்துப் பெண். இருந்தும் அவள் மிகவும் புத்திசாலிப் பெண். தன் கணவன் குறிப்பறிந்து கடமை செய்வாள். அவனும் அப்படியே. இசையும் இன்பமும் போல் என்பார்களே, அதேபோல் தான், அவர்களது தாம்பத்திய வாழ்க்கை அமைந்தது. அதுவும், கதீஜா பிறந்ததும் இன்ப எல்லைக் கோட்டை யைத் தாங்கள் தாண்டி விட்டதாக எண்ணிப் பூரிப்படைந்தார்கள்.

ஆனால், அது இருண்ட வனத்தில் எரித்த தண்மதி போல் பொய்த்து விட்டதே! மரியம்பீபீ, கதீஜாவுக்கு இரண்டு வயதாகும் முன்பே, அவளை சலீமின் கையிற் கொடுத்து விட்டு, 'டைபொயிற்' காய்ச்சலிற் போய் விட்டாள்.

மூத்தாள் இறந்து ஒரு வருடக் 'கத்தம்' கூடக் கடக்கவில்லை. அதற்குள் அவன் உறவினர்கள் சலீமின் மறுவிவாகத்துக்கு ஒழுங்குகள் செய்தார்கள். சலீம் எவ்வளவோ மறுத்தும் அவர்கள் அவனை விடவில்லை. பத்தாம் மாதமே அவனுக்கும் ஆமீனாவுக்கும் 'நிக்காஹ்' சுபமாக நடந்தேறியது.

ஆமீனா பணக்காரப் பெண். அத்துடன் படித்தவள். அதற்கேற்ப, ஒழுங்குகள் பலவும் நிறைந்தவள்.

அவன் வீட்டுக்குப் படியேறி வந்த அக்கணமே கதீஜாவை அணைத்து முத்த மிட்டாள். கொஞ்சிக் குலாவினாள். ஆமீனா, சலீமிடத்தில் அளவற்ற அன்புடனும் கதீஜாவிடம் அதைவிடப் பிரியமாகவும் வாஞ்சையாகவும் நடந்து கொண்டாள்.

இன்ப வாழ்க்கை இளையாளுடன் ஆரம்பத்தில் இன்ப இல்வாழ்க்கையாகத் தான் சலீமுக்கு இருந்தது.

ஆனால், 'இதெல்லாம் வெறும் போலி! தன் கண்ணில் மண்ணைத் துவுவதற்குச் செய்த சாகசச் செயல்கள்! என்றுதான், பின்பு சலீம் நினைத்துக் கொண்டான்.

இப்படித்தான், அன்றொருநாள் அவன் வெளியில் இருந்து வீட்டுக்கு வரும் போது, குழந்தை கதீஜா அழுது கொண்டிருந்தாள். அவனைக் கண்டதும், ஓடி வந்து காலைக் கட்டி அணைத்துக் கொண்டு -

"உம்மா நேக்கு... அடிச்சா.. வாப்பா..." என்றாள், கதீஜா. சலீம் திகைத்துப் போனான். ஒரு நாளும் அவன் கதீஜாவை அதட்டியது கூடக் கிடையாது. அப்படி இருக்க, 'நேற்று வந்தவள் தன் குழந்தைக்கு அடிப்பதா?... தனக்கும் குழந்தை ஒன்று பிறக்கப் போகிறது என்று தானே இந்தப் பிஞ்சுக் குழந்தைக்கு - மூத்தாள் பிள்ளைக்கு இவ்வளவு கொடுமைகளும் செய்கிறாள்...' என்று பொங்கி எழுந்தான். கேள்வி முறையின்றி ஆமீனாவை அடித்து விட்டான். அத்துடன் விடாது, அன்றே அவளை அவள் பிறந்த வீட்டுக்கு ஓட்டியும் விட்டான்.

சமையலுக்கு ஒரு வேலைக்காரியை வைத்துக் கொண்டு, குழந்தையின் கருமங்களைத் தானே செய்யத் தொடங்கினான், சலீம். ஆனால் குழந்தை கதீஜா, "வாப்பா.. நோக்கு குளிப்பாட்டவே தெரியாது.. உம்மான்னா நன்னா குளிப்பாட்டுவா..!" என்றாள், முதல் நாளே. இன்னொரு நாள், சாப்பாடு கொடுக்கும் போது "உம்மா.. கதை சொல்லுவா.. நீங்களும் கதை சொல்லுங்க.." என்றாள். சலீம் எவ்வளவு

திறமையாகத்தான் கதை சொன்னாலும் அவளுக்குத் திருப்தி இல்லை. அதில் பல குறைகள் கண்டு, குறைப்பட்டுக் கொள்வாள்.

"உம்மான்னா, நரிக் கதை சொல்லுவா.. வாப்பா அது மாதிரிக் கதை சொல்லுங்க.." என்றெல்லாம் வேண்டியும், வேண்டாமலும் அடம் பிடிப்பாள். கதீஜா.

இப்படிப் பல தடவைகள். பல நாள்கள் கடந்தன.

*   ***   *

ஆமீனா, சலீமுக்கு நாலைந்து கடிதங்கள் எழுதியிருந்தாள். அவள் மீது இருந்த வெறுப்பில் அவற்றைப் பிரித்துக் கூடப் பார்க்காமல் மூலையில் வீசி எறிந்து விடுவான். பின்பு கடிதம் வருவதும் நின்று விட்டது. 'தொலைந்தது, சனியன்! என்று திருப்தியடைந்தான், சலீம்.

சமையற்கார அம்மாள் கதீஜாவின் விஷமங்களைப் பற்றி அடிக்கடி புகார் செய்யத் தொடங்கினாள்.

ஒரு நாள்,

"உங்க புள்ளையின் விஷமங்களை என்னால, இனிப் பொறுக்க முடியாது!" என்று சொல்லி விட்டு தன் பெட்டியைக் கட்டிக் கொண்டு போய் விட்டாள், அவள்.

"இந்தப் துஷ்டப் பிள்ளையை வைத்துக் கொண்டு ஆமீனா என்ன மாதிரித் தான் காலம் தள்ளினாளோ... தெரியாது..?" என்ற எண்ணம்

சலீமின் மனவடித் தளத்தில் இருந்து இலேசாக எழுந்தது. அதே சமயத்தில், அன்று காலையில், 'தந்தி' என்ற குரலும் வாசலில் கேட்டது.

தந்தி அவன் மாமனாரிடம் இருந்து வந்திருந்தது. ஆமீனாவுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்திருப்பதாகவும் ஆமீனா மிகவும் பலவீனமுற்றிருப்பதாகவும், சலீமைக் காணத் துடிப்பதாகவும் தந்தியில் வாசகங்கள் காணப்பட்டன.

'குழந்தை வேறு பிறந்து விட்டதல்லவா? இனி என் கதீஜா அவளுக்கு என்றென்றும் சத்துரு தான்! அவள் சகவாசம் இனி நமக்கு வேண்டாம்... அவள் அங்கேயே இருக்கட்டும்!...' என்று எண்ணிக் கொண்டான், சலீம்.

நாள்கள் சில சென்று மறைந்தன. சரிவரக் கவனிக்காததாலும், நேரத்துக்கேற்ற உணவு ஊட்டாததாலும் கதீஜாவுக்கு முதலில் அஜீரணமாகி, பின்பு கடுஞ்சுரம் வந்து விட்டது. அது மேலும் 104 - 105, 'டிகிரி'க்கென, மேலேறிக் கொண்டும் இருந்தது. வைத்தியர்களும் நேரத்துக்கு நேரம் வந்து போனார்கள்.

சன்னி வேகத்தில், "உம்மா எங்கே வாப்பா?.. உம்மா எங்கே வாப்பா?... எப்போ வருவா?... உம்மா எங்கே?... ஏன் வரயில்ல?..." என்றெல்லாம் பிதற்றத் தொடங்கி விட்டாள், குழந்தை.

"உம்மா, காலம்பற வந்திடுவா... நீ.. தூங்கு கண்ணே..." என்றெல்லாம்

சமாதானஞ் செய்வான், சலீம். எவ்வளவு நேரத்துக்குத்தான் குழந்தையை ஏமாற்ற முடியும்?

"இந்தக் குழந்தையின் உள்ளத்தில் தான் அவள் மீது கொண்ட அன்பும் வாஞ்சையும் எவ்வளவு?" என்று சிறுகச் சிறுகச் தன் கண்களைத் திறந்து, அறிவைத் திறந்து சிந்திக்கத் தொடங்கினான், சலீம்.

'தவறு உன்மேல்தான்... பெற்ற தாயிலும் மேலாக அன்பு காட்டி வளர்த்த ஒருத்திக்கு, அந்தக் குழந்தையை அடிக்கவும், கண்டிக்கவும் உரிமை கிடையாதா?', என்று, அவன் மனச்சாட்சி குத்திக் கேட்டது. ஆனால், அதற்குப் பதில் சொல்ல அவனால் முடியுமா?

ஏதோ ஞாபகத்துக்கு வரவே, மூலையில் வீசி எறியப்பட்ட ஆமீனாவின் கடிதங்களைப் பொறுக்கி எடுத்தான், சலீம். அவற்றை ஒவ்வொன்றாக எடுத்து, பிரித்து வாசித்தான். குழந்தை கதீஜாவின் சுகசேமங்களையும், அவள் விளையாட்டுகளையும் விசாரித்து எழுதி இருந்தாள், ஆமீனா.

மீண்டுங் குப்பையைக்கிளறியபோது, இன்னுமொரு கடிதம் கிடைத்தது. அது, ஆமீனாவுக்குக் குழந்தை பிறந்த போது எழுதிய கடிதம். அதில், பிறந்த குழந்தையின் உடம்பு சரியில்லாததால் அது இறந்து விட்டதாகவும், தன்னுடல் நிலை மிகவும் மோசமாகிக் கொண்டிருப்ப தால், ஒரு வேளை தான் இறந்து விடலாம் என்று டாக்டர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள் என்றும், தான் இறப்பதற்கு முன்பு கதீஜாவையும் சலீமையும் ஒரு முறை பார்க்க விரும்புவதாகவும் எழுதி இருந்தாள், ஆமீனா. அத்துடன் -

".... அன்பரே, நான் மாணவியாய் இருந்த காலத்தில், மாற்றாந் தாய்மாரின் கொடுமைகளையும் இளையாள்கள் புரியும் இன்னல்களையும் பற்றிய பல கதைகள் படித்தும் பலர் சொல்லக் கேட்டும் இருந்தேன். நானும் முதல் தாரத்தில், குழந்தையுள்ள ஒருவருக்கு வாழ்க்கைப்பட வேண்டும் என்றும் அப்படி நேர்ந்தால் மாற்றாந் தாய் - இளையாள் வர்க்கத்துக்கே ஒரு முன்மாதிரியாக விளங்க வேண்டும் என்றும் கனவு கண்டேன். ஆனால், என் கனவு நனவாகப் பிறபகுதி இடந்தராமல் போய் விட்டது. நீங்கள் என்னை அறிந்து கொள்ள முடியவில்லை...." என்று முடிக்காமலே கடிதம் எழுதியிருந்தாள்.

'ஐயோ! என்ன முட்டாள் தனம் செய்து விட்டேன்?... ஆம், ஆமீனா நான் உன்னை அறிந்து கொள்ளவில்லை... உண்மை! உண்மை!!' என்று ஆவேசம் பிடித்தவன் போல் கத்திக் கொண்டு எழுந்தான், சலீம்.

"உம்மா.. உம்மா.. வந்திட்டீங்களா.. எங்கே போனீங்க உம்மா?..." என்று ஈனஸ்வரத்தில் மீண்டும் முணங்கிக் கொண்டிருந்தாள், கதீஜா.

அப்பொழுது, திடீரென்று வாசற் கதவு தட்டப்படும் ஓசை கேட்டது. அத்துடன், 'தந்தி' என்ற ஒலியும் பயங்கரமாக ஒலித்தது. கதவைத் திறந்தான், சலீம். நடுங்கும் கைகளுடன் தந்தியை வாங்கிப் பிரித்தான், அவன்.

'ஆமீனா இறந்து விட்டாள்!'

பயங்கரமான எரிமலை ஒன்று, அக்கினிப் பிழம்புகளைக் கக்கிக் கொண்டு, அவன் தலைமேல் விழுந்தது போலிருந்தது அச்செய்தி, அவனுக்கு.

கதீஜா மீண்டும், "உம்மா எப்ப வருவா?" என்று கேட்டாள்.

"உம்மா... இனிமேல் வரமாட்டாள்! அவள் வர முடியாத இடத்துக்குப் போய் விட்டாள்!" என்று குமுறி எழுந்த துக்கத்தை அடக்கிக் கொண்டு சொன்னான், சலீம்.

"ஏன்?... எங்க போயிட்டா?...."

"அதோ... அங்க!" என்று ஜன்னலுக்கு வெளியே தெரிந்த ஆகாயத்தைச் சுட்டிக் காட்டினான், சலீம்.

குழந்தையின் கண்கள் அகல விரிந்தன.

"ஐய்யையோ!... அவ்வளவு தூரத்துக்கா?... ஏன் உம்மாவை அங்க அனுப்பினீங்க, வாப்பா?..."

அந்தக் கேள்வி, அவன் நெஞ்சைப் பல்லாயிரம் ஈட்டி கொண்டு குத்துவது போல் இருந்தது.

"நேக்கு... இப்பவே உம்மாவைப் பாக்க வேணும்... நானும் அங்கே போறேன்... உம்மான்ன நேக்கு, சோறு தருவா... கதை சொல்லுவா... சொக்கலட் தருவா... நான் உம்மாட்டியே போறன்... உம்மா.. உம்.... மா...."

குழந்தையின் குரல் குழறியது; மூச்சு வேகமாக இழுத்தது; கண்கள் சொருகின. உதடுகள் இரண்டொரு தடவை அசைந்து அப்படியே நிலைத்து நின்றன.

அவ்வளவுதான்!

சாளரத்தால் வீசிய ஆடிக் காற்று சலீமைப் பார்த்து,

"கொலைகாரன்! கொலைகாரன்!!"

என்று பயங்கரமாக எதிரொலித்து வீசியது.

* *** *

"ஐயோ! ஆமீன்.. கதீஜா!...." என்று பித்துப் பிடித்தவன் போல் கத்திக் கொண்டு எழுந்தான், பக்கிரி. அவன் சிந்தனைக் கயிறு அறுந்து விட்டது.

அப்பொழுது, மேலே ஆலங் கிளையில் இருந்த ஓர் ஆந்தை, வீரிட்டு அலறிக் கொண்டு பறந்தது. அதன் பேய்க் குரலும், "நீ... ஒரு கொலைகாரன்" என்று ஒலிப்பது போல் இருந்தது, அவனுக்கு.

வெறி பிடித்த நாய் போல், பக்கிரி மசூதியின் பக்கம் ஓடி மறைந்தான்.

நன்றி - "சுதந்திரன்" - வார இதழ்
27.11.1955

3

# ஒரு பிடி மண்

மாலை வெயில் மங்கிக் காரிருள் கவிந்து கொண்டிருந்தது. தெருவில் நடமாட்டம் குறைந்து கொண்டிருந்தது. அந்த நேரந்தான் எங்கோ அவசரமாகப் போய்க் கொண்டிருந்த என் காதில் அந்தப் புலம்பல் கேட்டது.

"......... ம்........ போய் விட்டாயா? ........ வேண்டாம், இனி உனக்கு இந்த உலக வாழ்வு!...... என் வாழ்வுக்கு இனி யாரும் துணையுமில்லை...... உபத்திரமும் இல்லை!........"

திரும்பிப் பார்த்தேன். சாலையோரத்துக்குச் சற்றுத் தொலைவில் இருந்த குப்பை மேட்டில் ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள். ஒரு கையை உயரப் பிடித்துக் கொண்டு புலம்பினாள். அவளுடைய கையில் ஏதோ ஒரு பொருள் சிக்கி, வழிந்து கொண்டிருந்தது.

அவளருகிற் சென்று, அவளைக் கவனித்தேன். என்னைக் கண்டதும், அவள் தன் கையில் இருந்ததை நின்ற இடத்திலேயே போட்டு விட்டு "விர்" என்று புறப்பட்டாள். அவள் கையில் இருந்து சிறை மீண்டது, ஒரு பிடி மண்! அது என்னைப் பார்த்துப் பரிதாபமாகச் சிரித்தது.

எனக்கு ஒன்றுமே புரியவில்லை. குப்பை மேடு - புலம்பல் - ஒரு பெண் - ஒருபிடி மண்! குழம்பிய சிந்தனையோடு அவளைத் தொடர்ந்து, நானும் சென்றேன்.

"............ கொஞ்சம் நில்லு!........"

"...................."

அவள் வெகு வேகமாகப் போய்க் கொண்டிருந்தாள்.

என் சந்தேகம் மேலும் விரிந்து கொண்டே சென்றது. என் அவசர வேலையையும் மறந்து அவள் பின்னாலேயே என் மனமும் நடையும் சென்றன.

அந்த நேரத்தில் என்னையும் அவளையும் யாராவது பார்த்தால், கட்டாயமாக ஏதாவது ஒரு தவறான முடிவுக்குத்தான் வருவார்கள். நல்ல வேளை! இருள் சூழ்ந்த இரவு, எங்களைக் காட்டிக் கொடுக்கவில்லை. இல்லாவிட்டால், மனிதனின் இந்த எலும்பில்லாத நாக்கால், எதையெல்லாமோ கற்பித்துக் கதை கட்டியிருக்கும். ஒரு பெருஞ் சூறாவளியையே உண்டாக்கி எக்காளம் இட்டுச் சிரித்திருக்கும்!

* *** *

பெருந் தெருவையுங் கடந்து, திஸ்ஸவாவியை நோக்கிப் போகும் ஒற்றையடிப் பாதையில் அவள் போய்க் கொண்டிருந்தாள்.

அநுராதபுரத்தில் அந்தக் குளக்கரைப் பிரதேசம், ஏகாந்தத்துக்குப்

பெயர் போனது. அதுவும், இரவு வேளைகளில் சொல்ல வேண்டியதில்லை. ஏனென்றால், அந்தப் பகுதியில்தான் சுடுகாடும் இருக்கிறது. மனித நடமாட்டம் மிகக் குறைவு. பிணந்தின்னும் சொறி நாய்களும், நரிகளும்தான் அந்த வேளையில், அந்தப் பகுதியைக் குத்தகைக்கு எடுத்து இருந்தன.

அந்த நேரத்தில், அவளையும் என்னையும் தவிர அங்கு வேறு யாருமில்லை. இருவரும் குளக்கட்டுக்கு வந்து விட்டோம்.

"கொஞ்சம் நில்லுங்க........." என்று குரல் கொடுத்தேன்.

அவள் திரும்பினாள். ஒரு விதமான பார்வையை என் மீது வீசி விட்டு,

"என்ன!.......... இன்னுமா என்னைத் தொடர்ந்து வருகிறாய்? .........." என்று கேட்டாள்.

நான் பேசவில்லை.

அந்நேரம், கிழக்கு வானில் குறைச் சந்திரன் தனது தண்ணொளியைப் பரப்ப வந்து கொண்டு இருந்தான். அவனுடைய ஒளியில், அந்தப் பெண்ணின் முகத்தைப் பார்த்தேன்.

முடிந்த காலத்தில், அவள் கடந்த காட்டாறுகள் எத்தனையோ அத்தனையும் துயரச் சுவடுகளாக, அவள் முகத்தில் தெரிந்தன. அதில் முதுமையின் முதல் வேர்கள் இழையோடி இருந்தன. அவளுக்கு, வயது அவ்வளவு அதிகம் என்று சொல்ல முடியாது.

முப்பது முப்பத்தைந்துக்குள் தான் இருக்கும். பழுப்பேறிக் கொண்டிருந்த பரட்டைத் தலை - சற்று வெளுறிய உடல் - பல வர்ணச் சீலைத் துண்டுகளால் பொத்தப் பெற்ற உடை - கையில் - நெளிந்த ஒரு சிறு துணி மூடை ....... இத்தனையும் அவளுடைய பருவம் - பதவி - அந்தஸ்து எல்லாவற்றையும் எனக்குச் சொல்லாமற் சொல்லிக் கொண்டன.

அவள் தான் என் மௌனத்தைக் கலைத்தாள்.

"என்ன?......... இந்தப் பிச்சைக்காரியை .......... அதுவும் உன் தாயைப் போல் இருக்கும் ஒருத்தியை பின் தொடர்ந்து இவ்வளவு தூரம் வருகிறாய்? .........."

என்ன!?

எனக்கு ஒன்றுமே ஓடவில்லை. உடல் எல்லாம் வியர்த்துக் கொட்டியது. இது என்னடா? கிணறு வெட்டப் போய், பூதம் புறப்பட்டது போல் இருக்கிறதே, என் நிலை? என்று அடித்துக் கொண்டது, என் மனச்சாட்சி.

"அம்மா.......... மன்னித்துக் கொள்........ தவறான எண்ணத்தோடு நான் உன்னைத் தொடரவில்லை.........." என்று ஒருவாறு தட்டுத் தடுமாறியபடி கூறினேன். பின் அங்கு நிற்க மனமில்லாமல் திரும்பிப் போய்விட எண்ணினேன். ஆனால், அப்படிச் செய்தால் என் நிலைமையும் நோக்கமும் அவளுக்கு எப்படி விளங்கும் என்ற சிந்தனை உதிக்கவே, அப்படியே அங்கு சற்றுத் தாமதித்தேன்.

அதற்குள் அவள், குளக்கரையில் இருந்த ஒரு பாறையில் அமர்ந்து, குளத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இழந்த தைரியத்தைச் சற்று மீட்டு, அவள் அருகிற் சென்று, "அம்மா...... அந்தக் குப்பை மேட்டில்......." என்று என் சந்தேகத்திற்கு விளக்கமறிய, விபரம் கேட்டேன். அவள் சிரித்தாள். அந்தச் சிரிப்பில் முன்பிருந்த கடுகடுப்போ அன்றி வேறு எந்த விதமான சினமோ இருக்கவில்லை.

"பயப்படாமல்........ சொல்லுங்க........ என்னால் ஏதும் உதவி செய்ய முடியுமானால் செய்வேனே தவிர உபத்திரவம் ஒன்றும் தரமாட்டேன்........" என்றேன், மீண்டும் தொடர்ந்து. என் பேச்சில் அவளுக்கு என்ன தோன்றியதோ தெரியாது. ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள். பின்னர் பேசத் தொடங்கினாள்.

"ஐயா........ நான் யார் என்று சொல்ல எனக்குத் தெரியாது. ஆனால் நான் அறிய என்னைப் பற்றிக் கொஞ்சம் தெரியும். அதைக் கொண்டு ஒரு புத்தகம் எழுதலாம், என்று மட்டும் கருதாதீர்கள். ஏதோ இரண்டொரு வார்த்தைகளில் முடிக்கக் கூடியது அது. அவ்வளவு தான்". என்று சொல்லி விட்டுச் சற்று நிறுத்தினாள். அது தான் அதற்கு முகவுரையாக்கும். என்று எண்ணிக் கொண்டு அவளுக்கு எதிரில் இருந்த ஒரு பாறைக் கல்லில் நானும் அமர்ந்து கொண்டேன்.

" எனக்கு விபரம் தெரிந்த காலத்தில் இருந்து இரக்க சிந்தை உள்ளவர்களுடைய இதயம் சோறு கொடுத்தது. தெருவோர மரநிழலும்

வீட்டுத் திண்ணைகளும், கடை வாசல்களும் வசிக்க இடம் தந்தன. வீதிகளில் வீசி எறியப்பட்ட சீலைத் துண்டுகள் உடையாகி என் உடலையும் மானத்தையும் மறைத்தன. இவை போதாதா நான் வாழ? நான் பேரழகியாகப் பிறக்கவில்லை. ஆனால், பெண்ணாகப் பிறந்து விட்டேனே? காலம் எனும் பருவப் பாசியும் என்னைப் பற்றி, மொய்த்துக் கொண்டது. அது பல வீதியோர வாலிபர்களைக் கவர்ந்தது. நானும் இடம் கொடுக்க நேர்ந்தது. முதலில் அருவருப்பாகத் தான் இருந்தது. பணம் வந்ததால் பிறகு, அது பழகிப் போய் விட்டது. எனக்கு வழி காட்டினார்கள் என் சகத் தெருவோர நண்பர்கள்.

"பாசி இப்பொழுது காய்ந்து சுருங்கிக் கொண்டு வருகிறது. ஆனால், அதன் கீழ் இருந்த அழுக்கு நிறைந்த சாக்கடை இன்னும் நாற்றம் எடுக்கிறது. அது இனி, கட்டையில் தான் காயும்......... என்ன இவள் இப்படி எல்லாம் பச்சையாகப் பேசுகிறாளே என்று தானே யோசிக்கிறாய்?.........

இதெல்லாம் உங்களைப் போன்றவர்களுக்குப் பிடிக்காது.........
விட்டு விடுகிறேன்!"

நான் ஒன்றுமே பேசவில்லை. கல்லாகச் சமைந்திருந்தேன்.

அவள் தொடர்ந்தாள்.

"அந்த மேட்டில் என்ன நடந்தது, என்று தானே கேட்கிறாய்?"

"ஆமாம்!" என்றேன் ஈனஸ்தாயில்.

"அங்கே, என் ஐந்தாவது குழந்தையைப் புதைத்தேன்!" என்று மிகவும் அமைதியாகக் கூறினாள், அவள்.

"என்ன, உன் குழந்தையையா?.......... குப்பை மேட்டிலா?!" என்று வாய் விட்டுக் கத்தினேன்.

"ஆமாம்! .......... உனக்கு ஆச்சரியமாகத் தான் இருக்கும்..........." என்றாள், அவள்.

நான் பேசவில்லை. அவளே தொடர்ந்து பேசினாள்.

"நான் தான்...... அந்தக் குழந்தையைப் பெற்றேன்....... இதற்கு முன் பிறந்த குழந்தைகளை வந்த விலைக்கு விற்று விட்டேன்........... இதையும் விற்கத் தான் இருந்தேன்......... அதற்குள் இது என்னை ஏமாற்றி விட்டது..........., சனியன்! போய் விட்டது! ............ ம்.......... குப்பை மேடு, அதை விட என்னால் இலகுவாகத் தோண்டக் கூடிய இடம் எங்கே இருக்கப் போகிறது, எனக்கு? அது போக, இந்த மனிதக் குப்பையினால் தோன்றியது தானே, அது. இப்பொழுது குப்பைக்கே போய் விட்டது. அது! முன்பு பிறந்த குழந்தைகளுக்கு என் உடலில் இருந்து பாலாக ஊறிய என் உயிரற்ற இரத்தத்தைக் கொடுத்தேன். ஆனால் இந்தப் பாவக் குழந்தைக்கு இரத்தம் கூடக் கொடுக்க முடியாமல் போய்விட்டது. இருந்தாலும் ஒரு பிடி மண் கொடுத்தேன்!............... இது கொடுத்து வைத்த குழந்தை!..........."

"ஐயோ! நீ ............ ஒரு தெருவோர மகளா?" என்று வாய்விட்டு அலறினேன். அதில் சினம் தாண்டவம் ஆடியது. அவள் சிரித்தாள்.

* *** *

அந்தச் சிரிப்பின் புதிரை இப்பொழுது தான் என்னால் உணர முடிகிறது. தெருவோரத்தையும் உண்டாக்கி, தெருவோர வாசிகளையும் உண்டாக்குபவர்கள் யார்? என் சினம் என்னையே சுட்டிக் காட்டி நின்றது.

**- நன்றி : "சுதந்திரன்" - வார இதழ்**
- 08.11.1959

4

# வினையடி நானுனக்கு

"ஏடீ! பொன்னீ!!... எழும்படி... நல்லாச் செண்டு போச்சுது.. அடுப்பில எப்பன் தண்ணி வைச்சுப் போட்டு படண்டி!..."

பரபரவென்று படுக்கையை விட்டு எழும்பி, குப்பி விளக்கைக் கொளுத்திக் கொண்டு, இப்படிக் குரல் கொடுத்தாள் செல்லி.

பத்து வயது கூட நிரம்பாத அவளுடைய மகள் பொன்னிக்கு அந்தக் குரல் கேட்டதோ, என்னவோ? அவள் மறு பக்கம் புரண்டு படுத்துக் கொண்டாள்.

செல்லிக்கு ஆத்திரம் ஆத்திரமாத் தான் வந்தது. இருந்தும், அடக்கிக் கொண்டு மீண்டும் அவளை எழுப்ப முயன்றாள். அவளுடைய முயற்சி பலிக்கவில்லை.

"படு.. படு!..." என்று முணுமுணுத்துக் கொண்டு தான் படுத்த அலம்பற் பாயையும் அதனோடு இருந்த துண்டு துணிகளையும் சுருட்டி, ஒரு மூலையில் வைத்து விட்டு, வெளியே சென்றாள், செல்லி.

குப்பி விளக்கிலிருந்து வீசிய மங்கிய ஒளி அந்தப் பனையோலைக் குடிசைக்குள் மினுமினுத்துக் கொண்டிருந்தது.

அங்கே ஒரு துண்டுப் பாயில், மூலைக்கொன்றாக மூன்று சிறு உருவங்கள் தங்களை மறந்த நிலையில், துயில் கொண்டிருந்தன. பால்வடியும் பச்சிளம் பசுமை தவழ வேண்டிய அக்குழந்தைகளின் முகங்களில் வறுமையின் முதுமை, அரசு செலுத்திக் கொண்டிருந்தது. சூப்பி விடப்பட்ட பனம் விதைகளைப் போல் இருந்தன, அவர்களுடைய தலைகள். பொன்னியின் அரையில் அழுக்கேறிய ஒரு பாவாடை துவண்டு கொண்டிருந்தது.

சின்னி, பொன்னிக்கு அடுத்தவள். நான்கு வயதுதான் இருக்கும். வைரவன் தான், கடைக்குட்டி. ஒன்றரை வயதிருக்கும். இவனுடைய பலன் தான் சின்னானை விழுங்கியதாம்!

சின்னான் மூன்று குழந்தைகளைச் செல்லியின் கையிற் கொடுத்து விட்டுப் போய் விட்டான்.

இப்பொழுது, வைரவனும் மூன்று கிழமையாகப் படுத்த படுக்கையாக இருக்கிறான். அவனும் எப்பொழுதோ? இராசப்பன் பரியாரியின் மருந்து அவனுடைய உயிரைப் பிடித்து வைத்துக் கொள்ளும் என்று எண்ணிக் கொண்டு இருக்கிறாள், செல்லி.

வெளியே சென்று திரும்பிய செல்லியின் முகம் பளிச்சென்று இருந்தது. முகங் கழுவி இருந்தாள். குந்துச் சுவரில் இருந்த சுரைக் குடுவைக்குள்

கையை விட்டு, எதையோ அள்ளி எடுத்து, மேற்குப் பக்கமாகத் திரும்பி "அப்பனே முருகா... ஆற்றங்கரையானே..." என்று எதை எதையோ சொல்லிப் புலம்பிக் கொண்டு, மூன்று விரலால் நெற்றியிற் பூசினாள். படுக்கையில் பொன்னி இன்னும் அப்படியே படுத்திருந்தாள். அடுப்பில், முதல் நாள் எரிந்த நெருப்பு நீறு பூத்து இருந்தது. படுக்கையையும் அடுப்பையும் மாறி மாறிப் பார்த்தாள், அவள். அவளுடைய உள்ளமும் வயிறும் புகைந்து கொடுத்தன.

"எடியே!.. இண்டைக்கு நீ எழும்ப மாட்டியா?..." என்று பத்து வீடு கேட்க, அந்த அதிகாலை வேளையிற் கத்தினாள், செல்லி.

பொன்னி அப்பொழுதுங் கூட, அசைந்து கொடுக்கவில்லை.

திடீரென்று, வெளியே வேலி வரை சென்றாள், செல்லி. நன்றாக வளர்ந்து முறுக்கேறிய ஒரு பூவரசந் தடியை 'படார்' என்று முறித்து, பரபரவென்று ஒரே மூச்சில், அதிலிருந்த அத்தனை இலைகளையும் உருவி உதிர்த்து விட்டு, வீட்டுக்குள் நுழைந்தாள்.

ஆழ்ந்த நித்திரையில் தன்னை மறந்து இருந்த பொன்னி, "அம்மா!.. அம்மா!... அடியாதணே... அடியாதணே..." என்று கதறியபடி வெளியே ஓடினாள்.

பொன்னியின் அழுகுரலில் திடுக்கிட்டு எழுந்து, 'என்ன நடக்குமோ?... ஏது சம்பவிக்குமோ? என்று அஞ்சியபடி, ஒரு பக்கம் ஒதுங்கிக் குந்திக் கொண்டு இருந்தாள், சின்னி. வைரவனும் எழுந்து, ஒரு மூச்சு அழுது விட்டு மீண்டும் படுத்துக் கொண்டான்.

அடுக்களைக்குள் நுழைந்து, 'விறு விறு' என்று எதோ இயந்திரம் போல் இயங்கினாள், செல்லி.

அடுப்பிலிருந்த சிறு முட்டியில், நீர் கொதித்துக் கொண்டிருந்தது. அதில் எழுந்து உடைந்த குமிழிகளைப் போல் செல்லியின் உள்ளத்திலும் எழுந்த ஆத்திரமும் கோபமும் நிமிடத்துக்கு நிமிடம் பொங்குவதும், பின் உடைவதுமாக இருந்தன.

சின்னி, பீளை சார்ந்த தன் கண்களைக் கசக்கிக் கொண்டு, பிறந்த மேனியோடு தன் தாயையே பார்த்துக் கொண்டிருந்தாள். வைரவன், காய்ச்சல் வேகத்தில் ஏதோ பிதற்றிக் கொண்டிருந்தான். பொன்னியின் விக்கல் குரல், வெளித் திண்ணைப் பக்கமாக ஒலித்துக் கொண்டிருந்தது.

இவை ஒன்றையும் கவனியாது, அவசர அவசரமாகத் தன் வேலைகளைப் பார்த்துக் கொண்டு இருந்தாள், செல்லி. அவளுடைய கவனம் எல்லாம் எங்கோ சென்று கொண்டு இருந்தது. வாய், அடிக்கடி "நல்லாச் செண்டு போச்சுது.." என்ற அரற்றிக் கொண்டு இருந்தது. நெளிந்த அலுமினியச் சட்டியில் ஊற்றிய தேநீரை ஆற்றி எடுத்து, ஒரு குவளையில் சின்னிக்குக் கொடுத்து விட்டு, தானும் கொஞ்சம் எடுத்துக் கொண்டாள், செல்லி.

"என்னணே!... தேத்தண்ணி இனிக்க இல்லே..." என்று மெல்லிய குரலிற் சிணுங்கினாள், சின்னி.

"ஓமடீ... ஓம்!.. உன்ரை கொப்பன் வச்சிட்டுப் போன ஆதனத்தை

வித்துத்தான்.. நான் இனிச் சீனி வாங்க வேணும்..." என்று படபடத்தாள், செல்லி.

சின்னி, அவளை நிமிர்ந்து கூடப் பார்க்காமல், வெறுந் தேநீரை அப்படியே மடமடவென்று பருகி முடித்தாள்.

மூலையில் இருந்த தகரப் பெட்டிக்குள் கையை விட்டு எதையோ தேடினாள், செல்லி. கைக்குள் ஒரு காய்ந்த வெற்றிலைச் சருகும் உளுத்துப் போன இரண்டொரு பாக்குத் துண்டுகளும் அகப்பட்டன. அவற்றை எடுத்து 'மளமள' வென்று வாய்க்குள் திணித்துக் கொண்டு, காய்ந்து கரடு பற்றிப் போயிருந்த சுண்ணாம்பிலும் கொஞ்சம் எடுத்தாள். பின், புகையிலை நெட்டியாவது கிடைக்காதா? என்று பெட்டிக்குள் மீண்டும் தடவினாள். ம்!.. ஏமாற்றம் தான் அவளுக்குக் கிடைத்தது. இப்படி எத்தனை ஏமாற்றங்களைக் கண்ட செல்லிக்கு, இது எம்மாத்திரம்? தான் உடுத்தியிருந்த சேலையை நன்றாக வரிந்து கட்டிக் கொண்டு, மூலையில் அடுக்கடுக்காக வைத்திருந்த அழுக்குத் துணி மூடைகளில் ஒன்றை முட்டி மோதித் தூக்கி, தன் சிரசில் வைத்துக் கொண்டாள், செல்லி. இரண்டு மூடைகளையாவது கொண்டு போகலாம் என்ற தைரியம் அவளுக்கு இருந்தது. இருந்தும், உதவுவார் ஒருவரும் இல்லையே!

பொறுத்துப் பொறுத்துப் பார்த்தாள்: பொன்னியாவது வந்து, உதவுவாள் என்று. அவள் கூட வரவில்லை.

"எடீ! பொன்னி..! .... இஞ்ச வாவண்டீ.... ஏண்டீ, என்னைப் பச்சையாகத்

தின்னத் திரியிறியல்?...." என்று அழுமாப் போல் கூறினாள், செல்லி.

தாயின் நிலையை அறிந்து ஓடி வந்தாள், பொன்னி. செல்லியின் கோபம் எல்லாம் பஞ்சாய்ப் பறந்து விட்டன. தாய்மையும் சேய்மையும் துளிர் விட்டுக் கொண்டன.

தாயைப் பெருஞ் சுமையோடு வெளியே அனுப்ப, படலை வரை வந்து நின்றாள், பொன்னி.

"பிள்ளே.. அடுப்பில இருக்கிற தேத்தண்ணியத் தம்பிக்கும் குடுத்திட்டு... நீயும் குடி... சின்னிக்கும் கொஞ்சம் குடு.. தம்பியப் பரியாரியிட்ட கொண்டு போ.... அவனுக்கு நாளைக்குச் சல்லி தாரனெண்டு சொல்லு.. விடிஞ்ச பிறகு மதவடி முத்தரின்ர கடையில ரொட்டி வாங்கி.. நீங்க திண்டிட்டு எனக்கும் அங்க கொண்டு வா.. வீட்டப் பாத்துக்கோ..." என்று இப்படிப் பல கட்டளைகளைப் பிறப்பித்தபடி, சுமையுடன் தெரு ஒழுங்கையைக் கடந்து கொண்டு இருந்தாள், செல்லி.

* *** *

கிழக்கு வானில், இன்னும் காலை இருள் நீங்காமலே இருந்தது. அக்கம் பக்கத்துக் கோழிகள் இன்னும் கூவிக்கொண்டு இருந்தன. இடைக்கிடை காகங்களும் கரைந்து கொண்டு சென்றன.

செல்லியின் பழக்கப்பட்ட கால்கள், உடுப்பிட்டிக் கிராமக் குளத்து வண்ணார் துறைக்குச் சென்று கொண்டிருந்தன. சிலர் தவறு என்று தெரியாமல் வாழ்க்கையில் வழுக்கி விழுவது போல், இரண்டொரு

தடவை அவளுடைய கால்கள் அவளை அறியாமலேயே இடறிக் கொண்டன. என்றாலும் அவை பின்பு, நேரிய வழியை நோக்கி முன்னேறிக் கொண்டன.

தலையிலே பெருஞ்சுமையும், நடையிலே பெரும் வேகமும் முன்னின்று தள்ள, 'விசுக் விசுக்' என்று தன் கைகளை வீசிக் கொண்டு இருந்தாள், அவள். அத்துடன், அடிக்கடி "ஐயோ! நல்லாச் செண்டு போச்சே!... அந்த அறுவான் வந்திடப் போறானே..." என்றும் அவளுடைய வாய் முணுமுணுத்துக் கொண்டது. பற்றாக் குறைக்கு அவளுடைய சிந்தனையும் சிதறிச் சிதறிச் சுழல ஆரம்பித்துக் கொண்டது. அது ஒரு முறை, அவளுடைய வீட்டை நோக்கிச் சென்று அங்கே, அன்று விடியற் காலையில் அவள் நடத்திய 'அட்டகாசங்களை'க் கண்டாள்.

பொன்னிதான் அவளுடைய மூத்த பெண். வயதிற் சிறியவளாக இருந்தும் அவள் செய்யும் உதவிகள்? எந்த வேலை என்றாலும் அவள் செய்யத் தயங்க மாட்டாள். வீட்டு வேலைகளோடு தனக்கு உதவியாக அழுக்குத் துணிகளைக் கொண்டு வருவாள். வெள்ளாவி பிடிப்பாள் - சிரட்டைக் கரி எடுப்பாள் - 'இஸ்திரி' பெட்டி பிடிப்பாள். ஐயோ! அந்தக் குழந்தைப் பெட்டை செய்யும் வேலைகள் தான் எவ்வளவு? தம்பி தங்கைக்குச் செய்ய வேண்டிய அத்தனை கடமைகளையும், ஒரு தாயைப் போல் இருந்து, அவள் தானே கவனிக்கிறாள்?... அந்தப் பச்சை மண்ணுக்கு அலுப்பிருக்காதே?... ஆத்திரத்தில ஊத்தின தண்ணியக் கூடக் குடுக் இல்லியே, நான்!..." என்று எண்ணிக் கொண்டு இருக்கும் போதே, அவளுடைய கண்களில் இருந்து நீர் பெருகி, உடம்பில் ஊறிய வியர்வையோடு கலந்தோடிக்

கொண்டது. இதை அவள் நினைத்தும் மனம் ஆறவில்லை. அதற்குள், தன் கடந்த காலத்து நினைவுச் சுவடுகளையும் எங்கோ தூரத்தில் மங்கலாகக் கண்டாள், செல்லி. அவற்றை அவள் நினையாது இருக்க எவ்வளவோ முயன்றாள். முடியவில்லை. பெருக்கெடுத்த வெள்ளம் போல், அது அவளருகில் வந்தது.

செல்லியும், இளமையில் இருந்தே வறுமையில் வாட வேண்டும் எனப் பிறந்தவள், மற்ற ஒடுக்கப்பட்ட மக்களைப் போல்! பணத்தில் முதலிடம் இல்லை. தரத்தில் முதன்மை இல்லை. சமுதாயத்தில் மதிப்பில்லை! மனிதனுக்கு முன்னே மனிதன் சரிசமனாக நிற்க முடியவில்லை.

சின்னானைக் கலியாணஞ் செய்த சிறிது காலம் அவள், கவலை இல்லாமல் வாழத்தான் செய்தாள்.

சின்னான் ஊதாரி அல்ல - நல்ல உழைப்பாளி. மெய் வருத்தம் பாராதவன். தன்னுடைய முழுத் திறமையால், செல்லியைக் கரம்பிடித்த மூன்றாவது மாதத்துக்குள்ளேயே அந்த ஊருக்குள் ஒரு 'லோன்றி'யைத் திறந்து கொண்டான். அதில், பத்துப்பேர் வரை தொழில் செய்தார்கள் என்றால் அவனுடைய தொழில் விருத்தியைக் கேட்க வேண்டுமா?

தன் இனத்துக்குள்ளேயே, 'முதலாளி' என்ற பெயரோடு இருந்தான், சின்னான். அந்தப் பெருமையில் செல்லிக்கும் பெரும் பங்கிருந்தது.

ஆனால், அந்தப் 'பட்டமும்' பவிசும் நீண்ட நாள்களுக்கு நீடிக்கவில்லையே!.

சின்னான் ஊருக்குள்ளேயே 'நடப்பாகத் திரிகிறான்' என்று 'நல்ல சாதிக்' காரரோடு, அவனுடைய ஆள்களும் எரிந்து புகைந்தார்கள். முடிவு? நோயோடு படுக்கையில் படுத்தான். ஆண்டியுமானான். 'லோன்றிக் கடை' அவனுடைய தொழிலாளியான அம்பலத்தின் கைக்கு மாறிற்று.

பிறகென்ன? ஒரு நாள் சின்னான் கண்களை மூடிக் கொண்டான்.

செல்லி மூன்று பிள்ளைகளோடு ஆலாவாகப் பறக்கிறாள். தன்னினத் தொழிலாளிகளுக்கு 'முதலாளி அம்மா' ஆக இருந்த செல்லி, இப்பொழுது அந்தத் தொழிலாளிகளுக்கே, தொழிலாளியாக இருக்கிறாள்.

ஊருக்குள், இப்பொழுது மூலைக்கு மூலை 'லேன்றிகள்' முளைத்து விட்டன. வீடுகளுக்குச் சென்று அழுக்கு எடுக்கும் சலவைத் தொழிலாளிகளுக்கு முன்பு போல் வேலை இல்லை. அப்படி இருக்க, செல்லியின் பிழைப்பு மட்டும் எப்படி இருக்க முடியும்?

'லோன்றி' முதலாளிகளுக்கு துணிகளைத் தோய்த்தும் மினுக்கியும் கொடுத்து, அவர்கள் தரும் இரண்டு காசுக்காக, செல்லி காத்திருந்தாள். அவளைப் போல்தான் இப்பொழுது பல தொழிலாளிகள் அந்தக் கிராமத்தில் இருக்கிறார்கள். அதிலும், அந்த முதலாளிகள் செய்யும் அட்டகாசங்கள்?

வேலையில் சிறிது நேரம் தாமதம் ஏற்பட்டாலே போதும்! வசைமாரியும், வேலை இல்லை என்ற பேரிடியும் அவர்களை முன்னறிவித்தல்

இல்லாமல் ஓடோடி வந்து விடும். இந்தப் பயம் தான் செல்லியை காலையில் அந்த நிலைக்குக் கொண்டு வந்தது.

அம்பலம் தான், இப்பொழுது செல்லியின் முதலாளி.

அவன் செய்யும் சேட்டைகள்?

சின்னான் இறந்து சாம்பல் காடாத்து முடியும் முன்பே, அவளைப் பெண்டாள வந்தவன் தானே அவன்?

எல்லோரும் எண்ணுவது போல், அம்பலம் அப்படி ஒரு கெட்ட மனிதன் அல்ல. கொஞ்சம் குறுக்கு மனம் இருக்கிறதே ஒழிய, மற்றப்படி அவன் எல்லா வழியிலும் நல்லவன். செல்லி விரும்பி இருந்தால் அம்பலத்தோடு கஷ்டம் இல்லாமல் வாழ்ந்திருக்கலாம்.

ஆனால், அவளோ? தன்மானம் மிக்கவளாயிற்றே!

அம்பலம் இன்னும் திருமணம் ஆகாதவன். வயதும் செல்லியை ஒட்டித்தான் இருக்கும்.

"என்ன செல்லீ!.. இஞ்ச இருக்கு குளம்.. நீ எங்கேயடி போறே?...." என்ற குரல் அவளை நிதானப்படுத்தியது.

திரும்பிப் பார்த்தாள் செல்லி. குளத்தையும் கடந்து தன் கால்கள் எங்கோ செல்கின்றனவே, என்று நினைத்துச் சற்று அவமானத்தோடு-

"இல்லயணே அக்கா... வீட்டு நினைவோட வந்தனான்.. அதுதான்..." என்று கேட்ட தன் சகத் தொழிலாளியான பாராத்தைக் கிழவிக்குப்

பதில் கூறிக் கொண்டே, குளத்தின் படித்துறையில் இறங்கி, தண்ணீருக்கு அருகிற் சென்றாள், அவள்.

"பொத்... பொத்...!" என்று, தான் கொண்டு வந்த அழுக்கு மூடைகளை நிலத்திற் போட்டாள். சேலையை வரிந்து, முழங்கால் வரை விட்டுக் கட்டிக் கொண்டு, தன் கடமையில் ஈடுபடத் தொடங்கினாள், செல்லி.

* *** *

காலை வெயில் 'சுள்' என்று எரித்துக் கொண்டிருந்தது. கதிரொளி குளத்து நீரிற் பட்டு வெள்ளி முலாம் பூசியது போல், ஒளி வீசிக் கொண்டு இருந்தது. வண்ணாரத் துறையில் "தொப்.. தொப்..." என்று வெளி வந்த ஒலி, அந்த ஏகாந்தமான காலை வேளையில், ஏதோ ஒரு வாத்திய இசை முழங்குவது போலிருந்தது.

செல்லி தன் கருமமே கண்ணாக இருந்தாள்.

"ஏண்டி.. தெய்வானே.. அந்தப் புளியடிப் பொன்னி.. அதுதாண்டி.... அந்தப் புருசனைத் தின்னி... அவளிட்ட உன்ரை தங்கச்சின்ரை மேன், முருகன் போய் வாரானாம்...."

"நான் என்னக்கா... செய்ய?... அந்த அறுவாள் மருந்தோ... மாயமோ... போட்டுப் பிள்ளய மயக்கிப் போட்டாள்... உழைக்கிறதை எல்லாம் அங்க தான் கொண்டு போய்க் கொட்டுறான்...."

சற்றுத் தூரத்தில் தோய்த்துக் கொண்டு இருந்த பாராத்தைக் கிழவிக்கும் தெய்வாணைக்கும் இடையில் 'ஊர்வம்பு', மிகவும் தடல்புடலாக நடந்து

கொண்டிருந்தது. அது, 'பட் பட்' என்று செல்லியின் காதிலும் விழுந்து கொண்டிருந்தது.

உவளவையளுக்கு, உதுதான் வேலை!' என்று அலுத்து, தன்னைச் சமாதானஞ் செய்து கொண்டாள், செல்லி. ஆனால்... சீலை ஒன்றை நன்றாகத் தோய்த்து, முறுக்கிப் பிழிந்து கொண்டிருந்த அவள் திடீரென்று நிதானித்து நிமிர்ந்தாள். அவளுடைய சிந்தனை சற்றுச் சுழன்று கொடுத்தது.

"நானும் அம்பலத்தை முடிச்சிருந்தா... அல்லது அவனுக்கு இடம் கொடுத்தால்.. இப்படித் தானே ஊரில கதைப்பினம்...." என்று அவளுடைய உள்ளுணர்வு எடுத்துக் கூறியது.

அதே நேரம், அம்பலமும் அங்கு வந்து நின்றான்.

கண்களைக் கசக்கி விட்டு, நிமிர்ந்து பார்த்தாள், செல்லி. உண்மையாகவே அம்பலம் தன் இரு கைகளை இடுப்பில் தாங்கிக் கொண்டு அங்கு நின்றான். அந்த நேரத்தில், பின்னாலிருந்து வீசிய சூரிய ஒளி அவனுடைய உடலில் வீழ்ந்து, அவனுடைய உருவத்தைப் பெரும் பூதாகாரமாகவே காட்டிக் கொண்டிருந்தது.

சிறிது அலட்சியமாக அவனைப் பார்த்து விட்டுக் குனிந்து தன் வேலையைக் கவனிக்கத் தொடங்கினாள், செல்லி.

இந்தச் செயல், அம்பலத்தின் மனதை வெகுவாக உறுத்திற்று.

"செல்லி! அந்த மூண்டு ஐஞ்சு எட்டும் புள்ளடியும் போட்ட பட்டுச்

சட்டைய முந்தா நாள் கொண்டு வரச் சொன்ன நான் அல்ல..... ஏன் அதக் கொண்டு வரயில்ல.... அந்தச் சட்டக்காரன், இப்ப நாலு நாளா நடக்கிறான்...'' என்று ஏளனமும் ஆணவமும் தொனிக்க ஒரு மாதிரியாகப் பார்த்துக் கேட்டான் அம்பலம்.

அந்த நேரமே, தான் கொண்டு வந்த துணிகளை எல்லாம் அவன் முகத்திலேயே எறிந்து விட்டு "போதுமடா.. உன்ரை வேலையும், தார பிச்சைக் காசும்!.'' என்று கூறியிருப்பாள், செல்வி. ஆனால், அவளுடைய வறுமையும் அதன் அழுத்தமும் அவளைப் பார்த்துக் கண் சிமிட்டின. பொறுத்துக் கொண்டாள்.

"மினுக்கி வச்சிருக்கிறன்... பிள்ளயிட்டக் குடுத்து அனுப்புறன்....'' என்று மட்டும், மெதுவாகக் கூறிவிட்டு, அழுக்குத் துணி ஒன்றை நீரில் தோய்த்து, 'படார் படார்' என்று கல்லில் அடித்தாள், செல்வி. கல்லில் அடித்த ஒவ்வொரு அடியும் அவளுடைய இதயக் குமுறலைப் புலப்படுத்துவதாக இருந்தது.

அம்பலம் அவளுடைய இளமை கொஞ்சும் அழகைச் சுவைத்துக் கொண்டு அங்கே நின்றான். அடுத்த துறையில் துணிகளைத் தோய்த்துக் கொண்டிருந்த கிழவிகளின் 'உள்மொழிகள்' செல்வியின் காதில் விழுந்தன. அவற்றைத் தாங்க முடியாமல் தவித்தாள், அந்தப் பேதை. இருந்தும் முடிந்த வரை, அடக்கிக் கொண்டாள்.

"எணே.. இந்தானே.. தேத்தண்ணி!....'' என்று குரல் கொடுத்தபடி, குளக்கட்டில் வந்து நின்றாள், செல்வியின் மூத்தமகள், பொன்னி.

நிமிர்ந்து பார்த்தாள், செல்லி. அதே சமயம், அம்பலமும் பொன்னியை ஏற இறங்கப் பார்த்தான்.

"வீட்டில மினுக்கி வச்சிருக்கிறன்.. பிள்ளயிட்ட குடுத்து அனுப்புறன் எண்டு சொன்னியே.... இங்க, உன்ரை மேள் போட்டு ஆட்டுறாளே, அந்த சட்டய?..." என்று எக்காளதோடு ஒரு போடு போட்டான், அம்பலம்.

"ஏண்டீ... உந்தச் சட்டயப் போட்டே?" என்று கத்தியவாறு, பொன்னியின் கன்னத்தில் ஓர் அறை விட்டாள், செல்லி.

"அம்மா!...." என்று கதறியபடி, நின்ற இடத்திலேயே விழுந்து, படித்துறையில் உருண்டு குளத்துக்குள், விழுந்தாள் பொன்னி.

இதனை யாருமே அங்கு எதிர்பார்க்கவில்லை.

உயரமான குளக் கட்டிலிருந்து, எக்கச்சக்கமாக பொன்னி விழுந்து விட்டாள். படிக்கட்டில் இருந்த கரடுமுரடான முருகைக் கற்கள் அந்தப் பிஞ்சு உடலை நன்றாகப் பதம் பார்த்துக் கொண்டன. அத்தோடு, அவள் விழுந்த இடமும் ஆழமாக இருந்தது. ஒரு கண நேரத்தில் மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்கத் தலைப்பட்டாள், பொன்னி.

"அடிப் பாவீ!... என்னடி செய்தே...!?"

என்று கூவியவாறு அம்பலம் முன்னே ஓடி வந்தான். அவனைத் தொடர்ந்து பாராத்தைக் கிழவியும் செய்வாணையும் விழுந்தடித்துக் கொண்டு ஓடினார்கள்.

செல்லி, சிலையாக நின்றாள். அவள் உடலில் இருந்து நீர் சொட்டுச் சொட்டாகக் கொட்டிக் கொண்டிருந்தது.

"அம்மா.... என்ரை, பாவாடை ஊத்தையா இருந்துது.. பரியாரியின்ரை வீட்ட போக இருந்தனான்.... அதுதான், இந்தப் பாவாடையப் போட்டனான்... அந்தா.. தம்பி!.... வாரான்... நான் போறன்..."

இவ்வளவு தான், கடைசியாக விட்ட மூச்சோடு கூறினாள், பொன்னி.

"ஐயோ! என்ரை பொன்னீ!... என்ரை மேளே!.. நான் தானடி உனக்கு வினை!!!.... என்று அழுது புரண்டாள், செல்லி.

"இல்ல.... நான் தானடி. உனக்கு வினை!...." என்று கண்ணீர் விட்டு முணங்கியபடி எழுந்து போய்க் கொண்டிருந்தான், அம்பலம்.

*

**நன்றி: "வீரகேசரி" - வார இதழ்**

**29-10-1961**

5

# சுரண்டலின் நிழல்கள்

"மாரிமுத்து ஐயா...... என்ன?!...... மிச்சம் நாளா..... உங்கட பாக்கிக் கணக்கு இருக்குது!..........போன வருஷத்தில எங்கிட்ட சாமான் வாங்கினது, தானே?.... கணக்கு முடிக்கிறது இல்லியா?.."

"ஓம், முதலாளி... இந்தப்பயணம் சூடு மிதிச்ச உடன கடனத் தந்து போடுறன்... பொறுத்த தோடக் கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்க......"

"சரி... சரி... சொணக்கம் வாணாம்!.... இப்ப என்னத்துக்கு இந்த நேரத்தில வந்தது?...."

"அது தான் முதலாளி.... இண்டைக்கு... பின்நேரம் சூடு மிதிக்கப் போறன்... மாடு வேணும்".

"மாடா?.....ம்.....சரி சரி....எத்தின மாடு வேணும்?......"

"நாலு புணையல் தாங்க, முதலாளி.... இந்தப் பயணம் விளைச்சலும்

நல்லா இல்லை... இருக்கிறத புது வருஷத்துக்கு முந்தி.... மிதிச்சுப் போடலாம் எண்டு பார்க்கிறன்...."

"சரி.... சரி... மாடு தாரன்.... ஆனா, இந்தப்பயணம் புணையலுக்கு அறப்பூசல் நெல்லு கூடத்தரவேணும் தெரிஞ்சுதா!... நெல்லு வெதைக்கிற சமயமும் எங்கிட்டத்தானே மாடு கொண்டு போனது... அதுக்கும் சேத்து புணையலுக்கு அறப்பூசல் நெல்லு கூடத் தரவேணும்... நெனவு இருக்குது தானே?"

பழைய கணக்கெல்லாம் புதுக்கணக்காக முதலாளி சொன்னதும், மாரிமுத்துவின் தலை சுற்றியது. என்ன செய்கிறது?

அந்நாளில் முதலாளியை விட்டால், அந்தக் கிராமத்தில் அவருக்கு உதவி செய்யக் கூடியவர் யார் இருக்கிறார்கள்?

அந்தக் கிராமம் குடியேற்றவாசிகள் வாழும் ஒரு சிறிய கிராமம். நகரத்தில் இருந்து இருபது மைல் கல் தொலைவில் இருக்கிறது. கிராமத்தில் அரனோளிஸ் முதலாளியின் கடை ஒன்றுதான் இருக்கிறது. அந்தக் கடையில் கிராமவாசிகளுக்கு வேண்டிய புகையிலை, சுருட்டு, உப்புக் கருவாடு, உப்பு, கொறக்காப் புளி போன்ற அன்றாடம் தேவைப்படும் சாமான்கள்தான் இருக்கும். மற்றும் பெரிய தேவைகளுக்கு அவர்கள் வண்டிலைக் கட்டிக்கொண்டு நகரத்துக்குப் போய் வந்தால்தான் உண்டு.

இந்தச் சாமான்களையும் அவர்கள் அவ்வப்போது அரனோளிஸ் கடையில் 'பண்டமாற்று'க் கணக்கில் பற்று வரவு செய்து கொள்வார்கள்.

கையில் தானியங்கள் இல்லாத போது, கடன் சொல்லி நெல் அறுவடைக் காலத்திற் கணக்குகளை அடைத்துக் கொள்வார்கள்.

கடன் வைப்பில், அரனோளிஸ் முதலாளி வைப்பது தான் கணக்கு. அவர் காட்டுங் கணக்குகளுக்கு யாரும் அங்கு 'அப்பீல்' செய்வது கிடையாது.

* *** *

குடியேற்ற வாசிகளில் ஒருவராக வந்து குடியேறிய அரனோளிஸ், ஆரம்பத்தில் ஒரு சிறு மேசையை மட்டும் வைத்து புகையிலை, சுருட்டு என்று விற்றார். நாளடைவில் கொஞ்சம் கொஞ்சமாக நகரில் இருந்து பல சரக்குகளைக் கொண்டு வந்து பெட்டிக் கடையாக்கி இன்று பெரிய கடையாக்கி, 'கடே மொதலாளி'என்ற கௌரவப் பெயரோடு வெகு நடப்பாக இருக்கிறார். நெல் விதைப்புக் காலத்தில் சில்லறைச் சாமான்களாகவும், வட்டிக்குப் பணமாகவும் விவசாயி களுக்குக் கடன் கொடுத்து, அறுவடைக் காலத்தில் வட்டியும் முதலுமாகக் கறந்து கொள்ளுவார். கிராமத்து சந்தியில்தான் முதலாளியின் வீட்டு முகப்பில், கடை இருக்கிறது. அவரிடம் ஏராளமாக எருமை மாடுகளும் இருக்கின்றன. விவசாயிகளின் கமங்களில் வேலை செய்ய எருமைகளை வாடகைக்குக் கொடுத்து ஒன்றுக்குப் பத்தாகக் கணக்கெழுதி, அறுவடையின் போது. நெல்லாகக் கடனை வசூல் செய்து கொள்வார், முதலாளி.

அவருடைய சுரண்டலை அந்தப் பாவப்பட்ட ஏழை விவசாயிகளும்

கண்டு கொள்வதில்லை. கண்டாலும் அவரை எதிர்த்து நிற்க அவர்களிடம் திராணி இருக்கவில்லை.

அந்த 'மதிப்பார்ந்த பிரஜை'களில் ஒருவர்தான், மாரிமுத்து. தலைக்கு மேல் ஏறிய கடன் சுமையுடன் அதற்கு மேலும் சுமை ஏற்ற அன்று காலையிலேயே அரனோளிஸ் முதலாளியின் வீட்டு வாசலில் வந்து நிற்கிறார்.

“மாரிமுத்து ஐயா..... பட்டிக்குப் போய் குடாபண்டாகிட்ட நாங் சொன்னேன் எண்டு நாலு புணையலைக் கேட்டு வாங்கிக் கொண்டு போங்க.... ஆனா ஒண்டு சொல்லிப் போடுறன். இந்தப் பயணம் பாக்கியில் மிச்சம் வய்க்காம குடுக்க வேணும்.... தெரியுமா?!....” என்று கறாராகச் சொல்லிக் கொண்டு எங்கோ அவசர அவசரமாகப் புறப்பட்டுச் சென்றார்.

கடனுக்கு மேல் கடன் பெருகியிருக்க, இந்த முறையும் மாடு தருவாரரோ என்று ஏக்கத்தோடு வந்த மாரிமுத்துவுக்கு முதலாளியின் பதில் நெஞ்சில் பால் வார்த்தது. மிகுந்த மகிழ்ச்சியோடு தோளில் இருந்த சால்வைத் துண்டைக் எடுத்து தலையைக் சுற்றி வரிந்து முண்டாசாகக் கட்டினார். வேட்டியை மடித்து முழங்கால்களுக்கு மேல் உயர்த்தி இறுக்கிக் கட்டினார் - கையில் தான் கொண்டு வந்த காட்டுக் கறிவேப்பிலைக் 'கேட்டிக்' கம்பையும் எடுத்துக் கொண்டு தன்னுடன் வந்த உதவியாள் பின் தொடர ஒழுங்கை வழியால், காட்டுப் பக்கமாக இருந்த முதலாளியின் மாட்டுப் பட்டியை நோக்கி உற்சாகமாக நடந்தார்.

பட்டிக்கு வந்ததும் குடாபண்டாவைத் தேடிப் பிடித்து பட்டிக்குள் நின்ற நல்ல வாட்ட சாட்டமான நான்கு நாம்பன் எருமைகளை நான்கு எருமைப் பசுக்களுடன் வரிசைப்படுத்திப் பிணைத்துக் கொண்டு மீண்டும் ஒழுங்கை வழியால் உதவியாளுடன் தன் வயற்காட்டுக்குப் புறப்பட்டடர், மாரிமுத்தர்.

பின்னுக்கும் பக்கவாட்டிலும் உதவியாள் மாறிமாறி வர, மாரிமுத்தர் மாடுகளுக்குப் பின்னால் அவற்றை ஓட்டிக் கொண்டு வந்தார்.

மாடுகள் முதலில் கொஞ்சம் முரண்டு பண்ணினாலும் பின்னர் அவர்களின் வழிநடத்தலுக்கும் "ஓவ்......ஓவ்..." என்ற அதட்டலுக்கும் அடங்கி அமைதியாக முன் சென்றன.

உச்சி வெயில் தலைக்கு மேல் ஏறிக் கொண்டிருந்தது. மாடுகள் அந்தரப்படாமல் ஆறுதலாகப் போய்க் கொண்டிருந்தன.

அப்பொழுது-

மாரிமுத்தரின் சிந்தனை அவரின் கடந்த கால நினைவலையில் ஊர்ந்துவர, அவர் இனந் தெரியாத சுகாநுபவத்தில் மிதந்தார்.

* *** *

**அ**ந்த நாளில் -

நாட்டில் வெள்ளைக்காரன் ஆட்சி நடந்தது. கிராமங்களும் நகரங்களும் அரசாங்க ஏஜன்ட் துரைமாரால் நிருவாகஞ் செய்யப்பட்டு வந்தன.

இலஞ்சம் ஊழல் என்று இல்லாவிட்டாலும் ஆங்கிலம் படித்த சுதேசியத் துரைமார்களின் கெடுபிடிகளில் நாட்டு ஏழைகள் "தூணில் இருந்து கம்பத்துக்கும், கம்பத்தில் இருந்து தூணுக்கும்" பந்தாடப் பட்டார்கள்.

அப்பொழுதுதான், அரசாங்க சபையில் நிறைவேறிய காணி அபிவிருத்தித் திட்டங்களும், குடியேற்றத் திட்டங்களும் நாட்டுக்கு அறிமுகப்படுத்தப்பட்டன. அதன் பயனாக, வடமத்திய மாகாணத்தில் தூர்ந்து போன பழைய மன்னர்களால் கட்டிக் காத்த குளங்களும், வரண்டு கரடு பற்றித் தேடுவார் இல்லாமல் இருந்த தரிசு நிலங்களும் புனருத்தாரணம் பெற வாய்ப்பேற்றப்பட்டன. அதன் பேரில், கலா வெவாக் குளத்தின் யோதலை என்ற இராட்சதக் கால்வாய் தூரெடுக்கப்பட்டு. வாவியின் நீர் அதன் மூலம் நாச்சியாதீவு எனுங் குளத்துக்குக் கொண்டு வரப்பட்டது. அந்தப் பெருங்குளத்தில் இருந்து மேற்கு முகமாக மேலும் ஒரு பெருங் கால்வாய் புதிதாக நிருமாணிக்கப் பட்டு அதனின்று இரு புறங்களிலும் பதினொரு சிறு கால்வாய்கள் காணி அபிவிருத்திக்காக அமைக்கப்பட்டன. அந்தக் கால்வாய்களை மையமாகக் கொண்டு ஒரு புதிய குடியேற்றம் உருவாகியது. அப்புதிய குடியேற்றம் இதோகம என்ற கிராமத்தை உருவாக்கியது. இந்தக் குடியேற்றத்துக்கு அநுராதபுரம் நகரை அண்டிய கிராமங்களிலும், மலையகம் மற்றும் கடற்கரையை அண்டிய கரையோரப் பிரதேசங் களிலும் இருந்து காணி இல்லாதவர்களுக்கு தொண்ணூற்றொன்பது வருடக் குத்தகையில் ( 99 year Lease) காணிகள் பகிர்ந்து அளிக்கப்பட்டன.

இதிற் பெரும்பாலும், பெரும்பான்மைச் சமூகத்தவரான சிங்களவர்களே

கூடிய பங்கைப் பெற்றனர். நாட்டின் சிறுபான்மையினரான தமிழருக்கு அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கிள்ளித் தெளிக்கப்பட்டன.

ஒவ்வொரு குடியேற்ற வாசிக்கும் ஐந்து ஏக்கர் பள்ளக் காணியும் இரண்டு ஏக்கர் மேட்டுக் காணியும் என காடர்ந்த பிரதேசங்கள் கிடைத்தன. நீர்ப்பாசனக் கால்வாய்கள் முழுமையாக நிருமாணிக்கப் படாத அக்காணிகளில் காட்டு யானை, கரடி, நரி போன்ற வன விலங்குகள்தான் வாழ்ந்தன.

காடுகளை அழித்து, அவற்றைக் கழனிகளாக மாற்ற அந்தக் குடியேற்றவாசிகள் மிகவும் சிரமப் பட்டார்கள். சிரமத்தைத் தாங்க முடியாதவர்கள் பலர், வந்த வழியே திரும்பிப் போக, எஞ்சியவர்கள் மட்டும் சிரமங்களுக்குள் நிலையூன்றினார்கள். அவர்கள்தான் தம்முயற்சியால் தமக்குக் கிடைத்த காணிகளில் காடுகளை அழித்து கழனி பெருக்கி, கால்வாய் நீருடன் வான்மழையையும் பெற்று கிதோகம என்ற புதுக் கிராமத்தைப் பொன் கொழிக்கும் பூமியாக மாற்றிய சிற்பிகளாக விளங்கினர்.

அநுராதபுரம் நகரில் இளங் குடும்பத்தினனாக சிறு தொழில்களிலும் சின்னஞ்சிறு வியாபாரங்களிலும் இருந்த மாரிமுத்துவுக்கும் கிதோகம குடியேற்றத் திட்டத்தில் காணி கிடைத்தது. ஆரம்ப நாளில் இரத்தத் துடிப்பில், முன்பின் விவசாயத்தில் ஈடுபடாத அவன் முழுக்க முழுக்க அந்தக் காட்டுப் பிரதேசத்தில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டான். தன்னந் தனியனாக, அத்திட்டத்தில் ஒன்பதாம் வாய்க்காலில் பெரும்பான்மைச் சமூகச் சூழலில் ஒரு தமிழனாக

வாழத் தலைப்பட்டான் மாரிமுத்து.

அவனுக்கு அந்நாளில் சிரமம் எதுவும் இருக்கவில்லை. உடன்பிறவாச் சகோதரங்கள் போல் அவர்கள் அவனுக்கு, அங்குள்ள எல்லோரும் "ஐயா... ஐயா......" என்று மரியாதையாகவும் நட்பாகவும் இருந்தார்கள். மாரிமுத்துவும் அவர்களுடன் இன, மத பேதம் எதுவும் இல்லாமல், வேறுபாடின்றி 'சகோதர விவசாயி' என வாழ்ந்தான்.

மற்றவர்களைப் போல் தனக்குக் கிடைத்த காட்டுக் காணியை இரண்டு ஆண்டுகளுக்குள் காடழித்து, எரித்து நிலத்தைக் கொத்தி, வான் மழையில் ஈரமாக்கி முதலில் 'சேனைப் பயிர்' விளைத்து வாழ்ந்தான், மாரிமுத்து. அதனையடுத்து, நாலைந்து ஆண்டுகளில் காணியில் எரிந்த மரக் கட்டைகளைப் பிடுங்கி, பள்ளக் காணியில் நெல் விளைக்க வரம்புகள் அமைத்து நீர்ப்பாசனத்துக்கு வாய்க்கால்களும் அமைத்தான், மேட்டுக் காணியையுந் திருத்தி நல்ல மா, பலா, தென்னை, கமுகு போன்ற வான் பயிர்களையும் நட்டு, தோப்பாக்கிக் கொண்டான். அத்தோடு, தோப்புக்கு மத்தியில் காட்டு மரந்தடிகளாலும், களி மண்ணாலும், வைக்கோலாலும் நல்லதொரு குடிசையையும் அமைத்து 'அசல் கிராமத்துக் கமக்காரன் 'ஆனான், மாரிமுத்து.

நகரில் அவருடைய மனைவி நான்கு பிள்ளைகளுடன் வாழ்ந்தாள். இவர் அடிக்கடி நகருக்குச் சென்று குடும்பத்தைக் கவனித்து வந்தாலும் அவருடைய சீவியம் நாளும் பொழுதும் கிராமத்தில் இருந்த வயற்காட்டிலும், தோட்டத் தோப்பிலுமே இருந்தது.

ஆரம்பத்தில், வயலும் தோட்டமும் மாரிமுத்துவின் அயரா முயற்சிகளுக்கும் உழைப்புக்கும் ஏற்ற பலனைத் தராவிட்டாலும் நாளடைவில் பலனைத் தந்தன.

இந்த இடையில் தான். இரண்டாம் உலக மகாயுத்தம் ஏற்பட்டு நாடு, யுத்த கெடுபிடிகளுக்குள் அவலப்பட்டது. அதிலும், நகரங்களே அதிகம் பாதிக்கப்பட்டன. ஜப்பான் குண்டுக்குப் பயந்து நகர மக்கள் கிராமத்துக்குள்ளும் காடுகளிலும் ஒதுங்கினார்கள். இந்த வேளையில், மாரிமுத்துவின் குடும்பமும் நகரிலிருந்து நிரந்தரமாக கிதோகம கிராமத்துக்கு இடம் பெயர்ந்து கொண்டது.

"மழை ஓய்ந்தும் தூவானம் ஓயவில்லை" என்ற கதையாக, நாலைந்து ஆண்டுகளுக்குள் உலகப்போர் முடிந்தும் நாட்டு மக்களின் அவலம் ஓயவில்லை. உணவுப் பஞ்சம் எங்கும் தலை விரித்து ஆடியது. நிலைமையச் சமாளிக்க அரசாங்கம் 'ரேஷன்' என்ற கூப்பன் பங்கீட்டு முறையைக் கொண்டு வந்து, உள்ள உணவைப் பகிர்ந்து விற்பனை செய்தது. அந்த நாளில் தான் நாட்டில் 'கூப்பன் மா' என்றும் 'அமெரிக்கன் மா' என்றும் கூறி கோதுமை மாவை அறிமுகப்படுத்தி இருந்தது. நெல்லரிசி மா, குரக்கன் மா, மரவள்ளி மா, ஒடியல் மா என்று தமது அன்றாட உணவில் பழக்கப்பட்ட மக்கள் 'கூப்பன் மா' என்ற விதேசிய மாவைத் தமது உணவுத் தேவைக்குப் பழக்கப்படுத்திக் கொள்ள ஆளானார்கள்.

இதே காலத்தில்தான், வான் மழையும் பொய்த்து விவசாயம் எல்லாம்

படுத்துக் கொண்டது. ஆறு, குளம்,குட்டை எல்லாம் வற்றி நீர்ப் பஞ்சமும் சேர்ந்து கொண்டது.

இந்த நிலையில், கிதோகம குடியேற்றத் திட்டத்திற் குடியேறிய விவசாயிகளும் தமது புதிய வாழ்வில் பஞ்சம், பசி, பட்டினி, நோய் நொடிகளில் மிகவும் துன்பப்பட்டார்கள். அப்பொழுது, மாரிமுத்துவும் சொல்ல முடியாத பொருளாதாரக் கஷ்டத்தில் மூழ்கியதோடு தனது அருமைக் குழந்தைகள் இரண்டைக் 'காலரா' நோய்க்கும் பறி கொடுத்தார்.

பல ஆண்டுகள் ஒன்றன் பின் ஒன்றாகப் பல கஷ்டங்களுக்குள் சிக்கித் தவித்த மக்களுக்குக் கடைசியாகக் கடந்த மாரி காலத்தில் வானங் கறுத்து ஓரிரு மழைத்துளிகள் பொழிய மனங் குளிர்ந்தார்கள். ஆறு குளங்களில் ஓரளவு நீர் நிறைந்து இருக்க, விவசாயிகள் தூர்ந்த கால்வாய்களைச் செப்பம் இட்டு பாதிக்குப் பாதி வயல்களில் நெல்லை விதைத்து இப்பொழுதுதான் அறுவடையைக் காணுகிறார்கள்.

அவர்களில் ஒருவராக மாரிமுத்துவும் இருக்கிறார். இப்பொழுது, மகப்பேற்றை எதிர்பார்த்து ஏங்கி நிற்கும் தாயைப் போல் மகிழ்சியும் ஏக்கமும் முன்னிற்க, தன்னை மறந்து ஒழுங்கையில் மாடுகளை ஓட்டிக் கொண்டு வந்தார்.

திடீரென்று, "ஓவ்..... ஓவ்........" என்ற கூக்குரலுடன் கத்திக் கொண்டு ஒழுங்கையில் இருந்து பக்கவாட்டில் காட்டுப் பக்கம் ஓடிய மாடுகளை உதவியாள் முன்னால் ஓடி மறித்து மடக்க முயன்றான்.

அந்தக் திமர் கூக்குரலில் திடுக்கிட்ட மாரிமுத்துவும் தன்னைக் சுதாகரித்துக் கொண்டு முன்னால் ஓடி, தடுமாறிய மாடுகளை மடக்க முயன்றார்.

இருவரும் மாடுகளை நிதானப்படுத்தி சாலைக்குக் கொண்டு வர மிகவும் சிரமப்பட்டார்கள். பின்னர் ஒருவாறு அவற்றை வரிசைப் படுத்தி, சாலைக்குக் கொண்டு வந்து தமது பயணத்தைத் தொடர்ந்தார்கள்.

உச்சிப் பொழுது நன்றாகச் சரிந்து, கொண்டிருந்தது, வெயிலின் அகோரம் தாங்க முடியாத மாடுகளும் களைத்து, அடிக்கடி முரண்டு பண்ணிக் கொண்டிருந்தன.

மாடுகளுடன் தமது வயலுக்குள் வந்த மாரிமுத்துவும் உதவியாளும் மாடுகளை வயலுக்குள் இருந்த குட்டைக்குள் விட்டார்கள். தண்ணீரைக் கண்ட எருமைகள் 'இனி இல்லை என்ற புளுகத்தில்' குட்டைக்குள் மூழ்கிப் படுத்துக் கொண்டன.

* *** *

அன்று மாலைப் பொழுது சாயும் நேரத்துக்குள் சூடு மிதிக்க எல்லா ஆயத்தங்களையும் செய்து கொண்டு, களத்து மேட்டுக்கு வந்த மாரிமுத்து சுறுசுறுப்பாக இயங்கினார். உதவிக்காக வேலை ஆள்களும் ஒவ்வொருவராக 'வேலைக்காரன் கம்பு'களுடன் களத்துக்கு வந்தார்கள். அதற்குள், மாரிமுத்து களத்து மேட்டுப் பிள்ளையாருக்குப் பொங்கலிட்டு, 'பொலியோ பொலி' என்று கூவி எல்லா நெற்போர்களிலும் இருந்து

ஒவ்வொரு பிடி நெற்கதிர்களை இழுத்து எடுத்து பிள்ளையாருக்கு முன்னால் வைத்து நெஞ்சுருகத் தேவாரம் பாடி பயபக்தியாகக் கும்பிட்டு எழுந்தார். அதன் பின் வேலைக்காரருடன் ஒரு பெரிய நெற்போரைப் பிரித்து அதில் பாதிக்கு மேல் கதிர்களைக் களத்து மையத்தில் குவித்தார்கள். குவியல் இரண்டாள் உயரத்துக்கு மேல் உயர்ந்து நிற்க, மாடுகள் சுற்றிச்சுற்றி வர அவற்றைப் பிணைத்துக் கட்டிச் சூடடிக்கத் தொடங்கினார்கள்.

களத்து மேடு இப்பொழுது நன்றாக இருட்டி விட்டது.'சிம்லி' லாந்தர் விளக்குகள் பக்கத்துக்கு ஒன்றாக நாலாபுறமும் ஏற, மாடுகளும் தாமும் அயர்வில்லாமல் வேலை செய்ய வேலைக்காரர் தமது 'சுரஞானம்' கணீரென்று ஒலிக்க கிராமியப் பாடலை மாறி மாறிப் பாடத் தொடங்கினார்கள்.

இவ்விதம், இரவு பகலாக மூன்று தினங்கள் தொடர்ந்து வேலை செய்து. நெல்லையும் பதரையும் கதிரிலிருந்து பிரித்து எடுத்துக் குவித்தார்கள். பின்பு நான்காம் நாள் நெல்மணிகளைப் பதரில் இருந்து வேறாகத் தூற்றிக் களத்து மையத்தில் நீளவாட்டில் குவித்தார்கள். அதன்பின் களத்தில் பாவித்த வேலைக்காரன் கம்புகள், பொலி கூட்டுமாறுகள், தட்டுப் பலகைகள், சுளகுகள் போன்ற பொருள்களை மிகவும் பக்தியோடு வைத்தார்கள். அத்தோடு, நெல் அளக்கும் பூசல் அளவுப் பெட்டியையும் வைத்தார்கள். கடைசியாக, நீளவாட்டில் குவிந்திருந்த நெற்குவியலுக்கு இரு மருங்கிலும் இரண்டு சுளகில் பிள்ளையாரை வணங்கி பிள்ளையார் நெல்லைக் கோலி எடுத்து

வைத்து விட்டு, விளைந்த அறுவடையை அளந்து கோணிப் பைகளில் கட்டினார்கள்.

அறுவடை, இருநூறு பூசல்களைத் தானும் எட்டவில்லை. மாரிமுத்துவின் முகம் வாடிச் சுருங்கியது.

அப்பொழுதுதான் களத்து மேட்டை அண்டிய தெருவில் இரண்டு இரட்டை மாட்டு வண்டில்கள் வந்து நின்ற ஆரவாரம் கேட்டது. அதனைத் தொடர்ந்து வயல்களுக்கு ஊடாக ஒரு வெள்ளை வேட்டி உருவம் வந்து வைக்கோல் குவியலுக்கு மேலாக நிமிர்ந்தது.

அது வேறு யாருமில்லை. மாரிமுத்துவுடன் கொடுக்கல் வாங்கல் செய்யும் தும்பளை வியாபாரி. சபாபதிப்பிள்ளைதான் அவர்.

அவர் மாரிமுத்தின் நீண்டநாள் நெருக்கமான மனிதர். அடிக்கடி வருவார். வரும்போது நட்புக்காக நல்லெண்ணெய்யும் எள்ளுப் பாகும் வடமராட்சியில் இருந்து கொண்டு வருவார். அவை அவரின் நட்பின் அடையாளச் சின்னங்களா இருந்தாலும், "இறால் போட்டு சுறா பிடிக்கும் இரைகள்"! சபாபதிப்பிள்ளை யாழ்ப்பாணத்தில் இருந்து வன்னிக்கும் அதற்கு இப்பாலும் வந்து கிராமங்களுக்குள் விவசாயிகளிடம் 'தவிச்ச முயல் அடிப்பது' போல் நெல், எள், குரக்கன், தேன், மானிறைச்சி வத்தல் போன்ற பொருள்களைக் குறைந்த விலையில் வாங்கிக் கொண்டு போவார். சில சமயங்களில், விவசாயிகளுக்கு வட்டிக்குப் பணமும் கடனாகக் கொடுப்பார். ஒன்றுக்குப் பத்தாகக் கணக்கு வைத்துக் கடனையும் கறாராகக் கறந்து கொள்வார்.

அப்படிப்பட்டவருடன் தான் மாரிமுத்தர் பழகி இருந்தார்.

நெல் விதைப்புக் காலத்தில் விவசாயிகள் பெரும்பாலும் பணமுடையில் இருப்பார்கள். அவ்வேளைகளில், அவர்கள் மனைவிமாரின் காதில் கழுத்துகளில் இருக்கும் நகை நட்டுகளை விற்றோ அடகு வைத்தோ அல்லது நம்பிக்கையின் பேரில் கைநோட்டு எழுதி வட்டிக்குப் பணம் வாங்கியோ தமது விதைப்பு வேலைகளைச் செய்வார்கள். அறுவடைக் காலத்தில் நகைகளை அடைவுகளில் இருந்து மீட்பார்கள், அல்லது, நகைகளை மீட்க முடியாத போது அவற்றை வந்த விலைக்கு விற்று விடுவார்கள். சில வேளைகளில் வட்டி ஏறி நகை அறுதியாகி விடும்.

இவை தான் அன்றைய ஏழை விவசாயிகளின் நித்திய வாழ்வு.

இவர்களில் ஒருவராக மாரிமுத்துவும் இருந்தார்.

சபாபதிப்பிள்ளை மாரிமுத்துவுக்கு எதுவித பொறுப்பும் இல்லாமல் கடன் கொடுப்பார். அந்த முறை, அவர் மாரிமுத்துவுக்கு பதினைந்து பவுன் (நூற்றைம்பது ரூபா) கடன் கொடுத்து இருந்தார். அதற்கு, நெல் அறுவடையின் போது யாழ்ப்பாணக் கணக்குப்படி ஐம்பது மூடை நெல் கொடுக்க வேண்டும் என்பதே கனவான்கள் ஒப்பந்தம். . அதாவது - வன்னிக்கு இப்பால் இருபத்தெட்டுக் கொத்து ஒரு பூசல் ஆக இருக்க யாழ்ப்பாணக் கணக்கில் முப்பத்திரண்டு கொத்தே ஒரு பூசலாகக் கணிக்கப்படும். இவ்விதம் கணிக்கும் மூன்று பூசல் கொண்டதே அங்கு ஒரு மூடையாகவும் இருக்கும்.

கடைசியாக சபாபதியிடம் பெற்ற கடனை, நாட்டில் ஏற்பட்ட பஞ்சத்தாலும் வரட்சியாலும் விவசாயம் முடங்க மாரிமுத்துவால் நீண்ட காலமாக அடைக்க முடியவில்லை.

வயலில் வேலை ஆரம்பித்து அறுவடை நடந்து கொண்டு இருப்பதாக தும்பளைக்குச் செய்தி எட்டிய கையோடு திடுதிடுதிப்பென்று கிதோகமவுக்குப் பயணப்பட்டு வந்து இறங்கினார், சபாபதியார். அவரைக் களத்து மேட்டில் திடீரென்று கண்ட திகைப்பில் மாரிமுத்தர் கலங்கினாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு-

"வாங்க சபாபதி அண்ணே! ......." என்று வரவேற்றார்.

"ஓம் மாரிமுத்து ... நான் நேற்று மெயில் ரெயிலில் வந்திட்டன்..... நீயும் இன்டைக்கு சூடு மிதிச்சுக் கரை ஏறிப் போடுவாய் எண்ட நினைப்பில் டவுனில வண்டிலப் புடிச்சுக் கொண்டு வந்திட்டன். நெல் எல்லாம் ஏத்தலாம் தானே?....." என்று வந்ததும் வராததுமாகக் கடன் வசூலை நினைவூட்டினார், சபாபதியார்.

"ஓம் ... அண்ணே.. நெல் இருக்கு... ஆனா.... எதிர்பார்த்த விளைச்சல் இந்த முறை வாய்க்க இல்ல...." என்று வார்த்தைகளை மென்று விழுங்கினார், மாரிமுத்தர்.

"அது எல்லாம் சரிப்படாது மாரிமுத்து!..... நானும் இப்ப மூண்டு வரியத்துக்கு முந்தி உனக்கு காசு தந்தனான்... எனக்குத் தெரியாது...... எப்பிடியும் எல்லாக் கணக்கையும் இப்ப முடிச்சுப் போடு!...." என்று கடுகடுப்போடு சொல்லிக் கொண்டு, களத்து மையத்தில் அடுக்கி இருந்த நெல்லு முடைகளை நோக்கி வந்தார், சபாபதிப்பிள்ளை.

மாரிமுத்துவால் வாய் திறக்க முடியவில்லை. பட்ட துன்பங்கள் கொஞ்சமில்லை. அறுவடை ஈடுகொடுக்கும் என்று நம்பிக்கை வைத்திருந்த மாரிமுத்துவுக்குப் பெருத்த ஏமாற்றம். அது ஒரு புறமிருக்க, பெற்ற கடன்கள் எல்லாம் ஒரே சமயத்தில் பூதாகரமாக எழுந்து நின்றன.

அரனோளிஸின் கடன்கள் - வேலை செய்த வேலைக்காரரின் கூலிகள் - சபாபதியாரின் நீண்ட நாள் கடன்கள் - வீட்டுக் கஷ்டம்.... என்று எல்லாம் களத்து மேட்டை விட்டு வெளியேற முன் மாரிமுத்தைச் சூழ்ந்து கொண்டன.

தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு, சபாபதியாரின் கணக்குக்காக ஐம்பது மூடை நெல்லு போக எஞ்சியதில் அரனோளி ஸின் மாட்டு நெல்லும் கடைக் கணக்கால் நெல்லும் அளந்து கொடுத்து விட்டு இருந்த மிச்ச சொச்சத்தில் வேலை செய்தவர்களுக்குக் கூலியாக நெல்லையும் பகிர்ந்து கொடுத்து விட்டு நிமிர்ந்தார், மாரிமுத்தர்.

களத்தில் அவருக்காக பதரும் கந்துகளத்துச் சப்பிகளும் அவரைப் பார்த்துப் புன்னகை பூத்தன.

*

**"அன்னை" முத்திங்கள் ஏடு,**
**மலர் - 02.**
**இதழ் 01 - 1961**

# 6

# நாமும் ஈன்றிருக்கிறோம்

பங்குனி மாதம் - பகல் முழுவதும் வெயிலின் அகோரம். இரவிலும் புழுக்கம் தாங்க முடியவில்லை.

இப்பொழுது நன்றாக இருண்டு விட்டது. வீட்டு விறாந்தையில் என் மூத்த புத்திர பாக்கியம்

"அ..... மா..... அம்மா!"

"ஆ....... டு..... ஆடு!"

என்று வாசித்துக் கொண்டு இருக்கிறான். கேட்கச் சகிக்க முடியவில்லை. அதேநேரம், மூத்தவனுக்கு அடுத்த செல்வம், கோகிலா எதையோ கேட்டு, தன் தாயிடம் அடம் பிடித்து ஓலம் இடுகிறாள்.

அவள்தான் என் மனைவி, சரசு. நான்காவதை வயிற்றில் ஏந்திக் கொண்டு, மூன்றாவதை இடுப்பில் தாங்கிய வண்ணம் இரண்டாவது குழந்தைக்குச் சமாதானஞ் சொல்லிக் கொண்டு இருந்தாள்.

வீடே திமிலோகப் பட்டுக் கொண்டு இருக்கிறது. குடும்பம் - இப்படியும் ஒரு குடும்பமா?

வெளியிலும் புழுக்கம், உள்ளும் புழுக்கம்!

மனம் கேட்கவில்லை. வீட்டுக்குள் இருக்க இருப்புக் கொள்ளவில்லை. விறாந்தையிற் கிடந்த சாய்வு நாற்காலியை ஓசை படாமல் எடுத்துக் கொண்டு, முற்றத்தில் ஓரமாக வளர்ந்தோங்கி நிற்கும் வேப்ப மரத்தடிக்குப் போகிறேன். நாற்காலியை விரித்து அப்படியே இருட்டில் யாருக்கும் தெரியாமல், நிம்மதியாகக் கால்களை நீட்டி, ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கிறேன்.

வீட்டுக்குள் இன்னும் ரகளை நடந்து கொண்டுதான் இருக்கிறது.என் காதில் அவை, படாதது போல் மௌனமாக இருக்கிறேன்.

அப்படி ஓர் ஐந்து நிமிடந் தான், அமைதியாக இருந்திருப்பேன். அதற்குள் திடீரென்று எனது அருமை மனைவி -

"நான் இந்த வயித்தோட படுறபாடுகள் கொஞ்சங்கூடத் தெரிய இல்லயா? இஞ்ச பாருங்க..... இந்தக் கோகிலா என்னைப் படுத்திற பாட்டை?...." என்று கூச்சல் போட்டபடி, இருட்டில் என் இடம் கண்டு, வருகிறாள்.

அவள் கையில் ஒரு சிறு 'எனெமல்' தட்டு. அதில் குழைத்த உணவு. இடுப்பில் என் மூன்றாவது குழந்தை, வனிதா. கோகிலா, அவள் சேலை முந்தானையைப் பிடித்துக் கொண்டு சிணுங்கினாள்.

"என்னப்பா.... பகல் முழுவதும் மனுஷன் ஓடாய் உழைச்சுப் போட்டு, வீட்டுக்கு வந்தா.... இங்கயும் ஆறுதல் இல்லியே?....." என்று அலுத்துக் கொண்டு, மெல்ல எழும்புகிறேன்.

"வீடு நிம்மதியாக இருக்க வேணுமெண்டால்... இப்பிடிப் பிள்ளயலப் பெறாமல் இருக்க வேணும்....." என்று எங்கோ பார்த்துக் கொண்டு, என் சகதர்மினி கூறுகிறாள். அதுவும் இருட்டில் நன்றாகத் தெரிகிறது. எனக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை. இருந்தும், அடக்கிக் கொண்டு பேசாமல் இருக்கிறேன்.

"இந்தாருங்கோ.... இதை, வனிதாவுக்குத் தீத்துங்கோ..." என்று மென்மையான கட்டளையாக, கையிற் கொண்டு வந்த தட்டையும் குழந்தையையும் என்னிடம் தந்து விட்டு, கோகிலாவைத் தூக்கி கொண்டு, வயிற்றையுந் தள்ளிக் கொண்டு வீட்டுக்குள் போகிறாள்' அவள்.

என் மடியில் வனிதாவை வைத்துக் கொண்டு, அவளுக்கு உணவூட்டுகிறேன். அப்பொழுது, அடிவானத்தில் நிலவு கிளம்புகிறது.

அந்தநேரம், பக்கத்து வளவு - பரமானந்தரின் வீட்டிலிருந்து -

"ஐயோ!.... என்னை அடிக்காதேயுங்கோ!.... அடிக்காதேயுங்கோ!...." என்று அவலக்குரல் கேட்கிறது. இது ஒரு பெண்ணின் குரல்.

"உன்னைக் கொண்டு போடுவன்!... உண்மையைச் சொல்லிப் போடு!..." இது ஒரு ஆண் குரல்.

"கொல்லுங்கோ.... கொல்லுங்கோ!... இப்பிடிச் சித்திரவதை செய்து கொல்லாதீங்கோ! நஞ்சைக் கிஞ்சைத் தந்து.... கொண்டு போடுங்கோ...." மீண்டும் அதே பெண் குரல்.

"ஏனடா... அவளப் போட்டு எல்லாரும் கொல்லுறீங்க?.... என்னைக் கொண்டு போட்டு அவளக் கொல்லுங்கடா..." என்றது, வேறோர் ஆண் குரல்.

இப்படிப் பல குரல்கள் மாறி மாறி ஒலிக்கின்றன. பக்கத்து வளவு. அதுவும் நான் இப்பொழுது இருக்கும் இந்த வேம்புக்கு மிக அருகில் இருக்கும் அவர்களுடைய 'குசினி' க்குப் பக்கத்தில் இருந்து தான் அந்த அவலம் கேட்கிறது.

குரல் கேட்டு சரசுவும் வந்து என்னருகில் நிற்கிறாள். அவள் முகத்தை நான் பார்க்கிறேன்.

அவளும் தன் ஓரக்கண்ணால் என்னை 'ஒரு பார்வை' பார்த்து விட்டு, குழந்தையை எடுத்துக் கொண்டு வீட்டுக்குள் நுழைகிறாள்.

அவளுக்கு எல்லாந் தெரியும்.

* *** *

பரமானந்தர் ஊரில், பெரிய மனிதர். நல்ல குலம் - கோத்திரம். பெரிய சாதிக்காரர். அவர் பரம்பரையில், அப்படி இப்படிப்பட்டவர்கள் பெண் - ஆண் கொடுத்ததும் இல்லை - வாங்கியதுமில்லை.

பரமானந்தரின் தரும பத்தினி தெய்வானைப்பிள்ளை அடிக்கொரு

தரம் தன் குலக்கொடியை உயர்த்திப் பிடித்துப் பேசாமல் இருக்க மாட்டார். போதாதுக்கு நல்ல 'செட்டுப்' பிடித்தவள்.

'நாச்சியார்' என்று தான் ஊரில் உள்ள எல்லா ஒடுக்கப்பட்டவர்களும், அந்த அம்மையாரை அழைப்பார்கள். இந்தப் பெயர், இந்தக் காலத்து இளவட்டங்களுக்குத் தெரிவதில்லை. அப்படி அவர்கள் அழைப்பதும் இல்லை. இவர்களுள் யாராவது அந்த அம்மாளை அழைக்க நேர்ந்தால் 'அம்மா' என்று அழைத்தால், விஷயம் மோசமாகி விடும்.

"ஆரடா, அவன்?.... என்னை.... அம்மா எண்டு சொன்னவன்!.... நான் என்னடா இந்தக் கீழ்ச் சாதியப் பெத்தேனா? வளத்தேனா?..." என்று வாய் கிழியக் கேட்டு, சண்டைக்கு வந்திடுவார், அந்த 'நாச்சியார்!

இதற்குப் பயந்து, இப்பொழுது பலர் அந்தப் பக்கம் 'தலை வைத்தும், படுப்பதில்லை. நாங்கள் கூட, ஒரு வேலிதான் - இருந்தும் அவ்வளவு உறவில்லை. ஓடும் புளியம் பழம் போல் தான் இருக்கிறோம்.

பரமானந்தருக்கு இப்பொழுது ஐம்பது வயதுக்கு மேல் இருக்கும். இருந்தும், எப்படிப் பார்த்தாலும் முப்பது, முப்பத்தைந்து மதிக்கக்கூடிய தோற்றம். நல்ல எலுமிச்சம் பழ நிறம். ஆறடி உயரம். நீண்ட கையும் காலும். தோய்த்து உலர்ந்த தூய வெண்ணிற வேட்டியும் 'கொலர்' இல்லாத முழுக்கைச் 'சேட்டும்' முழங்கால் முட்ட வரும் சால்வையும், எந்நேரமும் அவரை அலங்கரிக்கும். போதாதற்கு, காதில் கடுக்கன். விரலில் வைரக்கல் மோதிரங்கள். கையில் எந்நேரமும் வெள்ளிப் பூண் இட்ட கைத்தடி. நெற்றியில் பட்டையான மூன்று கோட்டில் திருநீறு துலங்கும். அதன் கீழ் நடுக்கோட்டின் மத்தியில் ஐம்பது சத நாணய அளவு சந்தனப் பொட்டு - அதன் நடுவில் இருபத்தைந்து சத நாணய அளவு குங்குமத் திலகம்.

பரமானந்தரின் இச்சுந்தர உருவுக்கும், அலங்காரத்துக்கும் ஒரு சிறு குறை என்று யாராவது கண்டால், அது அவருடைய முன்தலை வழுக்கையைத் தான் காணலாம். அத்துடன், அவருடைய முன் சரிந்த பெரிய தொந்தியையுந்தான் கூற முடியும். இவை பெரிய குறைகள் அல்லத்தான். பெரிய மனுசருக்கு இருக்க வேண்டிய அலங்காரச் சிறப்பம்சங்களே அவை. இருப்பினும், சில வேளைகளில் இவை அவருடைய முதுமையைக் காட்டி விடுமோ என்றுதான் அச்சமாகயிருக்கிறது. அவர் சாமானியமானவர் அல்லர். ஊரில் உள்ள பெரிய கோவிலின் தருமகர்த்தா - சின்ன மேளம் பிடிக்கிற சின்னக் கோயிலின், பத்தாந் திருவிழா உபயகாரர் - முன்னையநாள் கிராம விதானையார் - தற்போதைய அரசின் கட்சிக்கு வேண்டிய முன்னணித் தலைவர் - சந்தைக் குத்தகைக்காரர்........ இப்படி எத்தனையோ அலுவல்கள்... பதவிகள் உடையவர்.

இருந்தும், ஊரில் ஒன்றே ஒன்றில் தான். அவர் மனுசன் பலத்த தோல்வி கண்டு கொண்டு இருக்கிறார். அதுதான் - கிராமச் சங்கத் தேர்தல்! நாம் அறிந்த காலம் முதல் அவர் அதில் போட்டி போட்டுக் கொண்டுதான் வருகிறார்.

ஆனால், வெற்றிதான் அவரை ஏமாற்றி விட்டுப் போய் விடுகிறது. அதிலும், அவர் வெற்றி பெற்று விட்டால், கிராமச் சங்கத் தலைவர் முதற்கொண்டு, நாடாளுமன்ற உறுப்பினர் வரை சென்று விடுவார்.

இப்படிப்பட்ட 'பெரிய மனிதர்' வீடுதான், இப்பொழுது அந்த அவலக் குரலுடன் அமர்க்களப்படுகிறது.

''எங்கன்ரை சாதி சனத்தில இல்லாத வசையைக் கட்டிக் கொண்டாயடி..... இனி...... நாங்க எப்படி ஊரில முழிக்கிறது?..." இது தெய்வானைப் பிள்ளை 'நாச்சி' யாரின் முழக்கம்.

"உண்மையைச் சொல்.... இத... யார் சுமத்தியது?..."

இந்தச் சுடுசொற்களை, பரமானந்தரின் மூத்த மகன் - கொழும்பில் டாக்டராக இருக்கிறவர், கூறுகிறார்.

பரமானந்தருக்கு மூன்று ஆண்மக்களும் ஒரு பெண் மகளும் இருக்கின்றனர். மூத்தவன், டாக்டருக்கு நாற்பது வயதிருக்கும். இன்னும் திருமணம் ஆகவில்லை. இரண்டாவது தான், பெண் கமலநாயகி. முப்பத்தியேழு முடிந்து விட்டது. இன்னும் திருமணம் இல்லை. மூன்றாவது பல்கலைக் கழகத்தில் எஞ்ஜினியரிங் வகுப்பை முடித்து விட்டு வேலையாகி விட்டான். நான்காவது புத்திர பாக்கியம் ஊரில் படிக்கிறதாகச் சொல்லிக் கொண்டு தெரு அளந்து கொண்டு இருக்கிறான். இப்பொழுது, அவர்கள் அங்கு வந்து குழுமி இருக்கிறார்கள் போலும்.

ஓரேயொரு பெண். பணம் - குணம் - சாதி - சனம் - சாதகம் - எல்லாம் சரியாக இருந்தும் அவளுக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. மூத்தவனுக்கும் வயது ஏறி விட்டது. இன்னும் திருமணம் ஆகவில்லை.

எல்லாம் இருந்தும், ஒரு குமர் இன்னும் வீட்டுக்குள் இருக்கிறாள், என்றால் அதற்கும் ஒரு காரணம் இருக்கத்தானே வேண்டும்?

"நாச்சியார் இருக்கும் வரை உந்த வீட்டில எந்தப் பிள்ளைக்கும் கலியாணம் காட்சி நடக்காது!"

"... மனுசியின்ரை குலங் கோத்திரப் படனத்துக்கு யார் சம்பந்தம் பேசி வரப் போயினம்...."

"அருமந்த குமர் அநியாயமாக வீட்டுக்குள்ள இருந்து பெருமூச்சு விடுது..."

"முப்பது வயதுக்கு மேலப் போயிட்டுது.... இனி எங்க உந்தப் பொடிச்சிக்கு மாப்பிள தேடப் போயினம்?...."

இவை போன்ற வார்த்தைகளை எங்கள் ஊர் 'வம்பு காவி'களிடம் இருந்து கேட்டுக் கேட்டு என் காதுகள் இப்பொழுது புளித்துப் போய்விட்டன.

பாவம் கமலம்!

"இண்டைக்கு நீ.... உள்ளதச் சொல்லாட்ட...... உன்னை இந்தக் கத்தியால....... வெட்டிப் போட்டுட்டுத் தான் போறது!......"

இது எஞ்ஜினியர் மகனின் வார்த்தைகள் ஆகும்.

"அடீ.....! கொள்ளயில போவாளே....! இப்ப எவ்வளவு நேரமா, பொடியலும் நானும் கேட்டுக் கொண்டு இருக்கிறம்... உன்ரை அடி

மூளையில உறைக்க இல்லியா?......"

இது நாச்சியாரின் அட்டகாசத்தில் உதிர்த்த வார்த்தைகள்!

*  ***  *

சரசு என்னருகில் இப்பொழுது நிற்கிறாள். குழந்தைகளில், முத்தவன் மோகனைத் தவிர, எல்லோரும் வீட்டுக்குள் அடங்கி விட்டார்கள். மோகன் எங்களைப் போல் விழித்து இருந்து வேடிக்கை பார்க்கக் கூடியவன். அதனாற் போலும் தாயோடு ஒட்டிக் கொண்டு என்னருகில் வந்து-

"அப்பா... அப்பா.... கமலம் அக்காவைப் போட்டு அடிக்கினம்!....." என்று எதோ சொல்ல வாயெடுத்தான்.

சாடாரென்று அவனுடைய வாயைப் பொத்தி, "உஷ்.. சத்தம் போட்டுக் கதைக்காதே! அவயலுக்குக் கேட்கப் போகுது...." என்று அவனைப் பேச விடாது தடுத்தாள், சரசு.

எனக்கும் பேச்சு வரவில்லை. அடுத்த வீட்டு சம்பவத்தை மௌனமாக இருந்து கேட்பதோடு சிந்தனையிலும் ஆழ்ந்து இருக்கிறேன்.

"அட..... கொலைகாரரே!... அவளப் போட்டுக் கொல்லாதீங்கடா..... என்னக் கொண்டு போட்டு, அவளக் கொல்லுங்கடா... அந்தக் குத்தத்துக்கு நான் தானடா...." பரமானந்தரின் சடைசிச் சொற்கள் முடிவதற்குள் -

"என்ன...???....." என்று அங்கிருந்த மற்றக் குரல்கள் எல்லாம் ஏககாலத்தில் சேர்ந்து கேட்டத்தில், முடிவு விளங்கவில்லை. அதைத் தொடர்ந்து அந்த வீட்டில் நீண்ட அமைதி நிலவிக் கொண்டது.

சரசு, என்னைப் பார்த்து மௌனிக்கிறாள் - நான் அவளைப் பார்க்கிறேன்.

பால் நிலவு காய்ந்து கொண்டு இருக்கிறது. இந்நேரம் எங்கோ இருந்து ஒரு துர்நாற்றம், காற்றில் மிதந்து வருகிறது. நாசியைத் துளைத்து, வயிற்றைக் குமட்டுகிறது.

"அப்பா!.... அப்பா!... நாத்தம்! நாத்தம்!.... இந்த நாத்தம் எங்க இருந்து வருகுது தெரியுமா?... எங்கன்ரை டொமி நாயின்ரை, அந்தப் பெரிய பெட்டைக் குட்டி நேத்துச் செத்துப் போச்சுது, இல்லியா?... அத.... அங்க தாட்டம் இல்லையா,.... அந்தப் புணத்த... எங்கன்ரை டொமியே போய்க் கிளறிக் கிளறி இன்டைக்கு முழுதும் திண்டு கொண்டிருந்தது, மோகனின் ஆராய்ச்சியுரை மழலையோடு இழைந்து முடிகிறது. சரசு என் முகத்தை, அசூசையோடு ஏறிட்டுப் பார்க்கிறாள்.

அவளுடைய பார்வையில், 'நாமும் குட்டிகளை ஈன்றிருக்கிறோம்!' என்ற எச்சரிக்கை என்னைச் சுட்டி நிற்கிறது.

*

**நன்றி "சிந்தாமணி" வார இதழ்**

22-01-1970

7

# கவசம்

நடு நிசி. தனியறை. என்னைத் தவிர, இங்கு யாரும் இல்லை. இந்த அறைக்கு ஒரேயொரு ஜன்னல் தான் இருக்கிறது. அதனூடாக, இன்று மாலையிற் பெய்த மழையின் வாடைக்காற்று 'ஜிலு ஜிலு' என்று உள்ளே வந்து கொண்டு இருக்கிறது. இதோ இந்த மேசையின் மீது மின் விளக்கொன்றும், வண்ணக் கவசம் அணிந்து, தன்னொளியை உமிழ்ந்து கொண்டிருக்கிறது.

இந்த விளக்கும் ஏதோ நன்றாகத்தான் எரிகிறது. ஆனால், அதற்குப் பூட்டிய கவசந்தான் அதனை அடக்கி வைத்திருக்கிறது. 'குடத்தில் இட்ட விளக்கு' என்று ஏதோ கூறுகிறார்களே, அது இப்படித்தான் இருக்குமோ?

அருகில் இருந்த கதிரையில் அமர்ந்து, மேசை மீதே ஒரு கையை நீட்டி மறுகையை மடக்கி, தலையைச் சரித்து விளக்கையே பார்த்துக் கொண்டிருக்கிறேன். இன்றைய வேலை அலுப்பைச் சற்றுத் தணித்துக் கொள்ள, 'ஒரு கண் மூடி' எழ விரும்புகிறேன். எனினும், என் அறைக்கு வெளியே இருக்கும் நீண்ட 'ஹோலில் நாற்பது

நோயாளிகள்....? சிலா் ஆழ்ந்த நித்திரையிலும், வராத உறக்கத்திலும் உழன்று கொண்டு இருக்கிறார்கள்.

இன்னுஞ் சிலா் முணங்கியும் அரற்றிக் கொண்டும் இருக்கிறார்கள். வேறு சிலா், விக்கி விக்கி அழுது கொண்டும் இருமிக் கொண்டும், பெருமூச்சு விட்டுக் கொண்டும் இருக்கிறார்கள்.

இவா்களுடைய இந்த அநுகரண ஒலியைத் தவிர வேறு ஒன்றும் என் காதில் விழவில்லை.

ஆனால்?....

இது போன்ற எண்ணற்ற இரவுகளையும், நடுநிசிகளையும் அவல ஒலிகளையும் தனிமைகளையும் கடந்த ஏழாண்டுகளாகக் கண்டும் கேட்டும் அநுபவித்தும் கொண்டு தானே வருகிறேன். இன்னும் எத்தனை இரவுகளோ? ஒலிகளோ? ஆண்டுகளோ?

ஆனால்?....

இந்த நேரத்தில், ஓா் ஈசல்... அதனைத் தொடா்ந்து இன்னுமொன்று... இன்னுமொன்று என் என்னருகில் வந்து கொண்டிருக்கின்றனவே!

மங்கிய ஒளியைப் பரப்பினாலும், தன்னிதயத்தின் உள்ளே அளப்பரிய பிரகாசத்தைக் கொண்ட அந்த மின்விளக்கைக் கண்டல்லவா இந்த ஈசல்கள் காதல் கொள்கின்றன? ஆனந்த வெள்ளத்தில் தம்மை மறந்து மூழ்கின்றன! இன்னும் நெருங்கி அதனை அணைத்துக் கொள்ளவும் அல்லவா துடிதுடிக்கின்றன?..!

"ஐயோ.. பரிதாபம்! எவ்வளவு ஆசையோடு இங்கே வந்த ஓருயிர், இப்பொழுது புண்பட்டுச் சிறகொடிந்து குற்றுயிரும் குலையுயிருமாகக் கிடக்கிறதே! பாவம்...!"

ஆமாம்.. அந்நிலை. என்னை ஏன் இவ்வளவு தூரம் அரிக்க வேண்டும்? எனக்கும் இந்த விளக்குக்கும் ஈசலுக்கும் என்ன தொடர்பு? இதில் நான் எது? விளக்கா, ஈசலா?

என் இதயம் சுடுகிறது... வேதனை மூழ்கிறது!

"நர்ஸ்!.... நர்ஸ்! ...."

"நர்ஸ்!.... நர்ஸ்! ...."

'வார்டில்' இருந்து மிகவும் மெல்லிய ஒலியில் ஒரு குரல் வருகிறது. முதலில், எத்தனை தடவைகள் அந்தக் குரல் ஒலித்ததோ?... என் காதில் இப்பொழுது தான், அது சற்றுத் தெளிவாகக் கேட்கிறது. கதிரையை விட்டு எழ முயல்கிறேன். அந்தக் குரலுக்கு விடை கொடுக்க எண்ணுகிறேன். ஆனால்....?

நீங்கா நினைவொன்று, இந்த விளக்கையும் ஈசலையும் இந்தக் குரலையும் என்னோடு சேர்த்து இப்பொழுது எடை போடுகிறது.

அந்தக் குரலுக்கு உரியவர், யாரென்று எனக்கு நன்றாகத் தெரியும்.

இரண்டு வாரத்துக்கு முன்பு, சுய நினைவே இல்லாத நிலையில், நெஞ்சு வலியோடு அவர் இங்கு வந்தார். இரண்டு தினங்களுக்கு

முன்புதான் அவருக்குக் குணங்கண்டது. பூரண குணமடைய இன்னும் இரண்டொரு தினங்கள் அவர் ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டும் என்று டாக்டர் கூறியிருக்கிறார்.

ஆனால்?

றோஜாவைப் படைத்த ஆண்டவன், முள்ளையும் ஏன் படைத்தான்? மலரில் மணத்தையுங் கொடுத்து அதனுள்ளே நுண்விஷக் கிருமி களையும் ஏன் அவன் படைத்தான்? இதழ்களைக் காக்க முள்ளு.... பூங்காவைக் காக்கக் கிருமி... அப்படியானால், ஆணிலும் பெண்ணிலும் அழகெதற்கு? பாதுகாப்புக்கா? அல்லது ஆபத்தைத் தருவிக்கவா? என்ன விந்தையான போக்கடி, இது?

ஆனால்?....

நான் கடமைக்கு வந்தவள்! நான்?... ஆமாம் நானே தான்!

* *** *

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர், விளம்பரமோ சரித்திரச் சான்றோ, தலபுராணமோ இல்லாத அந்த யாழ்ப்பாணக் குக்கிராமத்தில் பிறந்தேன். நான் பிறக்க முன்பே தந்தையையும், பிறந்த மூன்றாம் ஆண்டில் தாயையும் தின்று விட்டேனாம்! எப்படியோ தாய் மாமன் வீட்டில் வளர்ந்து கொஞ்சம் படித்துக் கொண்டேன்.

என் பருவம் சும்மா இருக்கவில்லை. அதன் சேட்டைகளும் என்னில் விளையாடின. என் மேனி முழுவதையும் வனப்பால் குளிப்பாட்டி

விட்டது. யௌவனம் பூத்துப் பொலிந்தது, என்னில். பின் கேட்கவா வேண்டும்? கிராமத்து வாலிபர் முதற்கொண்டு என் சொந்தத் தாய் மாமன் வரை!?

கேவலம், இதற்குத்தானா நான் பிறந்தேன்? வாழ்வை வெறுத்து ஓடினேன். எங்கே? ஊர் புளியடிக் கிணற்றுக்குத் தான்! அங்கே என்னைப் போன்ற அபலைகள் பலர் சங்கமமாகி இருக்கிறார்கள், எனக் கேள்விப்பட்டிருக்கிறேன். அப்படிப் போன திசையில் தான், சிஸ்டர் மேரியின் ஞாபகம் வந்தது. அத்தாயிடம் என்னையும் அறியாமல் என் கால்கள் சென்றன.

சிஸ்டர் மேரி என்னை இரட்சித்தார். வழியுங் காட்டினார். அந்த நோயாளர் விடுதி, ஆரம்பத்தில் இரண்டு ஆண்டுகள் வரை என்னை ஆட்கொண்டது. இப்பொழுது, நான் பூரணமான தாதியாகி, அரசாங்க ஆஸ்பத்திரியில் சேவையும் புரியத் தொடங்கி விட்டேன். எதுக்கும் குறைவில்லை. மனதுக்கும் பூரணமான நிம்மதியுடன், திருப்தியும் கிடைக்கிறது.

என் கடமையை மெச்சி, ஊரும் உலகமும் புகழ வேண்டும். இதுதான் என் இலட்சியம். நான் ஒரு 'ஐடியல் நர்ஸ்' (இலட்சியத் தாதி)... ஆமாம்! நான் தான், நவயுக 'நைட்டிங் கேர்ள்'!

ஆஹா... இந்த நல்ல நினைவு என் இதயத்தில் சுரக்கும் பொழுது-

"நர்ஸ்... நர்ஸ்..."

மீண்டும் ஒலித்தது, அதே குரல்! ஆமாம்.... அவருடைய குரல்தான்!....ம்! ஏன் நான் 'அவருடைய குரல்' என்று அழுத்திச் சொல்ல வேண்டும்? புரியாத புதிராகத் தான் இருக்கிறது.

விளக்கின் கவசத்தை இணைத்திருக்கும் ஆணி, சிறிது புரி நெகிழ்கிறது. அதனைத் திருகி இறுக்க என் கை விழைகிறது.

நெஞ்சு வலியோடு வந்தவர், இப்பொழுது வேறொரு வலியையும் அல்லவா அவர் தன் நெஞ்சில் ஏற்றுக் கொண்டார்? காரணம், நான்... இல்லை, இல்லை!... என் கடமை! நான் என்னைக் கடமை என்ற கவசத்தால் எப்பொழுதோ மறைத்துக் கொண்டு விட்டேனே? இப்பொழுது என் கை அந்தப் புரியாணியைத் திருக்கிக் கொண்டு இருக்கிறது.

அன்று, அவர் வந்த முதல் நாள் இரவு... இந்த நேரம் இருக்கும். அவர் நெஞ்சு வலி பொறுக்க முடியாது,

"அம்மா.... அம்மா...." என்று அரற்றிக் கொண்டிருந்தார். அன்று இரவுதான் நானும் அந்த 'வார்ட்'டுக்கு வேலை மாறி வந்திருந்தேன். அந்தக் குரலில் இருந்த துன்பத்தை ஆழமாகச் சுழியோடிக் காணவேண்டிய அவசியம் எதுவும் எனக்கு இருக்கவில்லை. அவர் படும் அவலத்தை நான் நன்றாகப் புரியக் கூடியதாக இருந்தது.

உடனேயே, 'ஒக்ஸிஜன் சிலிண்டர்' ஒன்றை எடுத்து வைத்து, ஆக வேண்டிய முதற் சிகிச்சைகளை நானே செய்தேன். நன்றாகச் சுவாசம்

நடைபெறத் தொடங்கியது. இருந்தும், வலியிருந்த இடத்திலேயே இருந்து, அவருக்கு நோவை ஊட்டிக் கொண்டிருந்தது.

ஓர் எண்ணம் என் இதயத்தில் எழுந்தது. இருந்தும் என்ன? அது சூழலைக் கண்டு தயங்கிற்று.

நான் ஒரு முழுமையான தாதி. எனினும், பருவமும் அழகும் உணர்வும் ஒருங்கே உறவாடிக் கொண்டிருக்கும் ஒரு புத்தம் புதிய மலர், நான்.

அவர் ஒரு நோயாளி! இருந்தும், அவரும் அழகு தவழும் ஒரு வாலிபன். ஆண்மையும், ஆளுமையும் பூத்துக் குலுங்கும் ஓர் ஆடவன்!

இத்தனையும் இருக்கட்டுமே! என் கடமை?... என் இலட்சியம்...? ... ஆமாம்! நவயுக 'நைட்டிங் கேர்ள்' அல்லவா, நான்?

மலர் போன்ற என் மென் கரங்கள், அவர் மார்பை இதமாக வருடின.

நோயும், நோவும் குறைந்தன போல் தெரிந்தன. அவர் விழித்துப் பார்த்தார். நான் சிரித்தேன்... அவர் சிரிக்க முயன்றார். சிரிப்பு வரவில்லை. பதிலாகக் கண்ணீர் பெருக்கினார்.

மேலும், என் கரம் வருடிக் கொடுத்தது. என் கரத்தை தன் மார்போடு அழுத்திப் பிடித்தார், அவர்.

எனக்கும் என்னுள் எதோ செய்தது. இருந்தும், மெதுவாக என் கையை எடுத்துக் கொண்டு, இந்த அறைக்குள் வந்து விட்டேன். இவை தான், அன்று நடந்த முதற் சம்பவங்கள். பின்பும், நெஞ்சில்

வலியேற்படும்போது, அவர் மார்பை ஆசையோடு இரசித்து இதமாக வருடி விடுவேன். அவர், என் கையைப் பிடித்தவுடன், மெதுவாக நழுவி, இங்கு வந்து விடுவேன்.

இந்த வரைக்கும் என் மட்டில், அவர் ஒரு நோயாளி.... நான் ஒரு நர்ஸ்! அவ்வளவு தான்! 'வார்ட்டுக்குள்' மற்ற நோயாளிகளிடமும் நான் நன்றாகத்தான் நெருங்கி - அன்பாய்த் தான் பழகுகிறேன். அதனால், எந்த விதமான பேச்சுக்கும் இடமில்லை.

ஆனால்.....?

என் சக நர்ஸ்கள் மட்டும் "ஏதோ" பேசிக் கொள்கிறார்கள். நன்றாகப் பேசிக் கொள்ளட்டும்! எனக்கென்ன..? நான் ஒரு நவயுகத் தாதி!

ஆனால்....?

அவர் என்னைப் பார்ப்பதில், எதனையோ என்னிடத்தல் இருந்து எதிர்பார்க்கிறார் போல் தெரிகிறதே! நேற்றிருந்து, என்னுடைய கரத்தின் இதமான வருடல், அவருக்குத் தேவை இல்லை. நிச்சயமாக அவருக்கு இப்பொழுது எந்த விதமான நோவுமில்லை - நோயுமில்லை. குணமாகி விட்டார். இன்னும் இரண்டொரு தினங்கள் மட்டுமே இங்கு ஓய்வெடுத்துக் கொண்டு வீட்டுக்குப் போகும்படி டாக்டர் கூறி விட்டார். அவர் வீட்டுக்குப் போய் விடுவார். அப்படி இருக்க இப்பொழுது என்னை ஏன், அவர் அழைக்க வேண்டும்?...

"நர்ஸ்!.... நர்ஸ்! ...."

அதே குரல். சற்றுத் தெளிவாக உரத்து எழுந்து வருகிறது.

இதோ... என் முன்னே, கவசமணிந்து, இருந்த இடத்திலேயே இருந்து, ஒளியைத் தன்னுள்ளேயே உமிழ்ந்து கொண்டு இருக்கிறது., இந்த மின்விளக்கு!... இதனடியில் விட்டில்கள், பல புண்பட்டுக் கிடக்கின்றன. இவை ஏன் இங்கு வரவேண்டும்?

அவை இங்கே வரவேண்டாம்! சிறகொடிந்து புண்படவும் வேண்டாம் -... குற்றுயிரும் குலையிருமாகக் கிடந்து இங்கு சாகவும் வேண்டாம்!

விளக்கின் கவசத் திருகாணி இப்பொழுது நன்றாக இறுக்கப்பட்டு, விட்டது. கவசம் நிமிர்ந்து நிற்கிறது.

நானும் அக்குரல் வந்த திசையில் இருந்து விலகி, எதிர்ப்புறமாகச் செல்லுகிறேன்.

நன்றி: "சிந்தாமணி" வார இதழ்

05 - 05 - 1970

8

# அதுவும் ஒரு பிறவி

இன்று நோன்மதி தினம். விடுமுறை. அதனால் வீட்டில் எல்லோரும் குதூகலமாக இருக்கிறோம். நண்பகல், ஒரு மணிக்கு மேலாகி விட்டது. எல்லோரும் பகலுணவை முடித்துக் கொண்டோம். பிள்ளைகளும் கொல்லைப் புறத்தில் விளையாடிக் கொண்டு இருக்கிறார்கள். நடு ஹோலில் கிடந்த சாய்வு நாற்காலியில் நானும் சரிந்து 'குருவித் தூக்கம்' ஒன்றைப் போட விழைந்து கொண்டு இருக்கிறேன்.

"என்ன அண்ணே!.... வாங்களேன் சாப்பிட... நேரமும் நல்லாச் செண்டு போச்சுதே... காலையிலயும் ஒன்டும் சாப்பிட இல்லியே!...." என்ற என் மனைவியின் குரல் அடுக்களைப் பக்கத்தில் இருந்து வெளிவருகிறது.

அரைத் தூக்கத்தில் இருந்த எனக்கு, விழிப்பு ஏற்படவே அடுக்களைப் பக்கம் தலையை நிமிர்த்தி எட்டிப் பார்க்கிறேன். அங்கே, அடுக்களையை ஒட்டியிருந்த நீண்ட பின் விறாந்தை மூலையில் ஞானப்பிரகாசம் முழங்கால்களைக் கட்டிப் பிடித்துக் கொண்டு, முகத்தையும் 'உம்' என்று வைத்தபடி, தரையில் உட்கார்ந்திருந்தான்.

"ஏன் அண்ணை இன்னும் சாப்பிட இல்லையாம்.... அவருக்கு என்னவாம்?... 'மலை' ஞாபகம் வந்திட்டுதாக்கும்!........." என்று நானும் கேள்வியும் பதிலுமாகக் கூறுகின்றேன்.

"அப்படித்தான் போலக் கிடக்குது....." என்று சொல்லிக் கொண்டு என் மனைவியும் அப்பால் செல்கிறாள்.

ஆனால், 'அண்ணை' அங்கிருந்து சிறிதும் அசையாது, பிடித்திருத்திய கல்லுப் பிள்ளையார் போல் அமர்ந்து இருக்கிறான். அவன் இப்படித் தான். சில வேளைகளில், 'ஒரு மோன நிலை!' என் சிந்தனை மலர் விரிகிறது.

* *** *

'அண்ணை' என்று தான் எல்லோரும் அவனை அழைப்பார்கள். வீட்டில் உள்ள எங்கள் குழந்தைகள் முதற்கொண்டு, ஊரில் உள்ள பாட்டி, பாட்டன்கள் வரை யாவருக்கும் அவன், 'அண்ணை' தான். "மலை" என்ற திருகோணமலையும் அங்கேயுள்ள அவன் குடும்பமும் அவனுக்கு அடிக்கடி ஞாபகம் வரும். அந்த ஞாபகம் வந்தால் -

"ச்சே! என்ரை மனுசி மலையில் இப்ப என்ன செஞ்சு கொண்டு இருப்பாளோ?....

புள்ளயல் மிச்சம் குளப்படி.... அவள் என்ன செய்வாள்?.... பாவம்!!" என்று ஒரு சமயம் அங்கலாய்ப்பான்.

இன்னொரு சமயம் -

"இப்ப என்ரை மூத்தவள்.... சீனியர் பாஸ் பண்ணி இருப்பாள்... அவள இப்ப நிப்பாட்டக் கூடாது.... எப்பிடியாவது பீ.ஏ... எம்.மே ஆவது படிப்பிச்சுப் போட்டு.... அதுக்குப் பிறகு வேணுமெண்டால், எங்காவது கச்சேரியில ஏசண்டுத்துரை வேலைக்கு விட்டு விடலாம்...." என்று அலட்டுவான்.

வேறு ஒரு சமயத்தில் -

"என்ரை மனுசி பாருங்கோ... பெரிய செலவாளி... மாசாமாசம் நான் ஆயிரம், ஆயிரத்தைஞ்நூறு எண்டு அனுப்பிக் கொண்டு தானே இருக்கிறன்.... என்ன மாதிரித்தான் செலவளிச்சுக் கொட்டுறாளோ?... இல்லாட்டிப் பாருங்கோ, நேத்தைக்குக் கூட ஒரு தந்தி!.... அஞ்நூறு ரூபா உடனே அனுப்பு எண்டு தந்தி அடிச்சிருக்கிறாளே!..." என்று புளுகித் தள்ளுவான்.

இன்னுமொரு நாள், திடீரென்று -

"இஞ்ச பாருங்கோ... போன மாசம் என்ரை மூத்த மேளுக்குக் கலியாணம் நடந்துது. தெரியுமா?... மாப்பிளைக்கு எவ்வளவு சீதனம் கொடுத்தேன் தெரியுமா? உப்பு வெளியில இருக்கிற அந்த நாப்பது ஏக்கர் தென்னங் காணியும், பிள்ளயின்ரை பேரில பாங்கில போட்டு வைச்ச இருபதாயிரத்தோட அவளுக்குகெண்டு என்ரை 'டடி' போட்டு வைச்ச இஞ்சூரன்ஸ் காசு பாத்தாயிரத்தையும் கொடுத்தன்... அது மட்டுமா?... இருபதாயிரத்துக்கு மேல நகையும் அல்ல போட்டன்!..... இதெல்லாம் போதாதெண்டு அவையல்.... அதுதான் மாப்பிள

வீட்டுக்காரர் ஒரு காரும் வேணும் எண்டு கடைசி நேரத்தில நிண்டினம்... என்ன செய்ய? அதையும் வாங்கிக் குடுத்திட்டுத்தான் மற்றக் காரியம் எல்லாம் செய்தன், பாருங்கோ?... இந்தக் காலத்தில ஒரு புள்ளயப் பெத்துப் பாருங்கோ... கட்டிக் குடுத்துப் பாருங்கோ?...." என்று ஒரு குட்டிப் பிரசங்கமே வைத்துப் பேசினான்.

இவ்விதம் இன்னும் ஏதேதோ எல்லாம், வாயில் வந்தவாறு புளுகித் தள்ளுவான். இந்தப் புளுகெல்லாம் பெண்கள் மத்தியில் தான் நடக்கும். இது 'பொய்' என்றும், 'புளுகு' என்றும் எங்கள் பெண்களுக்கு நன்றாகத் தெரியும். இருந்தும், அவனிடம் தங்கள் வேலைகளைச் செய்து கொள்வதற்காக, அவனுடைய வாயைக் 'கிள்ளி', உற்சாகப்படுத்தி விடுவார்கள்.

ஞானப்பிரகாசத்துக்குச் சித்தப் பிரமையோ, புளுகுந் தன்மையோ, பொய் சொல்லும் லாவண்யமோ அல்லது வேறு ஏதாவது ஒரு 'வித்தையோ உண்டு என்று சொல்வதற்கு இல்லை. ஆனால், ஏதோ தெரியாது, அவன் இப்படிப் பேசுகிறான். அதில் பொருள் உண்டு - மற்றவர்கள் அதனைப் பற்றி என்ன நினைப்பார்கள் - தன் மதிப்பு எப்படி ஆகும் என்று அவனுக்குத் தெரியுமோ என்னவோ? சமயா சமயங்களில் இப்படித்தான் பிதற்றிக் கொள்கிறான்.

அதில், ஒரு திருப்தியை அவன் அடைகிறான் என்பது மட்டும் எனக்கு நன்றாகத் தெரியும்.

அவன் எங்கள் வீட்டு வேலைக்காரன் அல்ல. யார் வீட்டு

வேலையாளும் இல்லை. ஊரில் உள்ள எல்லா வீடுகளுக்கும் அவன் பணியாள். இன்று எங்கள் வீட்டில் இருப்பான். நாளைக்கு அடுத்த வீடு - அதற்கடுத்த நாள் இன்னொரு வீடு. இப்படி வீடெல்லாம் போவான். ஊரெல்லாம் திரிவான். அவனை நான் 'நடமாடும் வேலையாள்' என்றுதான் சொல்வேன்.

வேலை என்றால் பெரிய வேலை ஒன்றும் செய்ய மாட்டான். குறிப்பாக, பெண்கள் செய்யும் வேலைகள் தான் அவனுக்குப் பிடிக்கும். அரிசி இடிப்பான், மா வறுத்துக் கொடுப்பான், குழந்தையை மடியில் வைத்துக் கொண்டு "ரோ... ரோ...." என்று பராக்குக் காட்டி, குளிப்பாட்டித் தருவான். தாலாட்டும், நல்ல இனிய குரலில் பாடுவான். சமையலில் உதவி செய்வான். மிகுதியான நேரங்களில் பெண்கள் கூட்டத்தில் இருந்து, 'ஊர்வம்பு' துன்புகளில் தன் பிரலாபமும் அளப்பான்.

பேச்சு, நடை, உடை பாவனை யாவும் பெண் வாடையாகத்தான் இருக்கும். இத்தனைக்கும் அவன், பெண் அல்ல!

அவன் சாதாரண உயரம். சற்று முன்வளைந்த இருண்ட தேகம். கண் சிறிது அரை குறைப் பார்வை. தலை, 'பொலிஸ் குரொப்' மீசை, 'ஹிட்லர் கட்'. கழுத்தில் ஓர் அழுக்கேறிய நூற்கயிற்றில் ஓர் அலுமினியப் பதக்கம் - அதில் ஒரு பக்கம் மடுமாதாவின் திருச்சொரூபம் - மறுபுறம் அர்ச். சூசையப்பர், கையில் தேவபாலனை ஏந்திய உருவம். இதற்கு மாறாக, அவனுடைய வலது முழங்கைக்கு மேற்புறத்தில் ஓர் ஓரங்குலச் சற்சதுர வெள்ளித் தாயத்தும் கட்டியிருக்கிறான். அதில் பிறையும் நட்சேத்திரமும் ஏதோ அரபுச் சொற்களும் பொறித்து

இருக்கின்றன. இடது கைப் புயத்தில், காளிகோயிலின் கௌரிக் காப்பு நூல்.

தாயத்தைப் பற்றி யாராவது கேட்டால், ஆளுக்கொரு விதமாக அவன் கதை அளப்பான்.

ஒரு சமயம், என் நண்பர் ஒருவர் அது பற்றிக் கேட்டபோது -

"இத... என்னெண்டு நினைச்சிட்டியல்... இதக் கட்டிக்கிட்ட பொறகு.... எனக்கு மிச்சம் சொத்து சுகம் எல்லாம் கிடைச்சுதாக்கும்!... " என்று கூறினான்.

இன்னும் ஓர் அதிசயம்! ஞானத்தின் காதுகள் இரண்டும் துளையாகவும் இருந்தன... முன்னாளில், கடுக்னோ தோடோ போட்டிருக்க வேண்டும்.

இவற்றை எல்லாம் பார்ப்பவர்களுக்கு ஞானப்பிரகாசம் ஒரு இந்துவோ... முஸ்லிமோ அல்லது கிறீஸ்தவனோ என்று அறிந்து கொள்ள முடியாது. நல்லதாய்ப் போயிற்று! அவனுக்குச் சிங்களமொழி அவ்வளவாகத் தெரியாது. அதுவும் தெரிந்து இருந்தால், அதற்கும் ஏதாவது ஒரு சின்னத்தைத் தன் 'பொன் மேனி' யில் தாங்கி விடுவான்.

அவன் எல்லோருக்கும் ஒரு புதிர். அவனுடைய பிறப்பு - வளர்ப்பு - உற்றார் - உறவினர் என்று யாருக்குமே தெரியாது. ஆனால், அடிக்கடி "மலை.... மலை...." என்று திருகோணமலையைப் பற்றியும், அங்குள்ள பெரிய தெருவைப் பற்றியும் கூறிக் கொள்வான்.

நான்தான், ஒரு நாள் - இரண்டு வருடங்களுக்கு முன்பு, அவனை

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் இருந்து, இந்த ஊருக்கு அழைத்து வந்தேன்.

தொடக்கத்தில் இரண்டு நாள், என் வீட்டில் நிரந்தர வேலையாள் ஆக இருந்தான். ஆனால், மூன்றாம் நாள் ஊர் சுற்றத் தொடங்கி விட்டான். அதிலிருந்து அவன் நிரந்தரமற்ற வேலையாள் ஆகிவிட்டான். இருந்தும், 'பால் வார்த்த பானை' யான என்னை, அவன் மறவாமல் திடீர் திடீரென்று வந்து, தரிசனந் தந்து, உதவியுஞ் செய்து விட்டுப் போய் விடுவான்.

இந்தப் பிறவிக்குத் தேவையானவை இரண்டு - ஒன்று பீடி. மற்றது பெண்கள் கூட்டம். தேவை இல்லாதவை - குளிப்பும் அழுக்கில்லாத உடையும் தான். அவன் ஓர் அதிசயப் பிறவி!

சில மாதங்களுக்கு முன்பு ஓர் அலுவலாக திருகோணமலைக்குப் போக வேண்டிய சந்தர்ப்பம் எனக்கு இருந்தது. போன காரியம் முடிய இரண்டு நாள்களாயின.

அந்நேரத்தில் ஞானப்பிரகாசத்தின் நினைவு எனக்கு வரவே, அங்குள்ள பெரிய தெருப் பக்கம் போக விழைந்தேன். அங்கு போன பொழுது, நல்ல வேளையாக எனது பால்ய நண்பர் ஒருவரை எதிர்பாராத விதமாகச் சந்தித்தேன். அவர் மூலம் ஞானப்பிரகாசத்தின் பூர்வீகம் - அடிக்கடி அவன் 'பிதற்றும்' குடும்பம் - மனைவி மக்கள் பற்றி விசாரித்துப் பார்த்தேன். என் முயற்சி முழுவதும் வீண்போகவில்லை. கிடைத்த விபரங்கள் யாவும் பிழையில்லை. ஆனால், அவன்,.... என்பதில் தான் எனக்குப் பெருத்த ஏமாற்றம்!

திருகோணமலை பெரிய தெரு வாசி தான், ஞானப்பிரகாசம். பெயர் - அங்க அடையாளம் - குணம். குறிகள் யாவும் எங்கள் 'அண்ணை' தான் என்பது நிச்சயமாயின. ஆனால், குடும்பம், மனைவி, பிள்ளைகள், சொத்து விபரங்கள் யாவும் கடைந்தெடுத்த 'புளுகு மூடை!' ஞானப்பிரகாசம் நல்ல குடும்பத்திற் பிறந்து, வளர்ந்து படித்து (அரை குறையாக) வாலிபன் ஆகியவன். நல்ல குணம். நடை உடையவனுந் தான். அவன் திருமணம் ஆக இருந்த சமயந்தான், அவனுக்கு அந்தக் கோளாறு தொடங்கியது. அதனைச் சகிக்க முடியாமல் தான், இருபது வருடங்களுக்கு முன் அவன் வீட்டை விட்டு, ஊரை விட்டு, உற்றார் உறவினரை விட்டுக் கிளம்பினான்.

பிறவியிலேயே இல்லாமல், அது எப்படி இடையில் வந்தது என்பது எல்லோருக்கும் அதிசயம் தான். பாவம், அவன் என்ன செய்வான்? இளமை நினைவுகளும் தாம்பத்திய உணர்வும் முகிழ்க்கும் அந்தப் பருவத்திலா அவனுக்கு அந்தக் கோளாறு வரவேண்டும்.?

திருகோணமலையில் இருந்து வந்த முதல் நாளே, என் மனைவிக்கு மட்டும் இரகசியமாக நான் கூறிய செய்தி -

"ஞானப்பிரகாசம் ஒரு நபுஞ்சகப் பேர்வழி!" என்பது தான்!

*

**நன்றி "சிந்தாமணி" - வார இதழ்**

**25-07-1970**

# 9

# ஒரு சாலை திரும்புகிறது

அந்தப் பனங்கூடலை அடுத்திருந்த வெளியில் ஒரு புகையிலைத் தோட்டம் விரிந்திருக்கிறது. அதன் தென் புறமாக ஓர் ஓலைக்குடில், கிணற்றுப் பக்கமாக இருக்கிறது. அதற்கருகில் மூன்று தென்னைகளும், துலாப்பேணுக்கு அருகில் இரண்டு பூவரசுகளும் காலச் சுவடுகளைத் தாங்கி நிற்கின்றன. அவற்றின் நிழல், இப்பொழுது கிழக்கு முகமாக நீண்டு சரிந்து கொண்டு இருக்கிறது. அங்கிருந்து 'டொக்' 'டொக்' என்று பாக்கு இடிக்கும் ஒலி விட்டு விட்டுக் கேட்கிறது.

குடிலுக்குள் ஒரு புறம் ஒரு சாக்குக் கட்டில். அதற்கு எதிர்ப்புறமாக நாலைந்து சாக்குப் பைகளும், தட்டுமுட்டுச் சாமான்களும் இருக்கின்றன. அதில் எதுவும் ஒழுங்காக இல்லை. எல்லாஞ் சிதறிக் கிடக்கின்றன. குடிலின் வாசலில் கூழைவால் பெட்டை நாயொன்று சோம்பிக் கிடக்கிறது. அதனோடு குட்டி ஈன்ற மறியாடு ஒன்றும் இரண்டு கிடாய்க் குட்டிகளுடன் நிற்கிறது. தாயாடு கட்டி நிற்க, குட்டிகள் துள்ளிக் கொண்டு நிற்கின்றன.

கட்டிலில் முடங்கிக் கிடந்த முருகேசர் நிமிர்ந்து இருக்கிறார். இருந்தும் அவரது முதுகு கேள்விக் குறிபோல் வளைந்து இருக்கிறது. உடல்

காய்ந்த புகையிலை நிறத்தில், சுருக்கமும் குழியும் கொண்டு இருக்கிறது. கால்கள் கட்டிலுக்குக் கீழாகத் தொங்கிக் கொண்டு இருக்கின்றன. இடக்கை, மரப்பாக்குரலைக் கெட்டியாகப் பிடிக்க, வலக்கை இரும்புலக்கையால் வெற்றிலை இடித்துக் கொண்டு இருக்கிறது. அதேநேரம், அவருடைய ஒளி இழந்தும் இழக்காமலும் இருந்த கண்கள் எதிர்ப்புறமாக தோட்டத்துக்கு வெளியே எதனையோ தேடிக் கொண்டு இருக்கின்றன.

அவர் பார்க்கும் திசையில், கூப்பிடு தொலைவில், பரந்து விரிந்த ஆல மரமொன்று உயர்ந்து நிற்கிறது. அதற்குக் கிழக்கு முகமாக - ஆடம்பரமோ அலங்காரமோ, கோபுரமோ இல்லாத ஒரு கோயில் இருக்கிறது. அது முருகேசருடைய மூதாதையர் காலந்தொட்டு வழிபட்டு வரும் வைரவர் கோயில். அந்தக் கோயிலைத்தான், முருகேசருடைய குழி விழுந்த கண்கள் அடிக்கடி பார்த்து, எதனையோ தேடிக் கொண்டு இருக்கின்றன. நேரம் இப்பொழுது நன்றாகக் கருக்கலாகி விட்டது. ஆலமரத்தை நாடி வரும் பறவைகள் யாவும் வந்து விட்டன. கோயிலுக்கு முன்பாக உள்ள கம்பத்தில், கண்ணாடி பொருத்தப் பெற்ற விடிவிளக்கு ஒன்று இருக்கிறது. தினமும் மாலைப் பொழுதில் அதில் விளக்கேறுவதுண்டு. மின்சார யுகம் பிறந்திருந்தும் இன்றும் அதில் இலுப்பெண்ணெய் விளக்கு தான் எரிகிறது. அது முருகேசருடைய மூன்று தலைமுறைக்கு முன் ஏற்றிய இலுப்பெண் ணெய் விளக்கு.

அவருடைய தலைமுறையில் - பூட்டன் வைத்த விளக்கு, அது. பூட்டன் தாய்க்குத் தலைமகன். பூட்டனுக்குப் பின்பு பாட்டன். அவரும்

தாய்க்குத் தலைமகனான முருகேசருடைய தந்தை வைத்தார். முருகேசருக்கு மூத்த மகன் என்ற பாக்கியம் கிடைக்கவில்லை. இருந்தாலும் பிறந்த நான்கு பெண் பிள்ளைகளுக்குப் பின், ஒரே ஆண்பிள்ளை என்ற உரிமையோடு விளக்கு வைக்கும் உரிமை அவருக்கு கிடைத்தது. தன் மட்டில் அந்த உரிமை, முதல் முதன்மையாக வந்ததை இட்டு அவர் மகிழ்ந்தார். ஆனால், இப்பொழுது - அவ்வுரிமை தன் காலத்திலேயே ஆட்டங் கண்டிருப்பதை அவரால் சீரணிக்க முடியாது இருக்கிறது.

நேரம், இப்பொழுது நன்றாகக் கருகி விட்டது. அவர் விழித்து விழித்துப் பார்த்த கண்களும் மங்கத் தொடங்கி விட்டன. அதுவரை அவர் எதிர் பார்த்திருந்த அந்த விடிவிளக்கு, இன்னும் கம்பத்தில் ஏற்றப்படவில்லை.

* *** *

1

முருகேசர் மிடுக்கோடும், துடிப்போடும் உலாவிய நாளில், அந்த விடிவிளக்கு, மாலைக் கருக்கலுக்கு முன்னரே ஏறி விடும். காலைப் பொழுது விடிந்த பின், அவரே வந்து அதை அணைத்து விட்டுத்தான் மறு காரியம் பார்ப்பார். அது அவருடைய நித்திய 'சானாதன' தருமங்களில் ஒன்று. தப்பித் தவறி அவர் பாயில் படுத்திருந்தால் அல்லது வெளியூர் சென்று இருந்தால் ஒழிய, அவர் கையால் தான் அவ்விளக்கு ஏறும், இறங்கும். அவர் இல்லாத சமயங்களில் அவர் மகன் சண்முகம் - அவன் சிறுவனாக இருந்த நாளில் தந்தையின்

அந்தச் சனாதன தருமங்களைச் செய்வான். மற்றப்படி, அதைச் செய்ய யாருக்கும் உரிமை இல்லை.

அவ்விதம் மூன்று தலைமுறையாக ஏறி இறங்கிய அந்த விடிவிளக்கு, இப்பொழுது கொஞ்ச நாளாக ஏறத் தயங்குகிறது. அதேபோல் இறங்க முடியாது, பட்டப் பகலிலும் எரிந்து, நெய்யின்றிக் கருகி விடுகிறது.

இந்தக் கோலம், முருகேசரின் முதுமை மூட்டத்தால் முகிழ்த்ததாயினும் அதன் பின்னணியில் பல அவலங்கள் நீறு பூத்த நெருப்பாகயிருந்தன.

அவற்றை அப்பொழுது முருகேசரால் ஓரளவு இரை மீட்க முடிகிறது.

* *** *

2

அந்த நாளில், முருகேசு நல்ல கமக்காரன். ஏழெட்டுச் 'சிறைக் குடிமக்களை' வைத்து நாட்டாண்மை காட்டி, தோட்டஞ் செய்வித்தார். முதுசொமாக வந்த காணிகளை விடச் சீதனமாகவும் மலட்டுச் சொத்தாகவும் அவருக்கு வந்த தோட்டந் துரவுகள் அதிகம். அத்தனையையும் முன்னின்று, மிடுக்கோடு நிருவகித்த பெருமையில், ஊரில் 'பெரிய புள்ளிகளில்' ஒருவராக இருந்தார். இதற்கு, ஏதும் படித்துப் பட்டம் பெற்ற மனிதர் இல்லை, அவர்.

மழைக்குக் கூட, பள்ளி வாசலில் நிற்கவில்லை. இருந்தும், ஊரின் கிணற்றடித் தகராறு முதல், எல்லைச் சண்டை, வேலிச்சண்டை வரை எல்லாவற்றுக்கும் நியாயம் பெற அவரிடம் தான் எல்லோரும்

வருவார்கள். 'கோர்ட்' விவகாரத்தில் அவர் ஓர் அப்புக்காத்து. சில சமயங்களில், அவர் ஜூரியாகவும் இருப்பார். முருகேசு நின்று நடத்தாத கலியாண வீடோ சாவீடோ அந்தக் கிராமத்தில் இருக்காது. கன்னிக்கால் நடுவதில் இருந்து தேங்காய் உடைக்கும் எல்லா நாள் காரியங்களிலும் சாவீட்டுச் சாமானுக்குச் சந்தைக்குப் போவதிலும், ஐயருக்குப் பக்கத்தில் நின்று சாமான் எடுத்துக் கொடுத்துக் காரியத்தைக் கெதியாய் முடிப்பதிலும் அவர் தான் முன் நிற்பார். அதனாற் போலும், சாதாரண முருகேசு, அந்தக் கிராமத்தில் "அர்" விகுதியோடு பிரபலமாக விளங்கினார்.

முருகேசரின் மூத்தவன், சண்முகம். அவனுக்குப் பின் பிறந்த மூன்றும், பெண்கள். சொத்துச் சுகங்களை ஊருக்கு வெளியில் விட விரும்பாத முருகேசர், பெண் பிள்ளைகளுக்கு ஊருக்குள்ளேயே இடந்தேடி, முடித்து வைத்து விட்டார். மூத்தவன் கிராமத்துப் படிப்போடு, நகரத்துப் பதவியும் பெற்றான். அதனால், அவனுக்குக் கொழுத்த சீதனத்தில், ஊருக்கு வெளியே நல்ல இடத்தில் பெண்ணும் எடுத்து விட்டார், முருகேசர். சீதன வளவும் சொத்தும் வெளியில் இருந்த போதிலும், முருகேசர் தன் மகனையும் மருமகளையும் ஊரிலேயே தன் முதுசொமான நாற்சார வீட்டில் வைத்துக் கொண்டார்.

மருமகள் ஆங்கிலம் படித்தவள் - மணியகாரர் ஒருவருடைய மகள். அதற்கேற்ற மிடுக்கும் வீறாப்பும் அவளிடத்தில் விஞ்சி இருந்தன.

மகன் மணஞ் செய்த காலத்தில் தான், அந்தக் கிராமத்துக்கு மின்சாரம் வந்தது. மருமகளைச் சாந்தோஷப்படுத்த முருகேசரும் தன் வீட்டுக்கு,

முதல் ஆளாக நின்று எவ்வளவோ செலவு செய்து மின்சாரம் பூட்டினார். அத்தோடு, மருமகளின் வேண்டுகோளுக்கு இணங்க நாற்சார வீட்டை இடித்து, புதிய மோஸ்தரில் 'ஷெண்சேட்', 'பிளற்', 'கராஜ்', தண்ணீர்த்தாங்கி, 'அட்டாச் பாத்', குழாய் மூலம் தண்ணீர் என்றெல்லாம் வைத்துக் கட்டினார். அந்த நேரத்தில், முற்றத்தில் நின்ற நல்ல 'கறுத்தக் கொழும்பான்' மாவையுந் தறித்துக் 'கொங்கிறீற்' முற்றம் போட்டு பூந்தோட்டமும், நடை வழிக்காக 'லோன்' உம் அமைத்து வைத்தார்.

இப்படியெல்லாம் அவர், மருமகளின் கௌரவத்துக்குச் செய்த போது அவருடைய மனைவி செல்லாச்சி எப்படி எப்படி எல்லாமோ - எதை எதையெல்லாமோ எடுத்துச் சொல்லி அபிப்பிராயப்பட்டாள். அவை ஒன்றும் முருகேசரின் செவிகளில் விழவில்லை. தன் மருமகள் சாந்தவல்லியின் அதுவும், ஒரு மணியக்காரர் உடைய மகளின் கௌரவத்துக்கு அகௌரவமாக ஏதும் இருக்கக் கூடாது என்பதே முருகேசரின் குறிக்கோளாக இருந்தது.

அந்த நாளில், மகன் சண்முகம் ஊரில் இல்லை. பெரிய உத்தியோகம், பல ஊர்களில் வருடக் கணக்கில் வாசம். ஆரம்பத்தில் மனைவி முதற்பிள்ளை பெறும் வரை அடிக்கடி ஊருக்கு வந்து போனான். ஆனால், மனைவி ஒரு பிள்ளையோடு, அதுவும் பெண்பிள்ளைப் பேறு என்ற காரணத்தால் தானோ என்னவோ சண்முகம் ஊருக்கு வருவது குறைந்து போயிற்று. ஆறேழு மாதத்துக்கு ஒரு முறை அல்லது வருடப் பிறப்பு - பொங்கல் லீவோடு வந்து, ஓரிரு வாரம் தங்கி விட்டுப் போய் விடுவான்.

இதெல்லாம் முருகேசருக்கு ஏதோ ஒரு விதமாகத் தான் இருந்தது. தன் வாரிசுக்கு ஓர் ஆண் வாரிசு இல்லை என்ற குறை அவரைச் சதா அரித்துக் கொண்டு தான் இருந்தது. தன் வைரவ சாமியிடம் அவர் வேண்டாத நாளில்லை. வைக்காத நேர்த்திகள் இல்லை.

இருந்தும் வைரவர் கண் விழிக்கவில்லை!

முழு நம்பிக்கையும் இழந்த முருகேசர், நாளும் பொழுதும் உளச் சலிப்பில் நைந்தார். அத்துடன், சாந்தவல்லி நாளுக்கு நாள் காட்டிய கெடுபிடியும் வீறாப்பும் அவரை மேலும் நலிவடையச் செய்தன.

இப்படித்தான் ஒரு நாள்-

முருகேசரின் மனைவி செல்லாச்சி இறந்து இரண்டாவது மாசியம் கொடுத்த அடுத்த நாள், நடக்கக் கூடாத அந்தச் சம்பவம், அந்த வீட்டில் நடந்தது.

முதுமையின் தளர்வு அவரில் மேலிட, வீட்டு விறாந்தையை அடுத்த அறையிற் படுத்திருந்த முருகேசருக்குப் பொல்லாத இருமல் ஒன்று வந்தது. எவ்வளவோ முயன்று, காறிக் காறிச் சளியை நெஞ்சுக்குள் இருந்து வெளியே எடுத்தவர், அதனை வெளியிற் சென்று உமிழ்வதற்குள் அது அவரையும் அறியாமல் வெளிவந்து, அறை வாசலில் விழுந்து விட்டது.

அதனைக் கண்டதும் சாந்தவல்லி, உருத்திர வல்லியாகி - வாயில் வரக்கூடாத வார்த்தைகளை எல்லாம் கொட்டித் தீர்த்தாள்.

"கீழ்ச் சாதியல் மாதிரி, வீட்டை நினைச்சிட்டுதுகள்!... உத.. இனி யார் இஞ்சை கழுவித் துடைக்கிறது?..."

இந்த வார்த்தைகள், மருமகளின் வாயில் இருந்து வந்த பின், முருகேசரால் அங்கு நிலை கொள்ள முடியவில்லை. இருமல் ஓய்ந்த பின், தானே மணல் அள்ளிப் போட்டு, பொச்சு மட்டையால் துடைத்துத் தரையைக் கழுவி நெருப்புத்தண்ணீரும் ஊற்றி விட்டுப் புறப்பட்ட முருகேசர், தோட்டத்துக் குடிலில் வந்து நின்றார்.

அதன் பின்புதான், முருகேசர் தனது தனிமையை உணர்ந்தார். முதுமையிலும் மிடுக்கு இருந்ததால், அந்தத் தனிமையை அவர் அதிகம் பொருட்படுத்தவில்லை. பெற்ற மகனே அவரைப் பற்றிப் பொருட்படுத்தவில்லை. அவன் மனைவியின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நிற்கும் போது வேறு யார்தான் முருகேசரைப் பற்றி அலட்டிக் கொள்ளப் போகிறார்கள்? மருமகளைத் தூக்கித் தலையில் வைத்த தந்தைக்கு 'இதுவும் வேணும், இன்னமும் வேணும், என்று பெற்ற பெண் மக்களும் வாளாது இருந்து கொண்டனர்.

ஒன்றையும் பொருட்படுத்தாத முருகேசர், அந்தக் குடிலிற் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து விட்டார்.

'இன்னும் எத்தனை நாளைக்கு நான் இருக்கப் போறன்' என்ற ஏக்கம் அவரைப் பீடித்து இருந்த போதிலும், அதனை விட - அவர் வேண்டிய அந்த 'வாரிசுத் தாகந்தான்' அவரை மிகவும் வருத்தியது.

கடந்த ஆடி அமாவாசை நாளன்றும், அவர் தானாகவே அந்தத்

தள்ளாத வயதிலும், நடந்து சென்று வைரவ சுவாமியின் விடிவிளக்கை ஏற்றி விட்டுத்தான் வந்தார்.

அதன் மறுநாள், அவர் அட்டாளையடியில் ஆட்டுக் குட்டியால் தடுமாறி விழுந்து போனார். அதன் பின் அவரால் எழும்பி நடக்க முடியவில்லை. நாரியில் பிடிப்பும் கூட வந்து, அவரைக் குடிலின் கட்டிலில் படுத்த படுக்கையாக்கி விட்டது.

பெற்ற பிள்ளைகள் ஊர்-உலக ஒப்பனைக்கு வந்தார்கள் - போனார்கள். வரும்போது, அப்புவுக்குப் பாக்கோ, வெற்றிலையோ, கஞ்சியோ, கூழோ கொண்டு வந்து கொடுத்துப் போனார்கள். அவ்வளவோடு அவர்கள் உறவும் பரிவும் பரிபூரணமாகின!

இவை எதுவும் முருகேசரை எந்த விதத்திலும் அலட்டிக் கொள்ளவில்லை.

ஆனால், அந்த விடிவிளக்கு - அவர் மட்டில் இன்னும் அது ஒரு கேள்விக் குறியாகத்தான் இருக்கிறது.

* *** *

இப்பொழுது நன்றாக இருட்டி விட்டது. வளர் பிறையும் கிழக்குப் பக்கப் பனங்கூடலுக்கு மேல், எழுந்து கொண்டிருக்கிறது.

அந்நேரம், அதுவரை சோம்பிக் கிடந்த பெட்டைக் கூழைவாலி, தோட்டத்துக் கிணற்றுப் பக்கமாகக் குரைத்துக் கொண்டு ஓடுகிறது.

"சீ!..... சும்மா கிடவன்......... நான் தான் காத்தி... அங்கால போ...... " என்று குரல் கொடுத்துக் கொண்டு 'மாலை முட்டியுடன்' கார்த்தி, முருகேசரை நாடி வருகிறான். "யாரது... காத்தியே!... வா... வா....! என்ன இண்டைக்கு நீயும் நல்லாச் செண்டு வாராய்?... ம்........ உனக்கும் இப்ப வேலை அதிகம் தானே?... சரி சரி.... அதுல உத வைச்சுப் போட்டு.... இஞ்சை....... இப்படி வா........" என்று, ஒரு புதிய தெம்பில் மறுகுரல் கொடுக்கிறார், முருகேசர்.

"ஏன், நயிந்தே... பிள்ளயல் ஆரும் வர இல்லயாக்கும்?....... உங்கள நெனைக்கத்தான் எனக்கு கயிட்டமாக் கிடக்கு!....." என்று மிகவும் ஆதங்கத்தோடு, முட்டியை ஒரு மூலையில் வைத்து விட்டு, முருகேசருடைய காலடியில் குந்தி இருந்தான், கார்த்தி.

கார்த்தி வேறு யாருமில்லை. முருகேசருடைய சிறைக்குடி மக்களில், மிகவும் விசுவாசமானவன். கார்த்திக்கும் முருகேசருக்கும் ஒரு பத்து வயதுதான் வித்தியாசம் இருக்கும். இருந்தும் கார்த்தி இன்னும் பனையேறி, திடகாத்திரமாக இருக்கிறான். அவன் குடும்பம் பெரியது.

பிள்ளைகள், பேரப் பிள்ளைகள் என்று அவனுடைய கொடியும் நீளப் படர்ந்து இருக்கிறது. இருந்தாலும், முருகேசரைப் போல், வாழ்ந்து கெடவில்லை. கூட்டிலிருந்து தனிமை படுத்தப்படவில்லை.

கார்த்தி கேட்ட கேள்விக்கு விடை கூறாதிருந்த முருகேசர், ஒரு தரம் நிமிர்ந்து எழுந்திருக்க முயல்கிறார். அவரால் எழும்ப முடியவில்லை. மீண்டும், தன் பலம் முழுவதையும் கொண்டு எழுந்து நிற்க முயல்கிறார்.

அம்முயற்சியில், கட்டிலில் 'தடார்' என்று சரியவும், கார்த்தி "என்ன நயிந்தே!" என்று எட்டிப் பிடித்துத் தாங்கவும் நேருகிறது.

நல்ல வேளை. ஒன்றிலும் அடிபடவில்லை. குடில் முகட்டையே வெறித்துப் பார்த்தபடி, படுத்திருந்த முருகேசர்-

"காத்தி........ நான் இன்னும் கன நாளைக்கு இருக்க மாட்டன்....... அதுக்கிடையில...... நீயும் உன்ரை பிள்ளயலும் என்ரை வாரிசுகளாக வேணும்!........."

என்று தட்டுத் தடுமாறி, கண்ணீர் மல்கப் பேசுகிறார்.

"என்ன நயிந்தே?..... உங்கன்ரை வாரிசுகளோ?!... அது எப்பிடி முடியும்....... நாங்க உங்கன்ரை சிறையல்..... உங்கன்ரை சொத்து சுகம்.... பிள்ள குட்டியல்....?!"

"காத்தி.... உதயெல்லாம் நிப்பாட்டு!.... என்ரை அப்பன், வைரவ சாமி... இப்ப ஏழெட்டு நாளா விளக்கு இல்லாமல் இருக்கிறான்.... அவன்ரை விடிவிளக்கை என்ரை பாட்டன், பூட்டன் ஏத்தி வைச்சவையல்... அது என்ரை காலத்தில அணைஞ்சு போச்சு... எண்டு இல்லாம இருக்க... நீயும் உன்ரை பிள்ள குட்டியலும் வைக்க வேணும்.... அங்கபார்... என்ரை அப்பன்ரை விளக்கு இண்டைக்கும் இல்ல... இப்ப முதல்ல.... நீ அங்க போய்... அத ஏத்திப் போட்டு வா... என்ரை சாதி - சனம் - பிள்ள - குட்டி எல்லாம் இனி நீ தான்!... இந்தா.... இதப்பிடி..." அதற்கு மேல், முருகேசரால் பேச

முடியவில்லை. வாய் மட்டும் என்ன, அவருடைய மூச்சுமே அதற்கு மேல் விடப்படவில்லை.

கார்த்திக்கு எல்லாம் விளங்குகிறது. கோயில் உறுதிகளுடன் நேராக வைரவர் ஆலய விடிவிளக்குக் கம்பத்தை நோக்கி அவனுடைய கால்கள் விரைகின்றன.

வளர் பிறை இப்பொழுது உச்சிக்கு மேல் வர, அந்த வைரவரின் விடிவிளக்கும் ஒரு புதிய தலைமுறைக்குக் கைமாறிச் சுடர் விட்டுப் பிரகாசிக்கிறது.

*

நன்றி - "தினகரன்" - வார மஞ்சரி

07 - 04 - 1985

10

# ஒரு புல்லாங்குழல் ஊமையாகி விட்டது

கலா பாவம்!

"ச்ச் "ச்ச்...!" என்று நான் எத்தனை தடவை சொன்னனான், உந்தப் பிள்ளய்க்கு...

கேட்டுதே?... இப்ப உவயல் கதைக்கிற கதையில என்ன உண்மை இருக்குது?... எனக்கல்லோ தெரியும், இந்தப் பெடிச்சியின்ரை விஷயம்!

உங்க பாருங்க... செல்லாச்சி மாமி வாறா... என்ன ஒப்புச் சொல்லி அழுறா என்டு கேளுங்கோ!...

கலா செத்துப் போனாள்!... அதுவும் நஞ்சு குடிச்சு! விஷயத்த எல்லாம் தனக்குள்ள அடக்கி வச்சு!... ஆரிலயும் குத்தம் இல்லாமல் கடிதம் எழுதி வச்சுப் போட்டுப் போட்டாள்.

ம்!

அவள் எதிர்பார்த்தபடி எதுவும் நடக்க இல்ல... எனக்கல்லோ, தெரியும்?... உந்த வீட்டு உள்ரகசியம்!

கலா பாவம்!

வீட்டுக்குத் தலப்பிள்ள... மூண்டு தம்பிமார்... ஒரு தங்கச்சி... அதுகள் எல்லாம் அவளில எப்பிடி எல்லாம் பாசம் வச்சுதுகள்?... ஏன், தாய் என்ன குறைவே?... தேப்பன் ஒன்டையும் வெளியில காட்டமாட்டார்... ஆனா இப்ப பாருங்கோ... வேப்ப மரத்துக்கு கீழ இருந்து அதுவும் இருட்டுக்குள்ள பெண்டுகளப் போல அழுகுது, மனுசன்!

பின்னேரம் தான் கலாவுக்கு கொள்ளி வச்சுப் போட்டு வந்தவர்... ஓமோம்!... ஏனென்டால், பொடியன் கலாவுக்கு இன்னும் தாலி கட்ட இல்ல... எழுத்து எழுதினா மட்டும் புருசனாகி விட முடியுமே?... எழுத்து எழுதி ஆறு மாசம் போச்சு! கலியாணம் செய்யயில்ல.. அதுதான் பொடியன் கொள்ளி வைக்கயில்ல... அது முறையில்ல என்டு, தேப்பன் மேளுக்கு கொள்ளி வச்சார்...

எழுத்து எழுதின பெடிச்சி, அதுதான் ஆறு மாசத்துக்கு மேல இருந்த பெடிச்சிக்கு, என்ன நடந்துது என்டுதான் எல்லாரும் 'குசு குசு' என்டு பேசியினம். நேத்து ராத்திரி பெடிச்சி மருந்து குடிச்சு ஆஸ்பத்திரியில முடிஞ்சு போன நேரம் இருந்து, காலயில சவத்தைக் கொண்டு போய் சுடலயில எரிச்சு... இப்ப அது எரிஞ்சு சாம்பலாய்ப் போன பிறகும், இஞ்சை தங்கன்ரை எலும்பில்லாத நாக்கால் எப்பிடி எல்லாம் நாக்கு வழிச்சுப் போட்டினம்? பெடிச்சியின்ரை உள் விஷயம் இப்ப உசிரோட இருக்கிறதுகளுக்குள்ள எனக்கு மட்டும் தான்

தெரியும்... என்னட்ட ஆர் கேட்கப் போயினம்?... கேட்டா... சத்தியமாச் சொல்லி எல்லாரையும் கூண்டில ஏத்திப் போடுவன்!... என்ன செய்ய?... அதக் கலாவும் விரும்ப மாட்டாள் தான்!...

கலா பாவம்!

எல்லாத்தையும் தனக்குள்ளேயே அவள் அடக்கிப் போட்டாள்!.

"கொஞ்சம் பொறுங்கோ!... எனக்குப் பசியாய் இருக்கு... உங்க, உந்த 'லைற்' வெளிச்சத்தில ஒரு பூச்சிப் பிள்ள, மெல்ல மெல்ல வாறார்..."

"வாரும், வாரும்!..."

ஆ! புடிச்சுப் போட்டன்!... என்ரை வாயில இருந்து தப்பப் பார்க்கிறீரோ? நான் விடுவேனோ?... ஓம்... சரி அவர் இப்ப என்ரை வயித்துக்குள்ள போட்டார்!"

கலாவின்ரை அம்மா, லச்சுமி ஒப்பாரி வைக்கிறா... கொஞ்சம் கேட்பம்... "என்ரை ராசாத்தீ!... எங்கள விட்டுப் போட்டு போக, உனக்கு எப்பிடியடி மனம் வந்துது? பிள்ள பிள்ள என்டு நீ கேட்டத எல்லாம் செய்தனே!... என்ரை ராசாத்தி உனக்கு நாங்க என்ன குறை வச்சமடீ... ஐயோ!"

ஓமோம்!... உண்மைதான். கலாவுக்கு இவையல் என்ன குறை வச்சினம்?

கலா பாவம்!

அவள் 'ஏஎல்' படிச்சவள். கொஞ்சம் 'மார்க்ஸ்' குறைஞ்சு போச்சு. இல்லாட்டி, அவள் இண்டைக்கு ஒரு பட்டதாரி. ஆள் கறுப்பி. எண்டாலும் நல்ல வடிவு! 'போட்டோ ஜீனிக்' அழகு அவளிட்ட நல்லா இருந்துது. சிரிச்சால், ரெண்டு கன்னத்திலயும் குழி விழும்... சுருக்கமாய் சொன்னா, அவளப் பார்க்கைக்க, எனக்கு 'கேஆர்' விஜாயாவின்ரை ஞாபகம் தான் வரும்.

'ஏஎல் கிளாஸ்' படிக்கைக்க, அவள் தெல்லிப்பழை 'டியூசன்' கிளாசுக்குப் போனாள். அப்பதான், அந்தப் பொடியன, வானுக்குள்ள கலா சந்திச்சாள்...

பொடியன் படிச்சது போதாது. ஏதோ ஏழோ எட்டோ தான் படிச்சிருப்பான். மேல படிக்க இல்ல. ஊர் சுத்தினான். பிறகு எங்கோ சவூதியோ பாரனுக்கோ போனான். ரெண்டு வரியத்துக்குப் பிறகு கொஞ்சம் பசையோட வந்தான்... கழுத்தில 'மைனர் செயின்'... கையில 'சீக்கோ' மணிக்கூடு... 'பெல் பொட்டம்', ட்றெலின் 'சேர்ட்... எல்லாம் கலாதியாகப் போட்டான். ஆளும், பறவாயில்ல. அவனும் கறுப்பு தான். இருந்தாலும் நல்ல மூக்கும் முழியும். பெட்டையலச் சும்மாவே மயக்கிப் போடும்!

'டியூற்றறி'க்கு எத்தனையோ பெட்டையல் வந்து போறாளுகள்... கலாவ அவன் கொத்தினானோ அல்லது அவனைக் கலா கொத்தினாளோ எனக்குத் தெரியாது. இது ஆண்டவனுக்கு தான் வெளிச்சம்! ஆனா, ரெண்டு பேரும் ஆள ஆள் கொத்திக் கொண்டினம்.

பொடியன் அப்ப சொந்த வான் வச்சிருந்தான். 'டியூற்றறி ரூட்டில'

தான் அந்த வானும் போச்சுது. காலயில ஆறு மணிக்கு அந்த 'பாலா விமானம்' வீட்டடிக்கு வருமுன்னே அதின்ரை 'கோன்' சத்தம் கேட்கும். கலாவும் ரெண்டு புத்தங்களோட படலைக்கு 'ரெடி' யாகப் போய் விடுவாள்... 'டியூசன்' என்டு அவள் காலையும் மாலையும் போய் வந்தாள். இப்படித்தான், அவயலுக்குள்ள அது தொடங்கி, ஒரு வரியமா நீறு பூத்த நெருப்புப் போல இருந்துது... இது ஆருக்கும் தெரியாது.

ஏஎல் வகுப்புச் சோதனை தோல்வி கண்ட போதுதான், தேப்பனும் தாயும் மேளின்ரை சம்பந்த விஷயத்தை எடுத்தினம். நல்ல சம்பந்தங்கள் எல்லாம் வந்தும் கலாவ ஆழங்காண முடியாம தேப்பனும் தாயும் திக்குமுக்காடிப் போட்டினம்.

கலா பாவம்!

அவள் என்ன செய்வாள்? தேப்பனையும் தாயையும் "நான் ஏமாத்திப் போட்டேனே" என்டு எத்தினை நாள் உந்தக் கட்டிலில கிடந்து, வெளியில காட்டாம அழுதாள், தெரியுமே?

எங்கன்ரை பிள்ளையலுக்கு இது ஒரு பெரிய சாபக்கேடு! தாங்கள் விரும்பியதைத் தங்களின்ரை பெற்றாருக்கு நேரில சொல்ல முடியாது. இது வெட்கத்தால அல்ல, அச்சத்தால் தான், வாரது... இந்த விஷயத்தில பெறறோரும் மிச்சம் இறுக்கம். பிள்ளையலும் மிச்சம் அமுசடக்கியள்... உதால தான், எத்தினியோ நல்ல விஷயம் எல்லாம் தவிடு பொடியாய்ப் போகுது... நல்ல காலத்துக்கு, கலாவின்ரை முன் வீட்டு 'டீச்சர் அன்டி' உந்த விஷயத்தில கொஞ்சம் உதவினா... அவ கலாவின்ரை உடல் உருக்கத்திலயும் போக்கிலயும் வித்தியாசத்தக் கண்டு பிடிச்சவ.

அவவுக்கு இதில கொஞ்சம் சொந்த அநுபவம் இருந்துது... அவவும் இப்பிடித்தான்... தன்னோட படிப்பிச்ச ஒரு மாஸ்டரைக் காதலிச்சு... வீட்டில கிளம்பின எதிர்ப்புகள எல்லாம் சமாளிச்சு... கடசியில தான் விரும்பினவரோட சேர்ந்து இப்ப குடியும் குடித்தனமுமாக இருக்கிறா...

'டீச்சர் அன்டி' கலா விஷயத்தில ஈடுபட்டு தேப்பன் தாயச் சமாளிச்சு பொடியன்ரை வீட்டுக்குச் சம்பந்தம் பேசிப் போக வச்சா... இந்த விஷயத்தில 'டீச்சர் அன்டி' கொஞ்சம் பிழை விட்டுட்டா!...

தேப்பனுக்கு உந்தச் சம்பந்தத்தில கொஞ்சம் கூட விருப்பம் இல்ல... இருந்தாலும், மனுசன் பலதையும் யோசிச்சு... தானே முன்னின்டு செஞ்சுது...

தேப்பனுக்கு நல்லாத் தெரியும், தன்ரை பிள்ளயின்ர குணம்!... தாயப் போல ஒன்டில ஆசை வச்சா அதுக்காக இல்லாத கூத்தெல்லாம் ஆடிப் போடுவாள், கலா!

உவ தாய், உந்த மனுசனை அந்த நாளில என்ன பாடு படுத்தினா என்டு தெரியுமே?... மனுசன் சில நேரம், பகிடியாகவும் 'சீரியசா'கவும், சொன்னது என்ன என்டு எனக்கு இப்ப ஞாபகம் வருகுது...

தேப்பன் நடராசா... அந்த நாளில் நல்ல வாட்ட சாட்டமான ஆம்பிள... மனுசன் கருகம்பானை பக்கம்! அதுதான் ஆள் நல்ல கறுப்பு. இளமையில தோட்டங் கொத்தினது.

ஆனா நல்லாப் படிச்சவர். அது இடையில குழம்பிப் போய்ச்சுது.. எஞ்சினீயர் பட்டம் பெறா விட்டாலும் நல்ல திறமான மெக்கானிக்.

இப்பவும் அந்த மனுசன் அந்த பெக்டறியில இல்லாட்டி மெசின் ஒன்டும் ஓடாது என்டு சொல்லுவினம். அப்பிடிக் கெட்டிக்காரன்! இப்ப அப்பிடி என்டா, அந்த நாளில எப்படி இருந்திருப்பார்? மனுசன் கன்னி ராசிக்காரன்.

மனிசியும் அந்த ராசிதான்! இந்த ராசியின்ர பலன் தான் ரெண்டு பேரையும் அந்த நாளில மிச்சம் கஷ்டப்படுத்திப் போட்டுது!... மனுசிக்கு, மனுசன் எந்த நேரமும் பக்கத்தில இருக்க வேணும். வேலைக்குப் போய், கொஞ்சம் வரப் பிந்தினால் போதும்! மனுசி கார் பிடிச்சு, பெக்டறிக்குப் போய்விடும்! இப்பிடி ஒரு 'வீக்னஸ்' மனுசிக்கு! அம்மாவில குத்தமில்ல. ஏனென்டால் அவ அப்பிடி ஒரு பாசத்துக்காக - ஆதரவுக்காக - பிறர் தயவுக்காக ஏங்கி ஏங்கி வாழ்ந்தவ... இளமையில இவ மிச்சம் கஷ்டப்பட்டவ.

லச்சுமி அம்மா பிறந்து எட்டாம் மாசத்தில தாய விழுங்கிப் போட்டா. அவவின்ரை தேப்பனும் இவவுக்கு அஞ்சு வயசாக இருக்கும் போது செத்துப் போனார். வேற சகோதரங்களும் இல்ல... கொஞ்ச நாள் இவவின்ரை பெரிய தேப்பன் அவவப் பார்த்தார். அவையின்ரை குடும்பத்துக்குள்ள பிரச்சினை வர, அம்மாவின்ரை தாய் மாமன் இவவக் கொண்டு போய் வளர்த்தார். மாமன் நல்ல மனுசன்... ஆனா மாமி தான் பொல்லாதவ... அவையலுக்கு பிள்ள குட்டியல் இல்ல.

தாய், தந்தை சகோதரங்களுக்காக ஏங்கிய அம்மா கடசியில மாமியின்ரை நெருக்குவாரத்துக்குள்ள எல்லாத்தையும் அடக்கிப் போட்டா. இதனால மாமாவுக்கும் மாமிக்கும் இடையில எந்த நேரமும் கரைச்சல்.

சின்னப் பெட்டையா இருக்கைக்க கூட அம்மா ரெண்டு தரம் தற்கொலை செய்ய முயற்சித்தா! ஏதோ மாமன் தடுத்துப் போட்டார். கடசியில மாமா, மாமிய விட்டுப் போட்டு, மருமேளக் கூட்டிக் கொண்டு இந்த வளவுக்கு வந்திட்டார்.. அதுக்குப் பிறகு எவ்வளவோ மாற்றங்கள் இஞ்சை நடந்துது... பிரிஞ்ச மாமியும் மாமனும் கடசி வரை பிரிஞ்சு தான் இருந்தினம். அம்மாவும் வளர்ந்து குமராகி நடராசரை, உரிய வயசில முடிச்சா... கலியாணம் முடிச்ச ஒரு வரியத்துக்குள்ள கலாவப் பெத்தா. பிறகும் அடுக்கடுக்கா வரியம் ஒன்டாக மற்றதுகளையும் பெத்தா... பிள்ளகளிலயும் புருசனிலையும் இனி இல்ல என்ட பாசத்த வைச்சா... அந்தப் பாசம் என்ட ஒன்டுக்குத் தான் உந்த மனுசி படாத பாடெல்லாம் பட்டு... அத மேலும் பெருக்கிக் கொள்ள அவ படுற பாடு? தனக்குத் கிடச்சத ஆரும் பங்கு போட மனுசி விடாது! அத அன்றும் விட இல்ல, இன்றும் விட இல்ல... அதனாலத் தான் அந்த நாளில இருந்து மனுசி தன்னயும் வருத்தி, மற்றவர்களயும் மூர்க்கமாகத் தாக்கினா... இப்பவும் தாக்கிறா!

இத நல்லாத் தெரிஞ்சு வச்சவர், நடராசர். இதுக்காக அவர் தன்ன எவ்வளவோ வளச்சுக் கொடுத்தார், தெரியுமோ?

ஆனா... அது இன்டைக்கு எந்த உருவத்தில வந்திட்டு என்டு பாருங்கோ?

கலா பாவம்!

அவள் தான் என்ன செய்வாள்?

கலா பாலனைச் சந்திச்ச காலத்தில, அவன் ஏதோ சொர்க்கம் எண்டு நினைச்சுப் போட்டாள்! ஒளிச்சு ஒளிச்சு அவனச் சந்திச்ச நாளில அவன இவ நல்லா இனங் கண்டு கொள்ள முடிய இல்ல...

அவன் சொந்த 'வான்' ஓடியவன்... அத வித்துப் போட்டு, கூலிக்கு 'வான்' ஓடினான்.... சீதனம் வேணும் எண்டு கேட்டு, அதயும் காசாக வாங்கிப் போட்டான்.... உழைப்பு - வைப்புச் செப்பு எல்லாம் அவன்ரை தமக்கையிட்டத் தான் எண்டு எல்லாரும் சொல்லியினம்...

ஆனா, தமக்கை அத மாற்றித்தான் சொல்லுறா....

இதுக்கு, அவ புருசனத் தின்னி!... அந்தத் தமக்கை நல்லா இருக்கிறா... அவவுக்கு ரெண்டு பிள்ளயல்... ஒண்டு இப்பவோ பின்னயோ எண்டு இருக்கு, குமராவதுக்கு!... இதுக்குள்ள அவ நல்ல 'பசனில' வீடு ஒண்டு கட்டிப் போட்டா.... எல்லாம் பாலன்ரை காசில தான், எண்டு இஞ்சை எல்லாரும் கதைக்கினம். அது வேற விஷயம்!

காசு விஷயம் தான் அப்பிடி இப்பிடி எண்டா, பாலன் மற்ற விஷயங்களிலாவது கொஞ்சம் நீதி நியாயமாய் இருந்தானா?... சொல்லுறதெல்லாம் பொய்... செய்யுறது எல்லாம் திருகுதாளம்!... இதுக்குள்ள கொஞ்சம் 'பாவிக்கவும்' செய்யுறான்!

கலா பாவம்!

கலாவுக்கு உதெல்லாம் பிறகுதான் தெரிய வந்துது.

இதெல்லாம் தெரிஞ்சும் தெரியாதவ போல இருந்தாள்.

எழுத்து எழுதி ஆறு மாசத்துக்கு மேலாய்ப் போச்சுது... தாலியக் கட்டி, விஷயத்த முடிக்க தேப்பனும் தாயும் தெண்டிச்சுப் பாத்தினம்.. அதுக்கு பாலன் சாக்குப் போக்குச் சொல்லிப் போட்டான்.

தான் இன்னுமொருக்கா 'மிடில் ஈஸ்ட்டுக்கு' போட்டு வரவேணும் என்டு, ஒத்தக் காலில நின்டான். அதச் சொல்லி, பல தடவை கொழும்புக்கும் போய் வந்தான். இந்தா பத்தாம் தேதி 'பிளைட்!....' பதினைஞ்சாம் தேதி 'பிள்ளட்' என்டு சொன்னான். தாலியக் கட்டிப் போட்டு போற இடத்துக்குப் போட்டுவா.... என்டு எல்லாரும் சொல்லியும் அவன் அசையவில்லை! இதில தமக்கை மட்டும் அவன்ரை பக்கமாக நின்றா.....

இதுக்கிடயில, அவன் நாள் தவறாம கலாவைச் சந்திக்க, வீட்டுக்கு வந்து போனான்.

இப்பிடித்தான், அன்டைக்கு ஒரு நாள்.... தேப்பன் வேலைக்குப் போட்டார்... தாயும் கோயிலுக்குப் போட்டா..... சகோதரங்களும் பள்ளிக்கூடத்துக்குப் போட்டுதுகள்... கலா மட்டும் தான் வீட்டில இருந்தாள்.... பாலன் வந்து, உந்தப் படுக்கை அறையில கலாவுடன் இருக்க நல்ல சந்தர்ப்பம், இருந்துது.. விஷயம் எனக்குத் தானே தெரியும்!

கலா பாவம்!

என்ன செய்வாள்? எழுத்தும் எழுதியாச்சுது... இனி என்ன? இள எண்ணங்கள் - ஆசைகள் கண்ணை மறச்சுப் போட்டுது!

எழுதினா மட்டும் போதுமா?.... டிருசன், பொண்சாதி ஆகி விடமுடியுமா?.... எங்கன்ரை ஊரவை சும்மா விடுவினமே?...

பாலன் வீட்டுக்கு வரலாம் போகலாம்... ஆனா, தாலி கட்ட முன்னம் ரெண்டு போரும் தனிமையில இங்க இருக்கிறத தேப்பன் விரும்ப இல்ல.... அத தாய் மூலம் கலாவுக்கு அவர் எப்பவோ சொல்லியும் போட்டார். கலா இத பாலனுக்கு சொல்லிப் போட்டாள்.

ஆனா....

கலா தனக்குள்ள யோசிக்கத் தொடங்கினாள். இப்ப அவன் வீட்டுப் பக்கம் வாரது குறைஞ்சு போச்சு.... அவன்ரை போக்கும் இப்ப மாறிப் போச்சு... இது, ஆசை அறுவது நாள், மோகம் முப்பது நாள் ஆக்கும்!

அது கலாவப் பெரிசாப் பாதிச்சுது... இருந்தும் அவள் அத வெளியில காட்டிக் கொள்ள இல்ல.

அப்பத் தான், கலாவுக்கு அந்தச் செய்தியும் கிடைச்சுது.

பாலன் கலாவச் சந்திக்க முன்னே, சாந்திய ஏமாத்திப் போட்டு 'மிடில் ஈஸ்டுக்கு' போய் வந்தவன்.... சாந்திக்கு இப்ப ஒரு குழந்தையும் ஐஞ்சு வயசில இருக்கு.... அவள் துணிச்சல்காரி! தன்ரை தவறை உணர்ந்து, வேளைக்கே அவனைக் கைகழுவிப் போட்டாள்.

இந்த விஷயத்த கேட்ட கலா துடிதுடித்துப் போனாள். அத பாலனிடமும் கேட்டு விட்டாள்.

அதில இருந்து ரெண்டு பேருக்கும் இடயில ஒரு பெரிய இடைவெளி, இருவரையும் அறியாமல் தோன்றி வளர்ந்து விட்டது.

இதுவும் ஆருக்கும் தெரியாது.

கலா பாவம்!

அவளால் ஒன்டும் செய்ய முடியவில்லை.

இந்த இடையிலதான், கலாதான் ரென்டு மாசம முழுகாம இருந்தது தெரிஞ்சு போச்சு! எல்லா இடியிலும், இந்தப் பேரிடிதான் அவள நல்லாத் தாக்கிப் போட்டுது... தானே வலிஞ்சு கட்டிக் கொண்ட வாழ்வில், தானே மண்ணை அள்ளிப் போட்டது போல எல்லா விஷயமும் நடந்து போச்சுது...

கலாவால் தாங்க முடிய இல்ல.... தனக்குள்ளயே எல்லாத்தையும் மூடி மறைச்சுப் போட்டாள்!

இப்ப கடசியில.... தன்னையே அழிச்சுப் கொண்டாள்!

கலா பாவம்!

*

நன்றி - "வீரகேசரி" - வார இதழ்
1985

11

# துரோகங்கள் எப்பொழுதும் நியாயப்படுவதில்லை

நண்பகல் வெயில் உச்சியைப் பிளந்து கொண்டிருக்கும் பொழுதுதான், பலாலி விமானத் தளத்திலிருந்து ஒரு 'வல்லூறு' மேலெழுந்தது. அதனைத் தொடர்ந்து கிழக்கிலிருந்து மேற்காக 'டும்....டும்..... 'என்று'செல்' குண்டுகளும் இரண்டொன்று வெடித்தன. அந்த நேரம் மேல் எழுந்த அந்த 'வல்லூறின்' வயிற்றில் இருந்து சன்னங்கள் சரமாரியாகச் சொரிந்து கொண்டிருந்தன.

அதே நேரம், அக்கிராமத்துச் சந்தியில் இருந்து கிழக்கு நோக்கி, பதில் வேட்டுகளும் எழுந்து கொண்டு இருந்தன.

இவற்றுக்கு இடையில், 'அவன்கள் வந்திட்டான்கள்' என்ற செய்தியும் கிராமத்துக்குள் வேட்டு வேகத்திலும் வேகமாக வந்தது. ஏற்கனவே, காலையிலிருந்து கதிகலங்கி நின்ற கிராம மக்கள் செய்வது அறியாது தத்தளித்தனர்,

கிழக்கிலிருந்து மேற்காக வந்த வேட்டுகள் துரிதமாகி முன்னேறிக்

கொண்டிந்தன. ஆனால், மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிய வேட்டுகள் குறைந்து, பின்வாங்கிக் கொண்டிருப்பது போல் தெரிந்தன.

பலாலி விமான ஓடு பாதையின் பக்கமாக கால் நடையில் வந்த படையினர் சந்தி வரை வந்து விட்டார்கள். ஓடித் தப்ப உடல் வலுவும், வாகன வலுவும் உள்ள ஒரு சிலர், முதல் வேட்டுச் சத்தம் கேட்ட பொழுதே மேற்குப் பக்கமாக ஓடித் தப்பினார்கள். அவ்விதம் ஓட முடியாதவர்கள் வீட்டுக்குள் முடங்கி, பீதியுடன் ஒளிந்தார்கள். அங்கு, ஆண்-பெண், குஞ்சு குறுமான்கள் எல்லோரும் உயிரைப் கையிற் பிடித்தவாறு நடுநடுங்கிக் கொண்டு இருந்தார்கள்.

சற்று நேரத்துக்குள், கிராமம் சுற்றி வளைக்கப்பட்டது. பால் மணம் மாறாத பச்சிளம் பாலர்களும் தொண்டு கிழவர் வரை சந்திக்கு அருகாமையில் இருந்த பாடசாலை விளையாட்டு மைதானத்துக்குக் கைகளை தலைக்கு மேல் உயர்த்தியபடி, அழைத்து வரப்பட்டனர். அவர்களுடன், ஒரு மாதிரியாக இருந்த இளம் பெண்களும் நின்றனர். இந்தநேரம், 'ஓடினார்கள்' என்ற சாட்டில் ஒரு சிலர் ஆங்காங்கே சுடப்பட்டும் வீழ்ந்தார்கள்! மைதானத்தில், தவமாக நின்றவர்களில் சுமார் நாற்பது பேர், "பயங்கரவாதிகள்" என்ற முத்திரை குத்தப்பட்டு, வந்திருந்த 'ட்ரக்கு' களில் ஆடு மாடுகளாக 'அள்ளிப் போட்டு' அடைக்கப்பட்டனர். பின்பு, அவை உறுமிக் கொண்டு, பலாலி முகாமை நோக்கிச் சென்று விட்டன.

இவ்வளவும், ஓரிரு மணி நேரத்துக்குள் நடந்து முடிந்து விட்டன.

*  ***  *

அன்று இரவு பத்து மணியளவில் அந்தக் கிராமத்தில் இருந்து 'பயங்கரவாதிகள்' என்ற அவர்களின் பூர்வாங்க விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்தது.

"அடோ!...... நீ......'ரக்ஷவாதி' தானே?......"

". . . . . . . . . . . . . . . . . ."

"என்னடா ........ நீ.......பேசிறது இலே!......."

"என்னடா..... நீ... பேசிறது இலே!....."

"........மகனே!....... பேச மாட்டியா?......" என்று கொச்சையும், ஊத்தையும் கலந்த அரை குறைத் தமிழில் அந்தப் பெரிய 'சீருடைக்காரர்' கேட்டார்.

அது ஒரு தனியறை. நடுவில் ஒரு பெரிய மேசை. அதைச்சுற்றி நாலைந்து கதிரைகள். மேலே மின்காற்றாடி, சுழன்று கொண்டு இருந்தது. காற்றாடிக்குக் கீழாக தொங்கும் மின்விளக்கு, காற்றாடியின் 'சடக்சடக்' என்ற அபசுரத்துக்கு ஏற்ப ஒளியை ஆட்டி ஆட்டிப் பீச்சிக் கொண்டு இருந்தது.

மிகவும் 'கண்டிப்பானவர்' என்ற பெயர் வாங்கிய அந்த இராணுவத் தளபதியார் தனது கெடுபிடியான 'இராணுவ மிடுக்கை ' அள்ளி வீசிக் கெண்டிருந்தார். அன்று பின்னேரம் கொண்டு வரப்பட்டவர்களை விசாரித்துக் கொண்டிருந்தார்.. அதுவரை அவர் முன் நிறுத்தப்பட்ட பலருக்கு, அவர் மிகவும் இலகுவாக 'அந்த முத்திரையை'க் குத்தி

விட்டார். இப்பொழுது, அவருக்கு முன்னால் - 'அறுவைக்கு வந்த வெள்ளாடு' போல் அமைதியாக நின்றார், ஆசிரியர் கனகசூரியர்.

கனகசூரியரைச் சுற்றி, மூலைக்கு மூலை துப்பாக்கி நீட்டிய வீரவான்கள் புடை சூழ்ந்து நின்றனர். அவரிடம் தான், அப்பொழுது தளபதியார் தனது பாஷையில் ஊத்தையும், கொச்சையும் தெளித்துச் 'சீல்' குத்த முனைந்து இருந்தார்.

எல்லோரையும் போல் "எனக்குத் தெரியாது" , ஐயா ". "நான் பயங்கரவாதி இல்ல" என்று எதிர்பார்த்த தளபதிக்கு, அவர் வாய் திறக்காமல் இருந்த செயல் ஆத்திரத்தையும், கொதிப்பையும் ஊட்டியது.

ஆசனத்தை விட்டு, 'படார்' என்று எழுந்த தளபதியார் 'பளார்' என்று கனகசூரியரின் கன்னத்தைப் பதம் பார்த்தார்.

" நீ பேச மாட்டியா...... பண்டி?" என்று கேட்டார், தளபதியார்.

அதன் பின்புதான் ஆசிரியர் வாய் திறந்தார்.

"ஐயா......... அப்பாவிகளை இப்படிச் சித்திரவதை செய்கிறீகளே!?..... இது தர்மமா? தர்மத்தின் பேரில் நம்பிக்கை உள்ள நீங்கள் தர்ம வழியில் நடக்க வேணும்... அதுதான் தர்மம்! அப்பொழுதுதான் கடவுள் எங்கள் எல்லாரையும் காப்பாற்றுவார்...." என்று மிகவும் அமைதி யாகவும், துணிவாகவும் நல்ல தூய சிங்கள மொழியில் பதில் கூறினார். அதுவரை வாய் பேசாது, மௌனியாக நின்ற கனகசூரியரின் வாயிலிருந்து தர்மோபதேசம் ஆக, அதுவும் தளபதியாரின்

தாய்மொழியில் வந்த வார்த்தைகள் ஒரு கணம் அவரைத் திகைக்க வைத்தன.

"என்ன!...... உங்களுக்கு சிங்களம் தெரியுமா?.... நல்ல சிங்களத்தில் பேசுகிறீர்களே!... நீங்கள் யார்?...." என்று மிகவும் மரியாதையாகவும் ஒருவித பணிவாகவும் கேட்டவாறு ஆசனத்தில் அமர்ந்தார், தளபதியார். அத்துடன்,.

"மன்னித்துக் கொள்ளுங்கள் ..... நீங்கள் இப்படி இருங்கள்....." என்று தனக்கு முன் இருந்த ஓர் ஆசனத்தைக் காட்டியபடி கனகசூரியரை மேலும் கௌரவித்தார், தளபதியார். ஆசிரியர் அவர்கள் வாய் பேசாது, அவர் காட்டிய ஆசனத்தில் போய் அமர்ந்தார். "நான் யார் என்று முன்பே கேட்டு இருந்தால் எவ்வளவோ கூறி இருப்பேன்..... இருந்தாலும் பரவாயில்லை... நீங்கள் அரச ஊழியர்.... உங்கள் கடமையைச் செய்கிறீர்கள்... ஆனால் தர்மத்தை நினைத்து தர்மவழியில் உங்கள் கடமையைச் செய்யுங்கள்... அநியாயமாக அப்பாவி மக்களைத் துன்புறுத்தாதீர்கள்... எய்தவன் இருக்க அம்பை நோவது சரியில்லை!.... அவர்கள் பாவம்....." என்று தெளிவாகவும், அதே நேரம் சிறிது உறைப்பாகவும் - இப்பொழுது, ஆங்கிலத்தில் பேசினார், கனகசூரியர்.

எல்லாவற்றையும் அமைதியாகக் கேட்ட தளபதியார்,

"நீங்கள் நன்றாகப் பேசுகிறீர்கள்..... பாவம் - புண்ணியம் - தர்மம்- அதர்மம் என்றெல்லாம் பேசுகிறீர்கள்... இதனை உங்களுடைய 'பொடியன்களுக்கும்' சொன்னால் நல்லதே! உங்களுக்குத் தெரியுமா?.....

உங்களுடைய ஆக்கள், எங்களுக்குத் தார கஷ்டங்கள்? நிலக்கண்ணி வெடி, கைக்குண்டு, றொக்ற் லோஞ்சர்.... என்று வைத்துக் கொண்டு எங்களைக் கொன்று குவிக்கிறார்களே!... இதுக்கு நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள்?..." என்று ஒரு வித ஏளனத்தோடு கேட்டார்.

"உங்களுக்கு இப்பொழுது சொன்னதை இங்கு மட்டுமல்ல... வெளி யலயும்தான் கூறுகிறேன். ஆனால், இரண்டு பக்கமும்..." என்று வார்த்தையை கனகசூரியர் முடிக்கு முன்பே, "இல்லை உங்களுடைய ஆக்களைத்தான் திருத்த வேணும்!...." என்று உறைப்பாகச் சொன்னார் தளபதியார்.

கனகசூரியர் எதிர்த்துப் பேசவில்லை.

"சரி..... போகட்டும் .....உங்களுடைய வார்த்தையை நான் நம்புகிறேன்... நீங்கள் போகலாம்.... ஆனால், நீங்கள் எனக்கு உதவி செய்ய வேணும்....." என்று தன் ஓரக் கண்ணால் பார்த்தவாறு கேட்டார், அவர்.

"நான் உங்களுக்கு உதவுவதா?...எப்படி?..." என்று கேட்டுக் கொண்டே ஆசனத்தை விட்டு எழுந்தார், கனகசூரியர்.

"ஆம்! இங்கு உங்களுடைய ஆக்கள் இருக்கிறார்கள்... அவர்களுக்கும் வெளியில இருக்கிற அவர்களுக்கும் நீங்கள் புத்தி சொல்ல வேணும்!... அதாவது, உங்கள் பாணியில் 'தர்மோபதேசம்' !...." என்றார், தளபதி.

" நிச்சயமாகச் செய்வேன் !....! எங்களுடைய ஆக்கள் 'என்று நீங்கள் சொல்லுபவர்களுக்கும் உங்களுடைய ஆக்கள்' என்று நாங்கள் சொல்லும் ஆக்களுக்கும் உபதேசம் செய்ய நான் காத்திருக்கிறேன்....." என்றார், ஆசிரியர்.

" உங்களை வரவேற்கிறேன்... சரி அப்படி என்றால், நாளை மறுநாள்... ஞாயிற்றுக் கிழமை நீங்கள், இந்த முகாமுக்கு வர வேணும்......." என்று கட்டளையாகவும், வேண்டுகோளாகவும் இட்டார், தளபதியார்.

இந்த நிகழ்வோடு, அன்றைய விசாரணை முடிந்தது. அத்துடன், ஆசிரியர் கனகசூரியர் வீடு செல்ல இராணுவ 'ஜீப்' ஒன்றும் தளபதியின் பாசறைக்கு முன் வந்து நின்றது.

* *** *

மறுநாள் காலையில், ஆசிரியர் இராணுவ முகாமில் இருந்து விடுதலையானார் என்ற செய்தியோடு அவர் அங்கிருந்து மரியாதையாக 'ஜீப்' பில் கொண்டு வந்து விடப்பட்டார் என்றும் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை அவர் முகாமுக்கு 'ஞானோபதேசம்' செய்யப்போகிறார் என்றும் பேச்சோடு பேச்சாக செய்திகள் வந்தன. இச் செய்தி, ஒன்றுக்குப் பத்தாகி, பத்து நூறாகி மூலை முடுக்கெல்லாம் அன்று நண்பகலுக்கு முன் பரவிக் கொண்டது.

இரவு ஏழு மணி இருக்கும்.

ஆசிரியர் தனது பூசையறையில் தேவாரம் பாடி விட்டு, வெளி

'ஹோலுக்கு' வந்தார். அங்கு குழந்தை ரேணுகா தாயின் மடியில் இருந்து, தாயூட்டிய உணவைத் தின்று கொண்டு இருந்தாள். குழந்தைக்கு நிர்மலா உணவைக் குழைத்து, பிடிபிடியாக்கி ஊட்டிக் கொண்டு இருந்தாள். அப்பொழுது, படலை வாசலில் ஒரு வாகனம் வேகமாக வந்து நின்றது. அதனைத் தொடர்ந்து,

"மாஸ்டர்.... மாஸ்டர்....!" என்ற அழைப்பொலியும் வந்தது.

" யாரோ கூப்பிடுயினம் போலக் கிடக்கு!....... கொஞ்சம், பாத்துப் போங்கோ..." என்று வெளியில் செல்ல முயன்ற தனது கணவனைத் தடுத்து நிறுத்தினாள், நிர்மலா. "யாராயிருந்தா என்ன? .... கூப்பிட்டா ஏனெண்டு கேட்கிறதில்லையா?....?" என்று கூறிக் கொண்டு வெளி முற்றத்துக்கு வந்த கனகசூரியரை இரண்டு காளையர் வரவேற்றனர். "மாஸ்டர்... உங்களோடக் கொஞ்சம் கதைக்க வேணும்... சேட்டைப் போட்டுக் கொண்டு வாருங்கோ.... கேட்டடியில கதைப்பம்...."என்றார், வந்தவர்களில் ஒருவர்.

"சரி, வாரன் .... 'சேட்' என்னத்துக்கு?...... இந்தக் துண்டுத் துவாய் போதும்..." என்று தான் தோளில் போட்டிருந்த துண்டை உதறிப் போட்டுக் கொண்டு பின் சென்றார், கனகசூரியர். சற்று நேரத்தில், வந்த வேகத்தில் அந்த வாகனம் கனகசூரியரையும் சுமந்து கொண்டு போய் விட்டது.

வாகனம் சென்று நெடு நேரமாகியும் கணவன் வராது இருப்பதை உணர்ந்த நிர்மலா துடி துடித்தாள். விஷயம் விளங்க அதிக நேரமாகவில்லை. அவள் எதிர்பார்த்தது நடந்து விட்டது. அலறித்

துடித்தாள். அயலவர் வந்து துக்கம் விசாரித்தனர்.

"கொண்டு போனவன்கள்.... விசாரித்துப் போட்டு, விட்டு விடுவான்கள்....." என்று ஆறுதலும் கூறினார்கள், சிலர்.

ஆனால்???.

*   ***   *

நிர்மலா இந்த மண் வாசனை இல்லாதவள். தமிழிச்சியாக இருந்தும், தென் பகுதியில் இரண்டு மூன்று பரம்பரைக்கு முன் குடியேறிய வம்சத்தில் பிறந்தவள். தொழில் காரணமாக, அங்கு வந்த கனக சூரியரில் தன் மனத்தைப் பறிகொடுத்த காரணத்தால், அவருடன் வாழ்விலும், தாழ்விலும் இணைந்து கொண்டாள். குழந்தைகள் இரண்டுக்கும் தாயானாள்.

ரேணுகா பிறந்து ஒரு வருடம் கூட ஆகவில்லை. அப்பொழுது தான் அந்த இனக் கலவரம் என்ற 'ஆடிச் சூறாவளி' யில் அகப்பட்டு வீடு வாசல், சொத்து சுகம், உற்றார் - உறவினர் என்று எல்லாம் இழந்ததோடு அருமையான மூத்த மகனையும் இழந்தார்கள். ஈற்றில், அகதிமுகாமில் உடுத்த உடையோடு ஒரு வாரம் ஒடுங்கி நின்று, கப்பல் மூலம் காங்கேசன்துறைமுகத்துக்குக் கணவனுடன் அவரின் பிறந்த மண்ணான இந்தக் கிராமத்துக்கு வந்து, எவ்வளவோ இடர்களுக்கு மத்தியில் தன்னை நிறுத்தி, தன் குடும்பத்தைச் சுகமாகப் பேணினாள் நிர்மலா.

கனகசூரியர் ஓர் ஆங்கில ஆசிரியர். நீண்ட காலம் தென் பகுதியில்

இருந்தவர். நல்ல புலமையும் நல்ல ஆற்றலும் கொண்டவர். தர்மம், நீதி, நியாயம், நேர்மை என்று அதிகம் கற்றவர். கற்றதை வாழ்விலும் கடைப் பிடிக்க விழைந்து நிற்பவர். அதனால், எல்லோரையும் நல்லவராக நினைத்தார். பகைவனையும் நண்பனாக நம்பினார்.

அப்படிப்பட்டவருக்குத் தான் அந்தக் சிக்கல் ஏற்பட்டது.

* *** *

அன்று ஞாயிறு காலை. தெல்லிப்பழைச் சந்தியில், தெற்கு நோக்கியிருந்த மின்கம்பத்தில் முப்பது வயது கணிக்கக் கூடிய ஓர் ஆண் உடல், அரையில் 'சரமும்', மேனி வெறுமையாகவும் இருக்கக் கட்டப்பட்டு இருந்தது. உடலில் உயிர் இல்லை. நெற்றிப் பொட்டில் ஒரு சூட்டுக் காயம். காலடியில், 'துரோகி' என்ற சான்றிதழ் கிடந்தது.

சனக் கூட்டம், நெருக்கியடித்துக் கொண்டு வேடிக்கை பார்த்து மகிழ்ந்தது.

"மாஸ்டர்..... இப்பிடிச் செய்யிறதே?......." என்று வினாவியது, ஒரு குரல்.

செய்தி, நிர்மலாவுக்கும் வந்தது. அவள், தன் கணவன் 'துரோகி' அல்ல!" என்று கத்திக் கதறிக் கதறி வாதாடினாள். அவை எல்லாம், எப்பொழுதோ முடிந்த காரியம் ஆகி விட்டன.

மறுநாள் மாலை, முன்பு வந்த அதே 'வெள்ளை வான்' கனகசூரியர் வீட்டுப் படலையடியில் வந்து நின்றது. முதல் நாள் வராத மூன்று

காளையர் படலையைத் திறந்து கொண்டு வீட்டுத் தலை வாசலுக்கு வந்தார்கள்.

ஆசிரியரின் கருமாதிகளை முடித்தவர்கள் எல்லோரும் போய் விட்டார்கள்.

நிர்மலா பொட்டிழந்து, பூவிழந்து வெண்ணிற ஆடையில் தலைவாசல் தூணில் சாய்ந்து இருந்தாள். குழந்தை ரேணு, மடியில் கண்வளர, அவள் கண்கள் நீர் சொரிந்து கொண்டு இருந்தன.

"அக்கா........ மன்னிச்சுக் கொள்ளுங்கோ...... நடந்தது, நடந்து போச்சுது.... இந்தாருங்க... இதப் புடியுங்கோ!......"என்று ஒரு கட்டுக் காசு நோட்டு களை வந்த வாலிபர்களில் ஒருவர் நிர்மலாவிடம் நீட்டினார்.

ஒரு கணம், காசுக் கட்டையும் வந்த வாலிபர்களையும் ஏற இறங்கப் பார்த்தாள், நிர்மலா. குழந்தையும் எழுந்து, பயத்தால் நடுங்கிச் சிணுங்கியது.

"தம்பிமாரே!.... இந்தக் காசுக் கட்டால் துரோகங்கள் நியாயப்பட மாட்டா!...

உங்கள் விசாரணை உண்மையைக் காணவில்லை..... உயிர் குடிக்க என்று விசாரணை செய்த அவன் உண்மையை உணர்ந்தான்...ஆனால், உயிர் காப்போம் என்று விசாரணை செய்த நீங்கள் உயிர் குடித்ததோடு, 'துரோகம்' என்ற சான்றிதழும் வழங்கி விட்டீர்கள்.... மெத்த நன்றி. கொண்டு வந்த அநுதாபத்தையும், துரோகத்துக்கான உங்கள் சன்மானத்

தொகையையும் எடுத்துக் கொண்டு போய் விடுங்கள்.... துரோகங்கள் எப்பொழுதும் நியாயப்படுவதில்லை!...." என்று கத்தியவாறு வீழ்ந்தாள், நிர்மலா.

ரேணுவும் அவள் காலடியில் கிடந்து கதறினாள்.

*

-1986-



## இவர்.....

- 1933 இல் யாழ். உடுப்பிட்டி மண்ணிற் பிறந்தவர். இளமையில் அநுராதபுரத்தில் வாழ்ந்தவர்.
- பிள்ளைப் பருவத்திலேயே எழுத்துத் துறையில் கால் பதித்தவர்.
- கல்வித் துறையில் 37 ஆண்டுகளுக்கு மேலாக அரச பணியிற் சேவையாற்றி ஓய்வு பெற்றவர்.
- மரபு இலக்கியத்திலும் ஆக்க இலக்கியத்திலும் முன்னோடியான படைப்பாளி.
- சமய - சிறுவர் இலக்கியங்களில் தேசிய - மாகாண விருதுகளும் பாராட்டுகளும், கௌரவமும் பெற்ற மூத்த எழுத்தாளர் - "இலக்கிய வித்தகர்."

**கொழும்பு -06**
**25.05.2008**

**- வைரமான்.**

"சங்கராபரணம்" தென்மயிலை, தெல்லிப்பழை, இலங்கை.